

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மாசி - பங்குனி
மார்ச் - 2019

மலர் 8 இதழ் 3

## பொருளடக்கம்



| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| Vedantic Prayer | 9 |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| திருக்குறள் நூற்றெட்டு | 14 |
| இராமாவதாரம் எதற்காக | 16 |
| ஸத் விஷய ஸங்கரஹம் | 18 |
| தமிழ் பாகவதம் | 19 |
| குணம் செழித்தால் குலம் செழிக்கும் | 22 |
| மகாபெரியவாவின் அறிவுரை | 25 |
| வேத மந்த்ரார்த்தங்கள் | 25 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 10 | 26 |
| வால்மீகி பிரதீபம் - 49 | 27 |
| புராணக்கதை | 29 |
| வேதாந்த ஸாரம் | 31 |
| பங்குனி மாத விசேஷ தினங்கள் | 33 |
| ஸபா ரஞ்ஜன சதகம் | 34 |
| பாராயண பக்கம் | 36 |
| த்ரிபுரஸுந்தரீ பாதத்ஸ்தவம் | 38 |
| பித்ரார்ஜிதம் | 39 |
| மகாபாரத சுருக்கம் | 41 |
| பாப புண்யங்கள் | 43 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்





# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



**வெளியிடுவோர் :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோஸ்தானம்

**அலுவலக முகவரி :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosathanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் விதேஹ முக்தி அடைந்து ஒரு வருடம் பூர்த்தியாகிறது. அவரை நினைக்காமல் இருக்க முடியவில்லை. எப்போதும் சிரித்தமுகம் எல்லாருக்கும் எப்போதும் தர்சனம் கொடுக்கும் பண்பு, லௌகீக விஷயங்களை ஒழுங்குபடுத்துதல், வைதிக மார்க்கத்தைப் பரப்புதல் இப்படி பல பணிகளை ஆர்வமுடன் செய்து வந்தவர் இன்று நம்மிடையே இல்லை. ஞானி மறைவுக்கு அழுதல் செய்யக்கூடாது. உண்மை ஆனால் ஒரு வெறுமை தட்டுகிறது. ப்ரம்மத்தோடு ஒன்றிவிட்டவரை குறித்து துக்கித்தல் கூடாது. இப்போது கூட அவர் இருந்த அறையில் உள்ள அவரது பொம்மை வடிவம் நம்மை ஆறுதல் செய்கிறது. மகாபெரியவருடன் இருந்து அவரிடம் பாடம்கேட்ட பெருமை யாருக்கு வரும்? அவர் பாக்யசாலி. அதே சமயத்தில் தனக்கென்று ஒரு பாணியைக்கொண்டு ஸ்ரீமடத்தை உயரத்தில் வைத்தவர். அதற்குகாரணம் அவரது ஸமுதாயப்பணிகளே.

கடும் விமர்சனங்களுக்கு இடையே இவைகளை செய்தார். எல்லா தரப்பு மக்களையும் நேசித்தவர். ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. அரசாங்கம் அவர்மீது பாய்ந்த நேரம். கலவையில் முகாமிட்டிருந்தார். சுனாமி ரூபத்தில் இயற்கை கோரதாண்டவம் ஆடியிருந்தது. அவரை தர்சிக்க நான் போன சமயம் ‘‘உங்களை துன்புறுத்தியதன் பலன் சுனாமியால் தமிழகம் பாதிக்கப்பட்டுள்ளது’ என்றேன். அதற்கு அவர் ‘‘அப்படி சொல்லாதே. தனிமனித பாதிப்பினால் பலகோடி அப்பாவி மக்கள் பாதிக்கப்படக் கூடாது. அவர்களது துயரத்தை துடைக்க வழிபார்’’ என்றார்கள்.

அதற்கு அவரே சில ப்ரமுகர்களைக் கூப்பிட்டு ஏற்பாடும் செய்து விட்டார். அவரது மனித நேயத்திற்கு இது ஒரு சான்று. இப்படி பலப்பல. இவைகள் வாழையடி வாழையாக வரவேண்டும் என்பது ஆஸ்தீகர்களின் அவா. இந்த ஆசைகள் அவரது சிஷ்யர் ஸ்ரீவிஜயேந்த்ர ஸரஸ்வதி மூலமாக நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

புதுப்பெரியவர்போலவே சிரித்தமுகம் கூரிய பார்வை, ஆழ்ந்த வேதாந்த அறிவு, தங்குதடையின்றி பேசும் பேச்சாற்றல், ஆழ்ந்த குருபக்தி, WIT என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதை நிரம்பப்பெற்றவர் பாலபெரியவர். தனது குரு நாதரிடம் உள்ள பக்தியின் காரணமாக அவரது ப்ருந்தாவனத்தில் பாரதத்தின் எல்லா தீர்த்தங்களையும் சேர்த்து அபிஷேகம் செய்தார். அவரது பணிகளை தொய்வில்லாமல் இன்றைக்கும் தொடர்ந்து செய்து வருகிறார். ஏனெனில் ஸனாதன தர்மத்திற்கு ORGANAISATION என்று ஒன்று கிடையாது. நல்லெண்ணம் கொண்ட மடாதிபதிகள் வழிகாட்டினால்தான்

உண்டு. இன்றைக்கு மக்களைத் திசை திருப்பும் நிகழ்ச்சிகள் நிறைய நடைபெறுகின்றன. அவைகளை முறியடித்து சாத்வீகமாக ஜயம்பெற ஸ்ரீமடம் போல் இருப்பவைகளால்தான் முடியும். ஏற்கனவே மகாஸ்வாமிகள் பாதைபோட்டுக் கொடுத்துள்ளார். ஸூத்ரஸ்யேவாஸ்தி மே கதி; என்று காளிதாஸர் கூற்றிற்கு இணங்க இப்படியே எல்லாம் தொடரவேண்டும்.

இவை வெற்றிபெற ஆஸ்தீக அன்பர்கள் அனைவரும் எந்த வேறுபாடும் பார்க்காமல் நம்மால் ஆன உதவிகளை செய்ய முன்வரவேண்டும். பூர்த தர்மமாகட்டும் வைதிக தர்மமாகட்டும் நம் ஆசாரத்திற்கு பங்கம் வராமல் மூன்று பெரியவர்கள் காட்டும் வழியில் நடப்போம். இதுவே நம் குருபக்தியின் அடையாளம். ஸ்ரீமடத்தின் பலம் என்று கூறிகொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

## பாபங்கள் வராமலிருக்க என்ன செய்யக் கூடாது ?

1. பிறர் உடுத்திய எந்த ஆடையையும் அணியக்கூடாது.
2. பிறர் அணிந்த காலணிகளை உபயோகிக்கக் கூடாது
3. பிறர் அணிந்த மலர் மாலையை அணியக்கூடாது
4. பிறர் படுத்த படுக்கையை உபயோகிக்கக் கூடாது.
5. பிறர் உபயோகித்த ஆசனத்தில் உட்காரக் கூடாது.
6. பிறர் மனைவியை மனத்தால் கூட தீண்டக் கூடாது.
7. பிறர் பொருளைத் திருடக் கூடாது.
8. பிறர் செய்யும் கொடையைத் தடுக்கக் கூடாது.
9. பிறர் சாபம் பெறக்கூடாது.
10. பிறர் சொத்தை அனுபவிக்கக் கூடாது.
11. பிறர்மனம் புண்படும்படி பேசக்கூடாது.
12. பிறர் தமது கடமையைச் செய்யும்படி விடக்கூடாது.
13. பிறர் விரோதத்தின் விளைவாக உருவாகும் போட்டி மனப்பான்மையைக் கொள்ளக் கூடாது.

***ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள்***

# கீதை பிறந்தது எதற்காக?

## பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



அடுத்தபடியாக **(2) அப்யாஸ :** என்பதும் ஒரு தாத்பர்ய லிங்கம். அதாவது ஒரு உபன்யாஸத்திலோ ஒரு நூலிலோ எந்த ஒரு விஷயம் அடிக்கடி திருப்பித் திருப்பி இரத விஷயங்களைவிட அதிகத் தடவை சொல்லப்படுகிறதோ அவ்விஷயமே, அந்த நூலுக்கோ உபன்யாஸத்திற்கோ முக்கிய தாத்பர்யமாகவுள்ளது என்று கொள்ளலாம்.

**(3) அபூர்வதா :** என்பது மற்றொரு தாத்பர்ய லிங்கம். ஒரு புஸ்தகத்தில் அநேக அத்தியாயங்களிருக்கும் போது முன் அத்தியாயங்களில் சொல்லப்படாத ஒரு புது விஷயம் ஒரு அத்தியாயத்தில் சொல்லப்பட்டால் அவ்விஷயமே அவ்வத்தியாயத்தின் தாத்பர்யமெனக் கொள்ளலாம். அவ்விதமே பிரத்யக்ஷப்ரமாணத்தினால் அறியக்கூடாத ஒரு விஷயம் வேதத்தில் (சப்தப்ரமாண்யம்) சொல்லப்பட்டிருந்தால் அவ்விஷயத்திலேயே வேதத்திற்கு தாத்பர்யமெனக் கொள்ளலாம்.

**(4) பலம் :** ஒரு நூலிலோ அல்லது பிரசங்கத்திலோ அநேக விஷயங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளில் ஒரு விஷயத்திற்கு மாத்திரம் அதனால் அடையும் பயன் இன்னதென சொல்லப்படுகிறது. மற்றவைகளுக்குப் பயன் சொல்லப்படவில்லை. அப்பொழுது எந்த விஷயத்திற்குப் பயன் சொல்லப்படுகிறதோ அவ்விஷயத்திலேயே அந்த பிரஸங்கத்திற்கோ, நூலுக்கோ, அத்தியாயத்திற்கோ தாத்பர்யம் எனக் கொள்ளலாம்.

**(5) அர்த்தவாதம் :** அநேக விஷயங்கள் சொல்லப்பட்டு விட்டது. ஒரு விஷயம் மாத்திரம் விசேஷமாக தோத்திரத்தால் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது; மற்றவைகள் அவ்விதமில்லை. அப்பொழுது அவ்வொரு விஷயத்திலேயே தாத்பர்யமென்று சொல்லலாம்.

**(6) உபபத்தி :** அநேக விஷயங்களை ப்ரஸ்தாபித்துவிட்டு ஒரு விஷயம் மாத்திரம் ஆதாரம், ருஜு முதலியவைகளால் நிரூபிக்கப்பட்டிருந்தால் அவ்விஷயத்திலேயே தாத்பர்யம் எனவும் கொள்ளலாம். இவ்வாறு தாத்பர்ய லிங்கங்களில் முதலாவது ஆரம்பமும் முடிவும் ஒன்றாயிருப்பது. (उपक्रमौपसंहार ऐकरूप्यम्)

கீதையின் ஆரம்பத்தில் अशोच्यानन्वशोचस्त्वम् (2.11) என்ற பகவானுடைய உபதேச வாக்கியத்திற்கு முன் அர்ஜுனன்

नहि प्रण्श्यामि मामापनुद्यात् ।
यच्छोकमुच्छोषणमिन्द्रियाणाम् ।। (२.८)

என்று சோகத்தினால் பிரலாபம் செய்கிறான். (2.7) என்றும் வேண்டிக் கொள்ளுகிறான். அதற்குப் பகவான் பதில் சொல்லும் போதே (2.11) என்ற மேற்சொன்ன வாக்கியம் காணப்படுகிறது. கீதையின் கடைசி உபதேச வாக்கியம்

सर्व धर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वां सर्व पापेभ्य: मोक्षयिष्यामि माशुच: ।। (१८.६६)

என்று முடிவடைகிறது. இவ்வுபக்ரம உபஸம் ஹாரங்களை நோக்கும் போது சோகம், அதாவது துக்கம் இல்லாத நிலையை அடைவிப்பதே கீதையின் தாத்பர்யம் என்பது வெளியாகிறது. அசோக (சோகமற்ற) நிலையே கீதையின் லக்ஷ்யம்.

ஒவ்வொரு மனித ஜீவனையும் பசி, பிணி, மூப்பு, வறுமை முதலிய இன்னல்கள் துன்புறுத்திக் கொண்டேயிருக்கின்றன. சோக மற்ற நிலையை ஒருவன் அடைந்து விட்டால் மேற்கண்ட எந்தத் துன்புறுத்தலும் அவனை எள்ளளவும் பாதிக்காது என்பது பகவானின் உபதேசத்தின் ஸாரம்.

அடைய வேண்டிய லாபங்களில் லாபத்திற்கு மேலான லாபம் வேறொன்றுமில்லையோ அதுவே சோகமற்ற நிலை. எதை அடைந்து விட்டால் மற்றொன்றை அடைய வேண்டுமென்ற எண்ணமே உதிக்காதோ அதுவே சோகமற்ற நிலை. அந்நிலையை அடைந்தவன் தாங்கமுடியாத துக்கம் நேரிடினும் எள்ளவும் அசைய மாட்டான்.

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिक तत: ।
यस्मिन् स्थितो न दु:खेन गुरुणापि विचाल्यते ।। (६.२२)

இவ்விதமான சோகமற்ற நிலையே மேற்சொன்ன ச்லோகத்தினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஜீவன்கள் எப்பொழுதும் வாடாத முகத்துடன் ஆனந்த நிலையிலேயே இருக்க வேண்டுமென்பது கீதையின் கருத்து.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## கடவுளை நம்பினார் கைவிடப்படார்

'கடவுளை நம்பினார் கைவிடப்படார்' என்பது ஒரு பழமொழி. சிறு குழந்தை முதலே இவைகளை அந்தக் குழந்தையின் மனதில் சிறுவயது முதல் எது படிகிறதோ, அதுதான் வயது முதிர்ந்த காலத்திலே கூட அவர்களுக்கு உதவிகரமாக இருக்கக்கூடியது. அதை வைத்துத்தான் 'ஐந்திலே விளையாதது ஐம்பதிலும் விளையாது' என்று கூறினார்கள்.

இந்தக் காலத்திலே மூன்று வயதிலே பள்ளிக்கு அனுப்பி விடுகிறார்கள். அந்தக் காலத்திலே ஐந்து வயதிலே ஆரம்பிப்பார்கள். அதை வைத்துத்தான் 'ஐந்திலே விளையாதது ஐம்பதிலும் விளையாது' என்று சொன்னார்கள்.

அதாவது ஐந்திலே எது மனதிலே புகுகிறதோ, சொல்லுகிறதோ அதுதான் ஐம்பதிலும் வாழ்க்கைக்கு உதவிகரமாக இருக்கும். இதை உணர்த்துவதற்காகத் தான் இப்படிச் சொல்லப்பட்டது. ஐந்து வயதிலே சொல்லக் கூடியவைகள் எல்லாம் உடனடியாக அவர்களுக்குப் பலன் அளிக்காது. பிற்காலத்தில் அவர்களுடைய வாழ்க்கைக்கு உதவிகரமாக இருக்கும். சின்னஞ்சிறு செடியை வைக்கிறோம். தண்ணீர் ஊற்றுகிறோம், பாத்தி கட்டுகிறோம், களையைப் பிடுங்கி எடுக்கிறோம், உரம் ஏற்றுகிறோம். அந்த சின்னச் செடி உடனே பலன் அளிக்காது. அதுவே ஒரு ஐந்து வருஷம், ஏழு வருஷம், பத்து வருஷம் கழித்து, பெரிய மாமரமாகி பெரிய கிளைகளோடு கூடி நிழலைக் கொடுக்கிறது. பழத்தைக் கொடுக்கிறது. இப்படிப் பல வகைகளிலும், உதவிகரமாக இருக்கிறது. அதைப் போலவே சிறு வயதிலே நாம் எதைச் செய்கிறோமோ, அதுதான் அவர்களின் வாழ்க்கைக்குப் பல ஆண்டுகள், பல காலம் உதவிகரமாக இருக்கும். இப்படித் தான் சிறு வயதிலேயே நல்ல பக்தியையும் புகட்ட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக பக்தி பிரஹ்லாதன் என்ற நல்லதொரு கதையைச் சொல்கிறோம்.

ஹிரண்ய கசிபு என்றாலே எல்லோருக்கும் தெரியும். அவன் ஒரு பெரிய அசுரன். அசுரன் என்றாலே உறுப்புகள் மூலமாகவே இன்பங்கள் நுகர்ந்து, அதிலேயே சந்தோஷப்படக்கூடியவன். கடவுள் உண்டு, ஆத்மா உண்டு, சொர்க்க லோகம் உண்டு என்றெல்லாம் நினைக்காமல், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று யார் இருக்கிறானோ, அவனைத்தான் அசுரன் என்று சொல்வார்கள்.

அப்படிப்பட்ட மகா அசுரனாக விளங்கியவன் ஹிரண்யகசிபு என்பவன்.

அவன் ஆரம்ப காலத்திலே, சிறு வயதிலே நல்ல தவம் செய்து, நல்ல வேள்வி செய்து, தன்னுடைய உடலெல்லாம் அறுத்து வேள்வியிலே போட்டு பிரம்ம தேவரையே எதிரில் வரவழைத்து வரம் கேட்கிறான். என்ன வரம் கேட்கிறான்? எனக்குப் பகலிலே சாவு வரக்கூடாது. இரவிலே சாவு வரக்கூடாது, மனிதராலே சாவு வரக்கூடாது, மிருகத்தாலே சாவு வரக்கூடாது, மனிதராலே சாவு வரக்கூடாது, வீட்டுக்குள்ளேயும் சாவு வரக்கூடாது, வீட்டுக்கு வெளியேயும் சாவு வரக்கூடாது. இப்படி சாவு வராமல் இருப்பதற்கு என்னென்ன வழிகள் உண்டோ அத்தனையும் சொல்லி எந்த வழியிலும் சாவு வரக்கூடாது என்று கேட்டுக் கொண்டான்.

என்னுடைய ரத்தமே வாழ்நாள் முழுவதும் பூமியிலே சிந்தக்கூடாது. இப்படி நான் வாழ வேண்டும் என்று பிரம்ம தேவனைப் பார்த்துக் கேட்கின்றான் ஹிரண்யகசிபு. ரஜோகுணமும், தபோ குணமும் பிரதானமாய் இருந்ததனால் புத்திமாறி இப்படிக் கேட்டுவிட்டான். தவத்திற்கு வரம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். பிரம்ம தேவனும், ‘கொடுத்தேன்’ என்றார்.

அதுமுதல் ஹிரண்யகசிபுவும், ஹிரண்யாக்ஷனும் மிகுந்த துவேஷம் உள்ளவர்களாக ஆகி, எங்கெல்லாம் வேள்வி நடக்குமோ, அங்கெல்லாம் நல்லவர்களுக்கெல்லாம் இம்சை செய்து, “கடவுளே கிடையாது, எல்லாம் நான்தான். நான்தான். விஷ்ணுவே நம: என்று சொல்லாதீர்கள். ஹிரண்யனாகிய என்னையே துதியுங்கள். நாராயணா என்று சொல்லாதீர்கள். சிவாய நம: என்று சொல்லாதீர்கள். என் பெயரைச் சொல்லுங்கள்” என்று தன் பெயரைப் புகழ்ந்தே நம: சொல்ல வேண்டும் என்கிற அளவுக்கு அவனுடைய பிரசாரம் பெரிதாக வலுத்து வந்தது.

இப்படி அந்த அசுரன் இருந்தாலும், அவனுடைய மனைவி மிகுந்த நல்லவள் கயாது என்று அவளுக்குப் பெயர். மூன்றெழுத்துப் பெயர் கயாது. அவள் சிறு வயது முதலே நல்ல பக்தியோடு இருந்தவள். இந்தக் கணவனோடு வாழ்ந்து அறத்திலிருந்து பிறழாமல், நல்ல நெறியோடு வாழ்ந்து கொண்டு வருகிறவள். அவள் எப்பொழுதும் கடவுள் பக்தியோடு இருந்தவள். தர்ம வழியிலே நிற்பவள். இந்த ஹிரண்யகசிபுவிற்கு எத்தனை தவறான பாதை உடையவனோ, அத்தனை நல்ல பாதையை உடையவள் அவள். அப்படிப்பட்ட நல்ல பெண்மணி. பகவானுடைய கதைகளையெல்லாம் திரும்பத், திரும்ப கேட்பாள். அப்படிக் கேட்டுக் கொண்டே இருக்கும் பொழுது அவள் கர்ப்பவதியானாள்.

(தொடரும்)

# VEDANTIC PRAYER

## SRUTIGITA

द्यूपतय एव ते न ययरन्तमनन्ततया
त्वमापि यदन्तराऽण्डनिचया ननु सावरणा : ।
स्वं एव रजांसि वान्ति वयसा सह यच्छ्र्द्र तय –
स्वयि हि फलन्यतन्निरसनेन भवन्निधनः ।। २९


द्यु पतय एव (चपि) even the lords or rulers of heavenly regions ते your व्यन्तं final or real nature न ययु: do not know (lit.reach) त्र्मनन्ततया being infinite त्वं त्र्मपि You, too यदन्तराण्डनिचया सावरंणा: are enveloped and conditioned by the universes contained within. (You) ननु is it not? खे इव as in the sky रर्जासि sand particles वन्ति whirls वयसा सह along with the movements of Time यत् because श्रुतय: (चपि) even the Vedas त्वयि in You फलन्ति end or fructify हि therefore त्र्मतत् – सिरसनेन by negating all which are not the atma भवन् निधना: You are (alone) indicated or implied.

29. *dyupataya eva te na yayur antam*
*anantataya*
*tvam api yad-antaranda - nicaya*
*nanu savaranah*
*kha iva rajamsi vanti vayasa saha*
*yacchrutayah*
*tvayi hi phalantyatan - nirasanena*
*bhavannidhanah*

O Lord, even the masters of the celestial regions do not understand Your glory, because of Your infinite nature. Being eternal, You are beyond the range of words and speech. Vast and wonderful is Your universe! With the passage of time, manifold universe! with the passage of time, manifold universes, conditioned by cause and effect and covered with the seven sheaths, whirl like particles of dust in the vast firmament - but all this takes place within You infinite bosom. You are indescribable. Even the Vedas which are the authority on spiritual truths only indicate Your glory - and that faintly - by denying what You are not. You, indeed are the fruition, the end, of the Vedas.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ ஸங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



இப்படி பல அருமையான கலைகள். ஆவுடையார் கோவில் தஞ்சை மாவட்டத்திலே ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே ஒரு கோவில் இருக்கிறது. அதாவது பிரிக்கப் படுவதற்கு முன்பு தஞ்சாவூர் மாவட்டம். தற்பொழுது மூன்று மாவட்டங்களாக பிரிக்கப் பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்திலே, கொடுங்கை, கட்டிடத்தின் ஓரப் பகுதியிலே சாய்வாக ஒன்று இருக்கும். அதற்கு கொடுங்கை என்று பெயர். மழைத்தண்ணீர் விழுந்தால், கட்டிய கட்டிடத்திலே விழாமல், இரண்டு அடி தள்ளி விழுவதற்கான ஒன்று. இப்பொழுது வீட்டில் shed எல்லாம் போடுகிறார்கள். ஜன்னல் பக்கத்திலே shed போடுகிறார்கள். அந்த மாதிரி ஒரு கொடுங்கை. அது கருங்கல்லிலே அமைந்து இருந்தாலும், மிகவும் மெல்லியதாக செய்யப்பட்டு, எதோ இங்கிலிஷ்காரர் வந்த போது தொட்டதிலே ஓட்டை விழுந்து விட்டது. அதாவது, அவ்வளவு அளவு பேப்பர் அளவுக்கு எவ்வளவு மெல்லியதாகச் செய்ய முடியுமோ செய்திருக்கிறார்கள்.

இவ்வளவு calculator இல்லை. இவ்வளவு மெஷின்கள் இல்லாத காலத்திலே, பெரிய பெரிய இன்ஸ்ட்ருமென்ட் உபகரணங்கள் இல்லாத நேரத்திலும் இவர்கள் இவ்வளவு அழகான கட்டிடம் கட்டி, நூலை வைத்து அளவு பார்த்து , நேரத்தை சூரிய ஒளியை வைத்து நேரத்தைக் கணித்து, இப்பொழுது என்ன மணி என்று ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை பார்க்கிறோம்-செல் போனிலோ, கடிகாரத்திலோ பார்க்கிறோம். அந்தக் காலத்திலே, சூரிய ஒளிஎங்கே விழுகிறது நடுவிலே விழுகிறதா, ஒரு பொருளை நேரே வைத்து, நிழல் அதன் மேல் விழுகிறதா. இல்லையா, அதைப் பொறுத்து காலை நேரம், மத்தியான நேரம், சாயந்திர நேரம் இதையெல்லாம் கணித்து, ஆராய்ச்சியின் மூலமாக, பயிற்சியின் மூலமாக, சோர்வற்ற, சோம்பலற்ற தன்மையின் மூலமாக, சுறுசுறுப்பின் மூலமாக, பொருளை வீணடிக்கக் கூடாது, நேரத்தை வீணடிக்கக் கூடாது அனைவரும்

சேர்ந்து பணி புரிய வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாக, இந்தியாவிலே பல முன்னேற்றங்களை அந்த காலத்திலே கொண்டு வந்து இருக்கிறார்கள்.

இன்றைக்கு பணம் இருக்கிறது, flight இருக்கிறது. எல்லாமே இருக்கிறது. அந்த காலத்திலே புறாவின் மூலமாக செய்தியை சொல்லி அனுப்பிய காலத்திலிருந்து, இந்த வளர்ச்சியை இந்தியாவிலே காணமுடியும். கல்வியில் கரையில்லா காஞ்சி என்பதாக இந்த ஊருக்கு ஒரு சிறப்பு. பெருமை. Great Learning Centre, சிறப்பான படிப்புக்கான இடம் இந்த காஞ்சிபுரம் நலந்தா, தக்ஷசீலா என்று நீங்கள் கேட்டு இருப்பீர்கள் கல்வி பாடத்திலே. அது போன்று காஞ்சீபுரத்திலே, கல்வி ஸ்தாபனங்கள் இருந்தன.

மனிதருடைய வாழ்க்கையிலே, கல்வி என்பது பலவிதத்திலேயும் நமக்கு உதவி செய்யக் கூடியது. படித்திருந்தால் பல விதத்திலேயும் நாம் பிறருக்கு உதவி செய்ய முடியும். ஆகவே, நமக்காகவும் கல்வி தேவை, பிறருடைய துயர் துடைப்பதற்க்காகவும் கல்வி தேவை, பிறருக்கு உதவி செய்வதற்காகவும், புதிய துறைகளிலே சாதிப்பதற்கும், புதிய துறைகளின் மூலமாக பொருளாதாரத்திலே வளர்ச்சி பெறுவதற்கும், பொருள் ஈட்டுவதற்கும், இந்த கல்வி என்பது பயன்படுகிறது. நமக்கு தொடர்ந்து புதிய புதிய கல்வி முறைகள் வந்து கொண்டிருக்கிறது. அந்த காலத்திலே தமிழ் படித்தால் போதும், இங்கிலீஷ் படித்தால் போதும், கணக்கு படித்தால் போதும் என்று இருந்தன. பிறகு நிறைய subject, option கள் வந்து கொண்டு இருக்கின்றன. அதற்கு தற்போது வாய்ப்பும் இருக்கின்றன.

புதிய படிப்பிற்கு opportunities-ம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. ஆகவே கல்வியிலே சாதிப்பதற்கு நிறைய இருக்கிறது. கல்வி என்பது புஸ்தகத்தை பார்த்து படிக்கும் கல்வியும் சரி, மனிதர்களை புரிந்து கொள்வதற்கு, மனிதர்களுடைய இயல்பை, மனிதர்களுடைய ஸ்வபாவத்தை, மனிதர்களுடைய குணாதிசியங்களை - சாதுவாக இருப்பார்களா, பொறுப்பாக இருப்பார்களா, அவசரப்படுவார்களா, அதிக வேலை செய்யாமல் இருப்பார்களா, தான் மாத்திரம் வேலை செய்வார்களா அல்லது குரூப் discussion சரியாக வருவார்களா-இப்படி ஒரு மனிதனை பற்றிய எடை போடுவதற்கும், மனிதர்களோடு சேர்ந்து பணி புரிவதற்கும், இந்தக் கல்வி என்பது முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அந்த உயரிய கல்வியை நீங்கள் பயின்று வருகிறீர்கள்.

இதைத் தொடர்ந்து பட்டப்படிப்புகள் எல்லாம் இருக்கின்றன. கல்வி என்பது தொழில் கல்வியாக இருந்தாலும் சரி, அது எழுதக் கூடிய கல்வியாக இருந்தாலும் சரி, கலை சம்பந்தப் பட்ட, அதாவது பாட்டு பாடுவது, ஓவியம் வரைவது, பூக்களை

கட்டுவது, இது போன்ற கலை சம்பந்தப்பட்ட படிப்புகளாக இருந்தாலும் சரி, வீடு கட்டுவது, மற்ற எலெக்ட்ரிகல்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் போன்ற தொழில் கல்வியாக இருந்தாலும், ஆராய்சிக் கல்வி, லேப் சம்பந்தப் பட்ட படிப்பு, ஆயுர்வேதம் படிப்பதற்கும், மெடிக்கல் படிப்பதற்கும், ஆராய்ச்சிகளை செய்வதற்கும், என்ன ஆராய்ச்சி -இந்த சாப்பாடு சாப்பிடலாமா, nurtrious, ரத்த வகைகள், இதைப் போன்று; அடுத்தது environment - மழை பெய்யுமா, காற்று அடிக்குமா, பூகம்பம் வருமா, வராதா, இது போன்று எல்லாம், இயற்கை பேரிடர் பற்றிய கல்வியாக இருந்தாலும் சரி;

மொத்தத்திலே கல்வி என்பது மிகப் பரந்த விஷயம். விரிந்த விஷயம். ஆகவே, கல்வியிலே கவனம் கொண்டு, இன்றைய பெற்றோர்கள், parents, அவர்கள் படித்ததை விட, தங்களுடைய குழந்தைகள் மேலும், அதிகமாகவும் படிக்க வேண்டும், சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக, அன்புடன் அவர்கள் நிறைய செலவும் செய்கிறார்கள், நிறைய எதிர்பார்க்கவும் செய்கிறார்கள். (expectations) இருக்கின்றன. அதே போன்று ஊக்குவிக்கிறார்கள். encouragement - ம் இருக்கிறது. அவர்கள் நடந்து சென்று பள்ளிக்கூடம் சென்றார்கள் என்றால், குழந்தைகள் ஆட்டோவில் செல்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள், பஸ்ஸிலே செல்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். இது போன்று பெற்றோர்கள் தரப்பிலிருந்து தங்களுடைய குழந்தைகள் நல்ல படிப்பு படிக்க வேண்டும் என்பதற்காக பெரும் முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள்.

இப்படி ஆசையுடனும், எதிர்பார்ப்புடனும், ஆதரவுடனும், இந்த கல்வி முறையில் பல லட்சக்கணக்கானவர்கள் பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறார்கள். அந்தக் காலத்திலே விவசாயம் செய்தார்கள். தொழில்கள் செய்தார்கள். திண்ணைப் பள்ளிக்கூடம். இவ்வளவு வசதி கிடையாது - ஒரு திண்ணையில் போய் -(fee structure) அரிசி, பருப்பு, கறிகாய் எல்லாம் முடிந்த அளவு வாத்தியாருக்கு கொடுப்பார்கள். அவர் பாடம் சொல்லுவார். அதிலே சில வசதிகள். காலை 3.55க்கு வரச் சொல்லி, விடிய காலையில் எழுப்பி விட்டு, பாடம் படிப்பார்கள். காலை வேளையில் பாடம் படித்தால் அந்த concentration ஒருமுகத்தன்மை என்பதானது சிறப்பாக இருக்கும். வேற ஞாபகம் எதுவும் இருக்காது. distraction. இடையூறுகள் எதுவும் இருக்காது என்கிற அபிப்ராயத்தோடு காலையிலே படிப்பார்கள். இப்படியெல்லாம் இருந்த கல்வி முறை, இன்றைக்கு நிறைய வளர்ந்து இருக்கிறது. நீங்கள் எல்லோரும் நல்ல முறையிலே படித்து, மதிப்பெண்களையும் பெற வேண்டும், மதிப்பையும் பெற வேண்டும். மதிப்பெண்கள் என்பது நாம் படிக்க வேண்டிய மேல் படிப்புக்கான ஒரு சான்றிதழ். தொண்ணூறு மார்க் வாங்கினால் இது, தொண்ணூற்று ஐந்து வாங்கினால் இப்படி, நூறு மார்க் வாங்கினால் எப்படி, இந்த first குரூப், செகண்ட் குரூப், third குரூப் எல்லாம் இருக்கிறது. எந்த காலேஜில் சீட் கிடைத்தால் மதிப்பு என்று இந்த

மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள், உழைத்துப் படிப்பார்கள், வாத்தியார் சொல்லுகிறபடி கேட்டுப் படிப்பார்கள். இந்த பள்ளிக்கூடத்தில் இருந்து வந்தால் அமைதியாகப் படிப்பார்கள். இதெல்லாம் இருக்கிறது.

ஆகவே, நல்ல குணாதிசியங்களுடன், அன்புடன், பண்புடன், நீங்கள் பழகி, நன்றாகப் படித்து, தேர்ச்சி பெற்று, நீங்கள் மேற்படிப்பிலேயும் நல்ல முறையிலே சாதித்து, சமுதாயத்திலேயும், குடும்பத்திலேயும், சிறப்பாகவும் பொறுப்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். படிப்பு என்பது முக்கியமான தருணம் இளைஞர்களுக்கு. அதற்கு பிறகும் படிப்பது என்பது இருக்கிறது. புதிது புதிதாக என்ன வருகிறதோ, அன்றைக்கு என்ன புதிய விஞ்ஞானம் வருகிறதோ, அதையும் படித்து, நல்ல பக்தர்களாக, இறைபக்தியை என்றைக்கும் விடாமல், எந்த ஊருக்கு நீங்கள் சென்றாலும் பக்தியை விடாமல், அவரவர்களுக்கு தெரிந்த ஸ்லோகங்களை எல்லாம் சொல்லி, உங்களுக்கு பழக்கமான கோவில்கள் எல்லாம் சென்று, பக்தி மார்கத்திலேயும் நீங்கள் சிறந்து விளங்கி, மேன்மேலும் நீங்கள், இந்த சங்கரா பள்ளிக்கூட மாணவர்களும், மாணவிகளும் விஞ்ஞானம், சமுதாயம், பக்தி, நல்ல கலை நயம், கலைநயம் என்பதானது வாழ்க்கையிலே நம்மை பதற்றம் இல்லாத நிலையிலே, tension இல்லாத நிலையிலே, நல்லது எங்கிருந்தாலும் தெரிந்து கொள்வது, நான்தான் நல்லவன் என்றில்லாமல், நாமும் நல்லவராக இருக்க வேண்டும், பிற நல்லது எங்கு இருக்கிறதோ, எந்த ஊரிலே, எந்த நல்லது இருக்கிறதோ, அந்த நல்லதை தெரிந்து கொண்டு, எல்லாவற்றையும், ஒரு வண்டானது, ஒரு பூவிலே இருக்கக் கூடிய essence சாரத்தை கிரகிக்கும்.

அதெல்லாம் வைத்துத் தான் சென்ட் scent எல்லாம் பண்ணுகிறார்கள். அதாவது எந்த மனிதர்களிடத்து, எந்த ஊரிலே, நாம் எதை தெரிந்து கொள்ள வேண்டுமோ அந்த விஷயத்தை தெரிந்து கொண்டு, நீங்கள் சிறந்து விளங்குவதற்கு முயற்சியையும் பிரார்த்தனையும் செய்ய வேண்டும்.

ஹரஹர நமப் பார்வதி பதயே , ஹர ஹர மகா தேவா

தென்னாடு உடைய சிவனே போற்றி

என்னாட்டவருக்கும் இறைவா போற்றி.



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான “£
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

## 75. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கும் உடையானாம் வேந்தர்க் கொளி

வேந்தர்க்கு = அரசர்க்குள், கொடை = வேண்டுவோர்க்கு வேண்டுவென கொடுத்தல், அளி = சிறந்தோர்க்குப் பரிசு வழங்குதல், செங்கோல் = நேர்மையான ஆட்சி, குடியோம்பல் = தளர்ந்த குடிகளைக் காத்தல், நான்கும் = இந்நான்கினையும், உடையான் = உடையவன், ஒளி = சிறந்தவன், ஆம் = ஆவான்.

கொடை, அளி இவற்றிற்கு உள்ள மாறுபாடு யாதெனின், பிறர் வேண்டக் கொடுத்தலைக் கொடை என்றும், பிறர் வேண்டாது இருக்க அவரைப் போற்றிக் கொடுத்தலை அளி என்றும் கூறலாம். செங்கோன்மை என்ற பொருளில் செங்கோல் என்பது வழங்கப்பட்டது. குடியோம்பல் என்னுமிடத்து குடி தளர்ந்த குடியையே குறிக்கும். இவ்வாறே மக்கண் மெய்தீண்டல் என்ற குறளில் மக்கள் தம்மக்களையே குறித்தல் காண்க.

தளர்ந்த குடிகள் யார் எனின், அவர், விதவை, அனாதையர், அங்கஹீனர், தரித்திரர் முதலானவர் என்றும் மகாபாரதம் ஆதிபர்வம் 48வது அத்யாயம் 11- வது சுலோகமும், ஆதிபர்வம் 227வது அத்யாயம் 126வது சுலோகமும் கூறுகிறது. பாலன், வ்ருத்தன், ரோகி, வ்யசனி, அனாதை முதலியோரை அரசன் போற்ற வேண்டும் என்று அர்த்த சாஸ்த்ரம் கூறுகிறது.

## 76. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும் கண்ணென்ப வாழு முயிர்க்கு

எண் என்ப = எண் எனக் கூறப்படுவன, ஏனை = மற்று, எழுத்து என்ப = எழுத்து எனக் கூறப்படுவன, இவ்விரண்டும் = இவ்விரண்டினையும், வாழும் உயிர்க்கு = வாழ்க்கையில் உள்ள மக்கட்கு, கண் = கண்கள், என் = என்று கூறுவர் (பெரியோர்)

எண் என்பது லக்ஷண நூல்களையும், எழுத்து என்பது லக்ஷ்ய நூல்களையும் குறிக்கும். லக்ஷ்ய நூல்கள் கலைகள் ஆகும். லக்ஷண நூல்கள் அவற்றை ஆராயும் கருவி நூல்கள் ஆகும்.

"எண்" என்பது இருமையின்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது. எழுத்து என்பது நாம் கற்கும் கல்விக்கு த் துணையுறுப்பாகிய எழுத்து என்றாயிற்று என்பர் காலிங்கர். எண் என்பது கணிதம் என்பர் பரிமேலழகர். "எண்ணித் துணிக" (குறள் 467) போன்ற விடத்து எண்ணுதல் என்பதற்கு ஆராய்தல் என்ற பொருள் இருத்தலின் எண் என்பதற்கு ஆராய்ச்சி நூல்களாய சாஸ்த்ரங்கள் எனப் பொருள் கொள்ளலாம். எழுதல் என்பதற்கு மணங்கிளர்தல் என்ற பொருள் "ஔவையாளை யுருத்தெழுந்தன்று (புற.வெ. 3.2)" போன்ற விடங்களில் இருப்பதால் மனக்கிளர்ச்சியால் தோன்றுவதை எழுத்து எனக் கூறுடம். அவ்வாறாயின் கலைகள் எல்லாம் எழுத்தின் பாற்படும்.

கண் என்பது இயற்கையாய் பன்மை பெயர் என்றும் ஒருமையாகக் கொள்ள வேண்டின் அதற்குத் தகுந்த அடைமொழியையோ, வினை முற்றையோ வழங்க வேண்டும் எனவும் தொல்காப்பியத்தால் அறியப்படுகின்றது. அதனைப் பன்பை கூட்டிய சினைநிலைக்கிளவி என்பர் தொல்காப்பியர். "எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும் - எண்ணெழுத்திகழேல்" என்பது ஔவையார் வாக்கு.

## 77. கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
## புண்ணுடையர் கல்லா தவர்

கற்றோர் = படித்தவரே, கண் = கண்களை, உடையார் என்பவர் = என்று கூறப்படுவர்; கல்லாதவர் = படியாதவர், முகத்து = முகத்தில், இரண்டு புண் = புண்களை உடையர் (ஆவர்)

ஒரே பொருளை பலர் பார்க்கும் போது, ஒவ்வொருவர்க்கும் உண்டாகும் மனநிகழ்ச்சி வெவ்வேறாயிருக்கின்றது. நன்கு கற்றவர்களுக்கு சிறந்த எண்ணம் உண்டாகிறது; கல்லாதவர்க்குத் தீய எண்ணங்கள் உண்டாகின்றன. அக்காரணம் பற்றியே கண்கள் நல்லோரின் நன்மைக்கும், தீயோரின் துன்பத்திற்கும் காரணமாகின்றன. வித்யைக்குத் தக்க கண் இல்லை என மகாபாரதம் சாந்திபர்வம் 277வது அத்யாயம் 35வது சுலோகம் கூறுவதை நோக்கி, "ஞானக்கண் ணுடைமையிற் கற்றார் கண்ணுடையர்" எனப் பரிமேலழகர் கூறினர். ஆனால் இக்குறள் ஊனக்கண்களைப் பற்றியே கூறுகின்றன என்பதே பொருந்தும்.

# இராமாவதாரம் எதற்காக ?

இராமாயணம் சீனிவாசன்

*அபிராமே மஹாதேஜா*
*மம மா தா யசஸ்வினீ*
*வன்யைர் உபாஹரத் பூஜாம்*
*பூஜாம் பூஜார்ஹா ஸர்வதேஹினாம் । 5*

புகழ் பெற்ற என் தாய் உடல் படைத்தை யாவராலும் பூஜிக்கத்தக்க இந்த ராமனை எல்லாவித பொருள்களைக் கொண்டு முறைப்படி பூஜித்தார்களா?

*அபி ராமாய மஹாதேஜா யத்$_3$*
*வ்ருத்தம் தத் புராதனம் ।*
*மம மாதுர் மஹாதேஜோ*
*தேவேன துர் அனுஷ்டிதம் ।। 6*

*மிகுந்த ஒளிபடைத்த என் தாய் தேவேந்திரனுடன் செய்யத் தகாததை செய்த அந்த பழைய கதையை தாங்கள் ராமனிடம் சொன்னீர்களா?*

*அபி கௌசிக பத்ரம் தே*
*கு$_3$ருணா மம ஸங்க$_3$தா ।*
*மம மாதா முனிச்ரேஷ்ட$_2$*
*ராம ஸந்ததரிசனாதித: ।। 7 ।।*

*விச்வாமித்ரர் என்று அழைக்கப்படுவதற்கு முன்பு அவர் பெயர் கௌசிகர். அந்த பெயரிலேயே சதானந்தர் அவரை அழைக்கிறார்.*

*கௌசிகரே தங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். முனிவர்களில் சிறந்தவரே. ராமனை தரிசித்ததால் தூய்மையாக்கப்பட்ட என் தாய் என் தந்தையும் குருவுமானவுடனே சேர்ந்தார்களா?*

*அபி மே குருணா ராம: பூஜித: குசிதாத்மஜ: ।*
*இஹாகதோ தேஜா : பூஜாம் ப்ராப்ய மஹாத்மன: ।। 8 ।।*

என் குருவும் தந்தையுமானவரால் ராமன் பூஜிக்கப்பட்டாரா கௌசிகரே. மிகுந்த ஒளியுடன்கூடிய ராமன் பூஜையை ஏற்றுக் கொண்டு இங்கு வந்துள்ளாரா?

அபி சாந்தேன மனஸா
குருர்மம குசிசாத்மஜே ।
இஹாக₃தேன ராமணே
பூஜிதேன அபிவர்த்த: ।। 9 ।।

அமைதியான உள்ளத்துடன் எனது குருவும் தந்தையுமானவர் மிகுந்த அமைதியான மனதுடன் இங்கு வந்துள்ள ராமனால் அபிவாதனம் செய்து பூஜிக்கப்பட்டவரா?

அபிவாதனம் என்பது தன்னை தன் கோத்திரம், வேதம், ரிஷி பரம்பரை, கிடைக்கப்படும் சூத்ரம் ஆகியவற்றைக் கூறி வணங்கி அறிமுகப்படுத்திக் கொள்ளுதல்.

இந்த கேள்விகளிலிருந்து தன் தாயின் நடத்தையினால் கோபித்து சபித்துவிட்டு பிரிந்துபோன தந்தையையும், தாயையும் சேர்த்து வைக்க முடியாத மகனின் மனநிலை எப்படி வேதனைப்பட்டிருக்கும் என்பது தெரிந்து கொள்ளலாம். தாயும், தந்தையும் சேர்ந்து விட்டார்கள் என்ற செய்தி எவ்வளவு மகிழ்ச்சியளித்திருக்கும் என்பதையும் ஊகிக்க முடிகிறது.

ஆக பிரிந்த தாய் தந்தையர்களால் சோகத்தில் ஆழ்ந்திருந்த சதானந்த முனிவரின் மனதில் தாய் தந்தையரை சேர்த்து வைத்ததில் மகிழ்ச்சி கிட்ட செய்வதாகவும், பகவான் தசரதர் மகனாக தன்னை நினைத்துக் கொண்டார் என்று பொருள் கொண்டாலும் அது மிகையாகாது.

பகவான் தன்னிடத்தில் நம்பிக்கை கொண்டு ஒருவர் ஒரு செயலை பகவான் செய்வார் என்று கூறினாரேயானால் அதனை பகவான் கட்டாயம் நிறைவேற்றி வைப்பார் என்பதற்கு இந்த நிகழ்ச்சி சான்று.

ராமன் ஜனகரிடம் இருந்த சிவபெருமான் வில்லை வளைக்க அது நடுவில் முறிந்து உடைந்து விடுகிறது. அயோத்தியில் இருந்து தசரதன் வரவழைக்கப்பட்டார். சீதைக்கும், ராமனுக்கும், லக்ஷ்மணனுக்கும், ஊர்மிளைக்கும் ஜகனரின் தம்பி குசத்வஜனின் மகள்களான மாண்டவியை பரதனுக்கும், ச்ருத கீர்த்தியை சத்ருக்னனுக்கும் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

(தொடரும்)

# ஸத் விஷய ஸங்கரஹம்

### उपनिषद: உபநிஷத்துக்கள் 108

| | |
|---|---|
| ईशावास्योपनिषत् | ஈசாவாஸ்யோபநிஷத் |
| केनोपनिषत् | கேநோபநிஷத் |
| कठतोपनिषत् | கடோபநிஷத் |
| प्रश्नोपनिषत् | ப்ரச்நோபநிஷத் |
| मुण्डकोपनिषत् | முண்டகோபநிஷத் |
| माण्डूक्योपनिषत् | மாண்டுக்யோபநிஷத் |
| तैत्तिरीयोपनिषत् | தைத்திரீயோபநிஷத் |
| ऐतरेयोपनिषत् | ஐதரேயோபநிஷத் |
| छान्दोग्योपनिषत् | சாந்தோக்யோபநிஷத் |
| बृहदारण्यकोपनिषत् | ப்ருஹதாரண்யகோபநிஷத் |
| श्वेताश्वतरोपनिषत् | ச்வேதாச்வதரோபநிஷத் |
| ब्रह्मबिन्दूपनिषत् | ப்ரம்ஹபிந்துபநிஷத் |
| कैवल्योपनिषत् | கைவல்யோபநிஷத் |
| जाबालोपनिषत् | ஜாபாலோபநிஷத் |
| हंसोपनिषत् | ஹம்ஸோபநிஷத் |
| अरुणिकोपनिषत् | ஆருணிகோபநிஷத் |
| गर्भोपनिषत् | கர்ப்போபநிஷத் |
| नारायणेपनिषत् | நாராயணோபநிஷத் |
| महानारायणोपनिषत् | மஹாநாராயணோபநிஷத் |
| परमहंसोपनिषत् | பரமஹம்ஸோபநிஷத் |
| बह्मोपनिषत् | ப்ரம்ஹோபநிஷத் |
| अमृतनादोपनिषत् | அம்ருதநாதோபநிஷத் |
| अथर्वशिर उपनिषत् | அதர்வசிர உபநிஷத் |
| अथर्वशिखोपनिषत् | அதர்வசிகோபநிஷத் |
| मैत्रायण्युपनिषत् | மைத்ராயணீ உபநிஷத் |
| कौषीतकीब्रह्मणो पनिषत् | கௌஷீதகீ ப்ராம்ஹணோ பநிஷத் |

| | |
|---|---|
| बृहत्जाबालो पनिषत् | ப்ருஹத் ஜாபாலோபநிஷத் |
| नृसिंहपूर्वतापिन्यु पनिषत | ந்ருஸிம்ஹபூர்வதாபிநீ உபநிஷத் |
| नृसिंहोत्तरतापिन्यु पनिषत | ந்ருஸிம்ஹோத்தரதாபிநீ உபநிஷத் |
| कालाग्रिरुद्रोपनिषत | காலாக்நிருத்ரோபநிஷத் |
| मैत्रेय्युपनिषत | மைத்ரேயீ உபநிஷத் |
| सुबालोपनिषत | ஸுபாலா உபநிஷத் |
| क्षुरिकोपनिषत | க்ஷுரிகா உபநிஷத் |
| यन्त्रिकोपनिषत | யந்த்ரிகோபநிஷத் |
| सर्वसारोपनिषत | ஸர்வஸாரோபநிஷத் |
| निरालंबोपनिषत | நிராலம்போபநிஷத் |
| शुकरहस्योपनिषत | சுகரஹஸ்யோபநிஷத் |
| वज्रसूचिकोपनिषत | வஜ்ரஸூசிகோபநிஷத் |
| तेजोबिन्दूपनिषत | தேஜோபிந்துபநிஷத் |
| नादबिन्दूपनिषत | நாதபிந்துபநிஷத் |
| ध्यानबिन्दूपनिषत | த்யானபிந்துபநிஷத் |
| ब्रह्मविद्योपनिषत | ப்ரம்ஹவித்யோபநிஷத் |
| योगतत्वोपनिषत | யோகதத்வோபநிஷத் |
| आत्मबोधोपनिषत | ஆத்மபோதோபநிஷத் |
| नारदपरिव्राजकोपनिषत | நாரதபரிவ்ராஜகோபநிஷத் |
| त्रिशिखब्राह्मणोपनिषत | த்ரிசிகப்ராம்ஹணோபநிஷத் |
| सीतोपनिषत | ஸீதோபநிஷத் |
| योगचूडामण्युपनिषत | யோகசூடாமணி உபநிஷத் |
| निर्वाणोपनिषत | நிர்வாணோபநிஷத் |

(தொடரும்)

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

34. ப்ருகு, வஸிஷ்டர், ச்யவனர், கௌதமர், மேதா, அதிதி, தேவலர், தேவராஜன், இராமன், விச்வாமித்ரர், ம்ருகண்டு புத்ரன் மார்கண்டேயர், பிப்பலாதர் முதலியோர் பகவத் குணானுபவத்தில் ஈடுபட்டவர்கள்.

35. யோகேச்வரர்களான வ்யாஸர், பராசரர், சுகர், ஜாபாலி, ஜன்னு போன்றவர்களும், எல்லா முனிவர் கூட்டமும் தங்கள் மனைவி, மக்கள், சிஷ்யர்கள் தங்களைச் சார்ந்த பெண்கள் எல்லோரும் ஸ்ரீமத் பாகவதம் கேட்க வயப்பட்டு வந்தனர்.

36. எனவே, எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவத கதை போற்றப்பட வேண்டும். அந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஹரியாம் விஷ்ணுவின் இதயத்தில் இடம் பெறலாம்.

37. வேதங்கள், உபநிடதங்கள் இவைகளின் ஸாரத்திலிருந்து தோன்றியதே ஸ்ரீமத் பாகவதம் கதை. எனவே, தான் உடனடியாகப் பலன் தருவதில் அதிக உத்தமமாக ஸ்ரீமத் பாகவதம் ஒளியுடன் விளங்குகிறது.

38. கரும்பின் இடையில் இனிய சர்க்கரை ரஸம் இருப்பது போல, ஸ்ரீமத் பாகவதத்தில் ஞானம், பக்தி, வைராக்யம் இவைகளை நிலைநிறுத்துவதற்கான செய்திகள் உள்ளன.

39. வேதங்கள், சாஸ்த்ரங்கள், பலவகை புராணங்கள் இவைகள் ஏதோ வகையில் பிரமிப்பை உண்டாக்குபவைகள். ஆனால் ஸ்ரீமத் பாகவதம் என்ற ஒரே சாஸ்திரம் தான் மனிதப் பிறவியின் மோக்ஷம் பற்றி உரக்கச் சொல்கிறது.

40. எந்த வீட்டில் ஸ்ரீமத் பாகவதம் கதை நடைபெறுகிறதோ, அந்த வீட்டில் வசிப்பவர்களின் பாபங்களைப் போக்கும் புண்ணிய தீர்த்தம் அந்த வீடு.

41. ஆயிரம் அசுவமேத யாகங்கள் நூறு வாஜபேயி யாகங்கள் இவைகள் எல்லாம் சுகப், பிரம்மத்தால் சொல்லப்பட்ட ஸ்ரீமத் பாகவதம் அளிக்கும் பயனில் பதினாறில் ஒரு பங்கிற்குச் சமமாகாது.

42. தபத்தில் சிறந்த ஸௌனகாதி முனிவர்கள் "உலகில் மனிதர்கள் ஸ்ரீமத் பாகவதத்தை நன்கு கேட்காத வரையில் கர்மாவை அடியொற்றி வரும் பாபங்கள் இந்த சரீரத்தைப் பாதிக்கத்தான் செய்யும்." அனைத்து பிணிகளுக்கும் காரணமான

முற்பிறவி பாபங்கள் ஸ்ரீமத் பாகவதம் கேட்பதனால் இல்லாமல் போய்விடும்.

43. கங்காஸ்னானம், கயாஸ்னானம், காசிஸ்னானம், புஷ்கர நீராடல் ப்ரயாகையில் தீர்த்தமாடுதல் இவைகள் சுக சாஸ்திரமான ஸ்ரீமத் பாகதக்கதைக் கேட்பதனால் உண்டாகும் பயனுக்கு ஈடாகாது.

44. ஸ்ரீமத் பாகவதத்தில் பாதி ச்லோகமோ அல்லது கால் ச்லோகமோ படியுங்கள், படியுங்கள். நீங்களே படியுங்கள். இம்மை, மறுமை, உயர்நிலை விரும்பினால் அவசியம் படியுங்கள்.

45. வேதங்கள், காயத்ரி , புருஷஸூக்தம் இம்மூன்றும் ஸ்ரீமத் பாகவதமும் பகவானின் பன்னிரண்டு எழுத்து மந்திரமான ஓம் நமோ பகவதே வாஸூதேவாய என்பதில் தான் மையங்கொள்ளும்.

46. எவன் ஒருவன் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைப் பொருளோடு சொல்கிறானோ, அவன் பல பிறவிகளில் செய்த பாபங்களிலிருந்து விடுபடுகிறான். இதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

47. எவன் ஒருவன் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தை பாதி ச்லோகமோ அல்லது கால் ச்லோகமோ படிக்கிறானோ அவன் ராஜசூயம், அசுவமேத யாகம் செய்த புண்ணியத்தை அடைகிறான்.

48. எவன் ஒருவனால் அந்திம காலத்தில் சாஸ்திரமான ஸ்ரீமத் பாகவதம் கேட்கப்படுகிறதோ அவனுக்கு எம்பெருமான் கோவிந்தன் எல்லா நலன்களையும், வளங்களையும் தந்து தன் உலகமாம் ஸ்ரீ வைகுண்ட உலகத்தையும் தருகிறான்.

49. தபங்களினாலோ, யோகங்களினாலோ, ஸமாதி நிலையாலோ கிடைக்காத பலன்கள் ஸ்ரீமத் பாகவதம் ஏழுநாள்கள் கேட்பதனால் அனாயாசமாக அடையலாம்.

50. மூடர்களை (உள்ளறிவை தாங்களாகவே மறைத்துக் கொண்டவர்கள்) கலியுகம் உண்டாக்கும். அது வந்து விட்டது. அதன் விளைவால் இயல்பாகவே நற்குணங்கள் உடையவர்கள் கூட கொடியவர்களாகப் போகிறார்கள்.

51. எனவே ஏழு நாட்கள், ஸ்ரீமத் பாகவதம் கேட்கப்பட வேண்டும். மற்ற ஸாதனங்களான யக்ஞாதி கர்மாக்களை (நித்ய கர்மானுட்டானங்களை அல்ல விசேஷ ஹோமங்கள் வேள்விகள் இவைகளை) விட்டு விட்டு கலியுகத்தில் இந்த தர்மம் அனுஷ்டிக்க வகுக்கக்கப்பட்டுள்ளன.

52. எல்லா உலகங்களிலும் தனம் இல்லாதவனும் கூட தனம் உள்ளவனே. அவனது இதயத்தில் ஹரியிடம் பக்தி ஒன்று மட்டும் இருக்குமானால் பகவானும் பக்தியில் கட்டுப்பட்டவனாய் தன் நிஜ உலகமாம் வைகுண்டம் விட்டு அவர்கள் இல்லத்தில் சரீரமாம் வீட்டில் ஆத்மபந்துவாக இடம் பெற்று வருவான்.

53. பாபங்களையே எப்பொழுதும் செய்பவர்களாய், கோணல் புத்தி உடையவர்களாய், தீய ஒழுக்கங்களில் செல்பவர்களாய், கோபம் எனும் தீயால் பீடிக்கப்பட்டவர்களாய் காமாந்தக்காரர்களாய் இருப்பவர்கள் கூட இந்த ஸ்ரீமத் பாகவதத்தை ஏழு நாள்கள் கேட்பதனால் புனிதராகி விடுகிறார்கள்.

54. உண்மையே இல்லாதவனாய், தாய் தந்தையரை இகழ்பவனாய், வேட்கை, துயரம் இவைகளால் ஆச்ரம தர்மங்களை (பிரம்மசர்யம், க்ரஹஸ்தாஸ்ரமம், வானப்ரஸ்தம் ஸந்யாஸம்) விட்டவனாய் வாழ்பவனும் இந்த ஸ்ரீமத் பாகவத பாராயணத்தை பலகாலும் செய்து புனிதமாகி காப்பாற்றப்படுவார்கள்.



# குணம் செழித்தால் குலம் செழிக்கும்

## புதுக் கக்ஷிகள் அவசியமா?

நமது நாட்டில் இப்பொழுது எவ்வளவோ கக்ஷிகள் கிளம்பியிருக்கின்றன. கிளம்பியிருக்கின்றன என்று சொல்வது கூடத் தவறு. வெளியிலிருந்து வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொல்ல வேண்டும். ஜனநாயகக் கக்ஷி (democracy), பொதுவுடமைக்கக்ஷி (Socialism), பலாத்காரப் பொதுவுடமைக்கக்ஷி (Communism), சுயமரியாதைக் கக்ஷி (Self Respect), ஆசார சீர்திருத்தக்கக்ஷி (Social reform party) முதலியன. இவைகளெல்லாம் எதற்காக? மனித ஸமூகத்திற்கு அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. அவைகளை நிவர்த்திக்க, இதுதான் வழி, இதுதான் வழி என்று ஒவ்வொரு கூட்டத்தாரும் பிரச்சாரம் செய்து ஆள் சேர்த்து வருகிறார்கள். பழைய நாட்களில், மனிதன் எக்காலத்திலும்,--எக்காலத்திலும் என்றால் மரித்த பிறகும்,--சாச்வதமாக பாவமோ கஷ்டமோ இல்லாமல் குறைவற்ற ஆனந்தமாக இருக்க, சாந்தம் நிறைந்த ஞானிகளால் வகுக்கப்பட்ட ஸமயங்கள் வழிதேடின. இக்காலத்து இப்புதுக் கக்ஷிகளோ, ''செத்தபிறகு எப்படிப் போனாலென்ன! பாவமாவது புண்யமாவது! இப்பொழுது செய்யும் பாவபுண்யங்கள் எப்பொழுதாவது அனுபவித்தே தீரவேண்டும், அனுபவியாமல் ஜரிக்காது என்பதெல்லாம் கட்டுக்கதை'' என்று பிரச்சாரம் செய்துகொண்டு, சாவதற்குள் உள்ள அற்பகாலத்தில், மனிதனுடைய ஸௌக்யத்தைத் தேடுவதே கார்யம். மனிதன் சாசவதமாக ஸௌக்யமாய் இருப்பதைப்பற்றிப் பேசவே வேண்டாம் என்ற கொள்கையுடனேயே பிரச்சாம் செய்து வருகின்றன.

எக்காலத்திலும் உண்மையான சுகத்தை மனிதன் அடையவேண்டும். அதுவே உண்மையான சுகம்; மற்றவை போலி சுகம்; மற்றவை போலி சுகம் என்பது ஒருபுறமிருக்கட்டும். மரிக்கும் வரையில் இவ்வுலகத்திலேயே எல்லா மனிதர்களையும் ஒரு கஷ்டமுமின்றி நிச்சயமாய் வாழவைக்க இந்தக் கக்ஷிகளில் எந்தக்கக்ஷி எவ்வளவு கரணம் போட்டாலும் முடிந்து விடுமா? ஒவ்வொரு கக்ஷிகாரனும் தன் கக்ஷியின் பூர்ண நோக்கமாக எதைச் சொல்லுகிறானோ, அதன் எல்லையை அடைந்து விட்டதாகவே வைத்துக் கொள்வோம். மனிதர்களுக்குள்ள கஷ்டங்களெல்லாம் அந்த நிலையில் அடியோடு மறைந்து விடுமா என்று சற்று நிதானமாக ஆலோசிக்க வேண்டும். நிதானமாகவும் நிஷ்பக்ஷபாதமாகவும் ஆலோசித்துப் பார்த்தால் இப்பொழுதிருப்பதைவிட எவ்வளவோ புதுப்புது கஷ்டங்கள் கிளம்பிவிடும்.

இக்கக்ஷிகளெல்லாம் மனிதருக்குச் சீமை மருந்துகள். நாட்டு மருந்தோ ஒரே மருந்து. அதுவே உண்மையில் வீர்யமான மருந்து. ஆனால் அதில் புதுப்பகட்டும் தளுக்கும் இருக்காது. அந்த மருந்தே ''குணம்''. அரசாங்கமுறை எவ்வளவோ கரணம் போட்டாலும், ஆசாரங்கள் எவ்வளவு தலைகீழானாலும் எவ்வளவு இரவல் கக்ஷிகள் கிளம்பினாலும் மானிடர்களிடையில், சாந்தமும், நற்குணமும் குறையக்குறைய மனித வர்கத்திற்கு கஷ்டம்தான் மிச்சம். அக்குணம் வளர வளர பூர்வகர்மத்தின் பயனான கஷ்ட சுகங்களைத் தவிர, இந்த ஜன்மத்தில் மனிதன் புதிதாகக் கிளறிக்கொள்ளும் கஷ்டங்கள் எவ்வளவு குறையலாமோ அவ்வளவு குறையும். குணம் எப்படி ஏற்படும்? குணமுள்ளவர்களை எப்பொழுதும் மனதில் நினைக்கும் ஸந்தர்ப்பம் ஏற்பட்டால் இம்மனமும் தன்மயமாக மாறும். ஒரு வித்வான், கம்பனுடைய கவிகளையே படித்துவந்ததால், கம்பனைப் போல் எழுத ஆரம்பிக்கிறான். நக்கீரரைப் படித்து வந்தால் அவரைப்போல் எழுதுகிறான். உத்தம குணமுள்ளவர்களை, மனிதவர்கத்தோ ரெல்லாம்அதிகமாய் மனதால் நாடும்படிச் செய்வதே தர்மபிரசாரம். அதைச்செய்யும் அரசாங்கத்திற்கு போலீஸ் செலவும் மிலிடரி (Military) செலவும் குறையும். வியாதிச் (வைத்திய இலாகா) செலவும், வம்புச் செலவும் (நீதி இலாகா செலவும்) குறையும். அவ்வித நற்குணக் குன்றுகள் நம்நாட்டில் குறைவில்லை. மனிதவர்கத்தின் கஷ்ட வியாதிக்காக, ஸந்தேகமான சீமை மருந்துக்குப் போகவேண்டிய பஞ்சம் நமக்கில்லை. ஒவ்வொரு உத்தம குணத்திலும் பெருவிளக்காயிருக்கும் பெரியோர்களை மனதில் நிலை நிறுத்துவோம். அவர்களுடைய வழியைக் கடைப்பிடிப்போம்.

(1) ஒவ்வொருவனும் தன் குடும்பத்தைப் போஷிப்பதைத் தவிர, வேறு ஒரு மனிதனுக்கு உணவிட்ட பின்னரே தான் உண்பது என்னும் விரதமே அதிதிபூஜை என்றும் விருந்தோம்பல் என்றும் சாஸ்திரத்தில் கூறப்படுவது. இதைப்பிரசாரம் செய்து எல்லோரும் கடைப்பிடித்து விட்டால் உணவுரேஷன் பஞ்சம் முதலிய சிக்கல்கள் அநேகமாய் தீர்ந்துவிடும். இத்துடன் ஏகாதசி உபவாசம் அல்லது கிருத்திகை உபவாசம் முதலிய தெய்வீக விரதங்கள் கைவிடப்படாமல் நமது குலாசாரப்படி அனுஷ்டிக்கப்பட்டு வந்தால் பற்றாக்குறையால் ஏற்படும் புது நிர்ப்பந்த உபவாசங்களுக்கு இடமிராது.

(2) ஒவ்வொரு மனிதனும் நாள்தோறும் தன் கையால் ஒரு பிடிப் புல் ஏதாவதொரு பசுவின் வாயில் கொடுத்தே தீருவது என்ற விரதம் சாஸ்திரங்களில் கோக்ராஸம் எனப்படுவது. இம்முறை அனுஷ்டானத்துக்கு கொண்டுவரப்பட்டு விட்டால் அநேகமாய் பசு வர்கத்தின் பிரச்சனை தீர்ந்துவிடும்.

(3) ஒவ்வொருவனும் தன் குலத்தொழில் சம்பந்தப்பட்ட வித்தையை (கல்வியை) முதலில் கற்ற பிறகே வேறு வேலைகளிலோ காரியங்களிலோ பிரவர்த்திக்க வேண்டும் என்பது சாஸ்திர விதி. இம் முறையை ஜனங்களும் அரசாங்கமும் சேர்ந்து அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்துவிட்டால், உலகத்தில் கங்காணிகளோ, பிச்சைகாரர்களோ, கூலிகளோ மலியாமலிருக்கும். தன் குலத்தொழிலே தனக்கேற்றதென்ற தெய்வீக எண்ணத்தினால் இதரத் தொழில்களில் போட்டி போடுவது, கட்சி கட்டுவது முதலிய தொந்தரவுகளும் குறையும்.

(4) ஜீவனத்தையே வேதியர்கள் பெரிதாகக் கருதாமல் தங்கள் மக்களை முதலில் வேதசாஸ்திர பயிற்சியை செய்வித்து, பின்னால் முடிந்த வரையில் இதர கலைகளில் பயிலவைக்க வேண்டுமென்பது சாஸ்திரவிதி. அவ்விதம் கற்ற கலைகளையும் தன் ஜீவனத்திற்கான தொழிலாக மாற்றிக் கொள்ளாமல், அவ்வக் கலைகளுக்கு ஞானஸ்தானம் செய்வித்து, அவர்கள் பக்தியாய்க் கொடுக்கும் குருதக்ஷிணையைக் கொண்டு கண்டஜீவனமோ சுக ஜீவனமோ நேர்ந்த ஜீவனத்தை ஸந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு வாழும் எண்ணத்தைப் பிரசாரம் செய்ய வேண்டும். இதுவே யாம் மூத்தோர் வழித்த வழி.

இதுவே அனேக சிக்கல்களுக்கு மஹரிஷிகள் கைக்கொண்ட மருந்து.

வேத தர்மசாஸ்திர சபையார்.

॥ ஸ்ரீ: ॥
இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.
பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை
Typeing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி
எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.
க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்
எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.
(Transliteration in all Languages done here.)
Grantham to Devanagiri, Grantham to Tamil,
மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்
உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்
அச்சிட்டு தரப்படும்.
**Contact : V.K.N. Enterprises (Printer)**
Mylapore, Chenani-600 004, Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# வேத மந்த்ரார்த்தங்கள்

## ''சிவ ஸங்கல்ப ஸூக்தம்''

ஒளிப்பொருளாக விழிப்பு நிலையில் எது வெளியில் செல்கிறதோ அதுவே உறக்கத்தில் அகமுகமாசெல்கிறது.தொலைதூரம்களை எட்டுவதும்,ஒளிக்கெல்லாம் ஒளியாக இருப்பதும், ஒன்றேயானதும் அந்த என் மனம் நல்ல சங்கல்பத்தை செய்யட்டும். 1

அவர்களின் ப்ரார்தனைகளில் எது முதன்மையானதோ, எது போற்றத் தக்கதோ எது உயிர்களின் உள்ளே உறைகிறதோ அந்தஎன் மனம் நல்ல சங்கல்பத்தைச் செய்யட்டும் 2

எது தன்னறிவு,நினைவாற்றல் மன உறுதி இவைகளின் பிறப்பிடமோ எந்த ஆன்மா உயிர்களின் அழிவற்ற ஒளியாக உள்ளதோ, எது இல்லாமல் எவ்வேலையும் செய்ய முடியாதோ அந்த என் மனம் நல்ல சங்கல்பத்தைச் செய்யட்டும். 3

போனது இருப்பது. வரப்போவது எல்லாம் எல்லாம் எந்த அழிவற்ற ஆன்மாவால் அறியப்படிகின்றனவோ வேள்வி செய்கின்ற எழுவரும் வேள்வி பற்றி விரித்துறைக்கிறார்களோ அந்த என் மனம் நல்ல சங்கல்பத்தைச் செய்யட்டும். 4


ஆரங்கள் தேர்ச்சக்ரத்தின் அச்சில் நிலைபெற்றிருப்பதுபோல் ரிக், யஜுர் சாம வேதங்கள் எதில் நிலைபெற்றுள்ளனவோ மக்களின் மனம் எல்லாமெதில் ஊடுப் பாவும் போல் நிலைபெற்றுள்ளதோ அந்த என் மனம் நல்ல சங்கலபத்தைச்செய்யட்டும். 5

நல்ல சாரதி குதிரைகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுபோல் மனிதர்கள் கடிவாளத்தால் குதிரைகளை வழி நடத்துவதுபோல் எந்த ஆத்மா இதயத்தில் இருந்து கொண்டு வழி நடத்திகிறதோ எது என்றும் இளமையானதோ அனைத்திலும் வேகமானதோ அந்த என் மனம் சிவ சங்கல்பத்தைச் செய்யட்டும். 6

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு வரும் மார்ச் 30ம் தேதி சனிக்கிழமை (உத்திராட நக்ஷத்ரம்) ''ஸஹஸ்ர பிக்ஷாவந்தன'' நிகழ்ச்சி காஞ்சீபுரம் ஸ்ரீமடத்தில் நடைபெறும்.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 10

முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்



நம் பெரியவர்கள் எல்லாவிதத்திலும் பெரியவர்கள்ஆத்மானுபவம் பெற்ற ஞானிகளுக்கு உலகிலுள்ள எல்லாம் தெரியும் எனும் உபனிஷத் கருத்தினை நிரூபிப்பவர்களாக இருக்கிறார்கள். அவருடைய அபார சாஸ்த்ரக்ஞானம் வியக்க வைக்கும். சிலசமயங்களில் அடியேனுக்கு அருளிய சில கருத்துகளைத் தெரிவிக்கிறேன்.

''வேதத்தில் சரணம்'' இப்படி கூறி வணங்கப்படும் தெய்வம் பரமேஸ்வரியாகிய காமாக்ஷிதான். மற்ற எந்த தெய்வத்திற்கும் வேதத்தில் சரணம் என்று கூறப்படவில்லை. துர்கா ஸூக்தத்தில் ''துர்காம் சரணமஹம் ப்ரபத்யே'' என்று கோஷிக்கப்படுகிறது என்று கூறி வியக்கவைத்தார்.

நந்தாம சரத:சதம்'' நூறாண்டுகள் இன்பமாக இருப்போமாக'' எனும் மந்த்ரத்தில் சரத: எனும் சொல்லுக்கு வருஷம் என்று பொருள். சரத் எனும் ருதுவை குறிக்கும் சொல்லுக்கு அப்பருவத்தைக் கொண்ட முழுமையான வருஷம் என்று பொருள் கொள்ள வேண்டும் என்றவாறு வேதபாஷ்யப்பரிக்ஷையில் வாய்முகத் தேர்வின்போது சர்ச்சை நடந்த தருணத்தில் அவர் கூறியதாவது. ''வருஷம்'' எனும் சொல்கூட ''வர்ஷா'' எனும் மழைப் பருவத்தை மட்டும் கூறும் வாத்தைதானே. சரத்'' எனும் வார்த்தயைப் போலவேதான் வருஷம் எனும்சொல்லும் ஏற்பட்டதன்றோ என்றார்கள்.

ஓம்'' என்பது வார்த்தையா எழுத்தா ஓம்காரம் என்று கூறப்படும் அ உ ம் என்ற எழுத்துகளின் சேர்க்கை ஓம் என்று தெரியும். ஓம் எழுத்தாகத்தான் கூறப்படுகிறது. ஓம்காரம் என்பது இதுதான்.

ஆனால் வேதத்தில் தனி வாக்யமாக சொல்லப்படும் இடம் உள்ளது என்று அவர் கூறியபோது எனக்குத் திகைப்பாயிருந்தது . பதில் தோன்றவில்லை உடனே பெரிவா த்ரிஸுபர்ணம்'' எனும் மூன்றுமந்தர அனுவாகங்களில். கடைசி வாக்யமாக முடிந்து இரண்டு மாத்திரை நிறுத்தி அடுத்த அனுவாகம் தொடங்குகிறோம். ஆகவே அது வாக்யம்தான் என்றார்கள்.

# வால்மீகி ப்ரதீபம் 49

இளம்பூரணர்.

## 98 தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும்

பூதானாம் ஸ்தாவராணாம் ச ஜங்கமானாம் ச தர்சனம்
யதாஸ்தி ந ததா தர்மஸ்தேன நாஸ்தீதி மே மதி:
சுபே வர்த்மனி திஷ்டந்தம் த்வாமாயவிஜிதேந்த்ரியம்
அனர்தேப்யோ ந சக்னோதி த்ராதும் தர்மோ நிரர்தக;

(யுத்தகாண்டம்)

பூதங்கள் போலவோ ஸ்தாவர ஜங்கமங்கள் போலவோ தர்மம் என்று இருப்பின் புலப்படுவதில்லை. நீங்களோ புலன் பொறி அடக்கியவர். நல்வழியை நாடுபவர், நடப்பவர். உம்மையே தர்மம் காக்கவில்லை எனில் அது வீண் என்று தோன்றுகிறது.

இலங்கையில் யுத்தகளம். பெரும்போர் நடக்கிறது. இரு தரப்பிலும் சேதாரம். ராவணன் கை ஓங்குகிறது. இலக்குவன் மனதில் வெறுப்பு தோன்றுகிறது. தர்மத்தைக் கண்டாலே பிடிக்கவில்லை. தொடக்கத்தில் இருந்தே அறத்தின்மீது கோபம்தான். வனவாசம், அதற்குப்பின் நடந்த துயரங்கள்,அடுக்கடுக்காக வந்து தாக்க வெறுத்துப்போகிறான்.

அப்போது அவன் சொல்லும் வார்த்தைகள் மேலே சொன்னவை. வால்மீகி காவ்யத்தில் இலக்குவனை ஒரு சாதாரண மனிதனைப் போல் படைத்துள்ளார். நம்மைப்போலவே அவன் சொல்லும் செயலும் இருக்கும். தரமம் தர்மம் என்று ராமர் சொல்லும் ஒன்று இக்கட்டில் காப்பாற்ற வரவில்லை. சொல் அளவுதானா?

தர்மமே என் மூச்சு என்று கூறும் ராமனுக்கே இக்கதியா? ஸரியான கேள்வி. நமக்கே நாம் காணுமுலகில் நடக்கும் நிகழ்ச்சிகள் பல இக்கேள்வியை கேட்க வைக்கிறது. காந்தி சுடப்பட்டு இறந்தபோதும், ஒரு தலைவியால் எமெர்ஜென்சி வந்ததும், நாட்டின் பெரும் தலைவர்கள் சிறையிலிடப்பட்டபோதும், ஒரு சிறுவன் பெரும்தலைவர் என்பவரை தோற்கடித்தபோதும், புதுப்பெரியவர்களுக்கு நடந்த அநீதியின் போதும் நாம் இக்கேள்வியினைக்கேட்டோம்.

இலக்குவன் இருந்த நிலையில் இருந்தோம். தர்மம் எங்கே? இது தர்மம் இல்லை என்று கதறினோம். ''பஞ்சமும் நோயும் உன் மெய்யடியார்க்கோ பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ'' என்று பாரதியார் அலறுவது போல் அலறினோம். ராமரின் பதில் ''விதியின் பிழை இதற்கு என்னை நீ வெகுண்டெதென்ன'' என்றிருந்தாலும் லக்ஷ்மணன் போல் நாமும் ஸமாதானம் அடைவதில்லை. காலப்போக்கில்இவை மறக்கப்பட்டாலும் இவைகளின் ஆழ்ந்த வடு மறைவதில்லைஎன்பது உண்மைதானே. தர்மத்தின் வாழ்வை சூது கவ்வும். எப்போது விடியும்? யாருக்கும் தெரிவதில்லை. யதார்த்தமானது.

## 98 எக்காப்பு பெண்காப்பு?

ந க்ருஹானி வஸ்த்ராணி ந ப்ராகாரஸ்திரஸ்க்ரியா:
நேத்ருசா ராஜஸத்காரா வ்ருத்தமாவரணம் ஸ்த்ரியா:

யுத்தகாண்டம் 117 26

வீடுகளோ ஆடைகளோ திரைகளோ ப்ரகாரங்களோ அரச ஆணைகளோ எதுவும் பெண்ணைக் காப்பாற்றாது, அவளுடைய நல்லொழுக்கமே அவளுக்குக் காப்பு.

யுத்தம் நடந்து முடிந்தபின் வீடணனை ராமர் சீதையை அழைத்துவர அனுப்ப அவரும் அவளை அழைத்துவர கூட்டத்தில் பரபரப்பு ஏற்படுகிறது. அதை அடக்க அவர் முற்பட ராமர் மேற்கண்டவாறு கூறுகிறார். தெரிந்து சொன்னாரா தெரியாமல் சொன்னாரா நாம் அறியோம். இவ்வார்த்தைகள் சீதையின் கற்புக்குக் கட்டியம் கூறும். உலகிலும் நம் நாட்டிலும் பெண்கள் படும் வேதனை சொல்லி மாளாது. சட்டங்கள் ஆணைகள் பல உள்ளன. என்ன பயன்?

ஒரு பெண் தன்னைக் காக்கத் தவறினால் விளைவது விபரீதமே. சீதையையே எடுத்துக் கொள்வோம். இருந்தது அசோகவனத்தில் உடுத்தியதோ ஒரே ஆடை. சுற்றிலும் ராக்ஷசிகள். மிரட்டும் ராவணன். என்ன நடந்தது? நீ எனக்குத் த்ருணம் என்று கூறி தன் பதிவ்ரத்யத்தைக் காப்பாற்றிக் கொள்கிறாள். இதுவே உன்னையும் லங்கையையும் அழிக்கும் என்று கூறுகிறாள்.

சீதையின் பதிவ்ரத்ததால் லங்கை தீப்பற்றியது என்பது மண்டோதரியின் கூற்று. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத பெண்கள் பலப்ரச்சனைகளில் மாட்டிக்கொள்கிறார்கள் ‘‘சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை’’

எனும் வள்ளுவர் கூற்றுக்கு இணங்க பெண்களின் மன உறுதியும் தீர்கமான செயலும் அவர்களைக் காப்பாற்றும். அகலிகை சரித்ரத்தை பார்த்தால் க்ஷண நேரத்திற்கு அடிமையானாள், வாழ் நாள் முழுவதும் பழிச்சொல்லுக்கு ஆளானாள். எவ்விதத்திலும் சபலத்திற்கு ஆட்படாமல் ஒரு நாட்டையே ஒரு சாம்ராஜ்யத்தையே அழித்தவள் சீதை.

அவளை நம் நாட்டுப்பெண்கள் முன்மாதிரியாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தினால் பெண்ணுலகம் முன்னேறும். . உண்மையான பெண்ணீயம் ஒளிரும். வீண் விவாதங்கள் தோன்றா. இவை எல்லாமே பெண்கள் கையில் உள்ளது.

### கலை(ந்த)ச்சொல் பிப்ரவரி விடைகள்

1. நடமாடும் தெய்வம்
2. பஞ்சக்ருத்ய பராயணா
3. திருக்குறள் அமுதம்
4. நமசிவாய வாழ்க
5. பாரத நாடு போற்றுவோம்

### கலை(ந்த)ச்சொல் மார்ச் வினாக்கள்

1. ப்ரவபாயனம்ஷ்ச
2. தோகுறுன்ராதடுல்
3. வேஇளைனாலூர்யா்
4. ராதயாஅத்மமாணம்ய
5. திசித்தத்சு

# புராணக் கதை

## நந்தா சரஸ்வதி கதை

## வாதூலன்

சாபத்தினால் புலியாக மாறின அரசன் காட்டில் வரும் நந்தா எனும் பசுவைக் கொல்லவர அது என் மகவைப்பார்த்துவிட்டு வருவேன் என்று கூறுகிறது. புலி மகவைப்ற்றி ஏன் கவலைப்படுகிறாய். கருணையினால் இப்படி பேசுகிறாய். இறக்கப் போகிறவனை தவமோ, பிள்ளையோ தானமோ பெற்றோரோ யாரும் காப்பாற்றமாட்டார்கள். இங்கிருந்து போகும் நீ வருவாய் என்று எனக்கு நம்பிக்கையில்லை.

பசு ''நீங்கள் அப்படி நினைக்கவேண்டாம் இப்போதுதான் ஈன்ற என் கன்றை ஒருதடவை பார்த்துவிட்டு அவனிடமிருந்தும் என் சகாக்கசளிடமிருந்தும் விடை பெற்றுக் கொண்டு வருவேன். தாயைக்கொன்ற பாபம் தந்தயைக்கொன்றபாபம் நண்பனைக் கொன்றபாபம் இன்னும் என்ன மகாபாரதகங்கள், உபபாதகங்கள் உள்ளனவோ அவை அனைத்தும் நான் இங்கு திரும்பி வராது போனால் என்மீது விழட்டும். இது ஸத்யம்

''புலி '' நீ சொல்வதையெல்லாம் நம்ப நான் தயாராயில்லை. அங்குபோனபின் நான் புலியை ஏமாற்றிவிட்டேன். நல்ல கார்யங்கள் நடக்க பொய்கள் சொல்லலாம் என்று சாஸ்த்ரங்களும் கூறும். உன்னுடைய சகாக்களும் அதை ஆமோதிப்பர். ஆசைப்பட்டதை அடைந்தவுடன் சாதனத்தை விட்டுவிடுவர் மக்கள். இது வஞ்சக உலகம். இருந்தாலும் சத்யம் தவறாமல் நடப்பாய் என்று நம்பி உன்னை விடுகிறேன். போ உன் குழவியைப் பார், உச்சிமுகர், பால்கொடு, ஆசையுடன் அவனை நக்கு, ஆலிங்கனம் செய்துகொள் உன் பெற்றோரிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் விடை பெற்றுக்கொண்டு வா'' என்று கூறியது.

பசுவும் ஆசையுடன் ஓடிவந்தது. கன்றை பார்த்தது. கண்ணில் நீர் வழிய பால்கொடுத்தது. ஏம்மா அழற என்று கன்று கேட்க ''இதான் கடைசியா எங்கிட்ட பால் குடீக்கபோற, ஏன்னா புலி என்னைக் கொல்ல காத்துக்கொண்டுள்ளது, நானும் உனக்குப் பால் கொடுத்து விட்டு வருவதாக வாக்குக் கொடுத்துள்ளேன்''என்றது.

அதிர்ச்சியில் உறைந்த கன்று அம்மா உன்னோடு நானும் வருவேன். உன்னைவிட்டால் எனக்குக் கதியில்லை. இல்லையெனில் உனக்குப்பதிலாக நான் போகிறேன் என்றது. அம்மாவைப்போல் யார் இருப்பார்?அவள்தானே ஆனந்தம் நானும் உன்னோடு

வருவேன் அம்மா இல்லாமல் நான் தனியாக இருப்பேனா என்றது. பைத்யமாறி உளராதே. இறப்பை யார் தவிர்க்கமுடியும்? நான் கூறும் உபதேசங்களைக் கேள். அதன்படி நட என்றது. காட்டில் போகும்போது பத்ரமாகப் போ அலையாதே உன்னை நன்றாகக் காப்பாற்றிக்கொள் ஆசைப்பட்டு காட்டில் திரியாதே, ஆற்றுப்படுகைகளில் பசும் தரைகளிலும் நண்பர்கள் இல்லாமல் மேயாதே. பேராசையே அழிக்கும் ஆயுதம்.

கொம்பு உள்ள மிருகங்களிடமிருந்தும் கூரிய நகங்களுடைய மிருகங்களிடமிருந்தும் உன்னைக் காப்பற்றிக்கொள். காட்டில் தனியாகத்திரியாதே. நான் போகிறேனே என்று கவலைப்படாதே. என் இறப்பைப்பற்றிக் கவலைகொள்ளாதே. சாவு என்பது என்ன? வழிப்போக்கன் ஒரு இடத்தில் தங்கி இன்னொரு இடத்திற்கு போவதுபோலத்தான். வாழ்க்கை நிரந்தரம் இல்லை. சாவுக்குபயப்படத்தேவையில்லை என்று கூறி கன்றை ஆசையுடன் நக்கியது. ''உலகில் ஆனந்தம் குழவியின் மழலையும், ஸ்பர்சமும்தான். சந்தனம் இதற்கு ஈடாகுமா? என்று கூறி தன் சகாக்களின் பெயர்களைச்சொல்லி அழைத்தது. அவைகள் அங்குவந்து பசு சொன்ன கதையைக் கேட்டபின் சிரித்தன. பின் வருமாறு கூறின.

(தொடரும்)

## ஸனாதன தர்மப்புதிர்கள் பிப்ரவரி விடைகள்

1. ஹிரண்யகர்ப்பர்
2. மூன்று
3. சந்திரன்
4. நான்கு
5. மகாபலேஷ்வர்
6. யாதவாப்யுதயம்
7. ராமேஸ்வரம்
8. கங்கரா பஞ்ஜாப் மானிலம்
9. ஸ்ரீவேதாந்த தேசிகர்
10. ராமேஸ்வரம்

## ஸனாதன தர்மப்புதிர்கள் மார்ச் வினாக்கள்

1. அம்பாளின் மகாசக்தி பீடம் எது?
2. ஆலய விமானங்கள் எத்தனை வகைப்படும்?
3 ஒரு முகூர்த்தம் அளவு என்ன?
4 அவிமுக்தக்ஷேத்ரம் எது?
5 ஓங்காரேஸ்வரர் க்ஷேத்ரம் எம்மானிலத்தில் உள்ளது?
6 கோதாவரியின் உத்பத்தி எங்கே?
7 கர ஆமலக ந்யாயம் என்பது என்ன?
8 ராவணனுக்கு சிவன் தந்த வாள்
9 ஆத்மாவை எத்தனை விதமாகப்பிரிப்பர்
10 ஸஞ்சலா என்று பெயரிடப்பட்டவள் யார்?

# வேதாந்த ஸாரம்

## ஸாதானந்த யோகி

வேங்கடகணபதி சர்மா

ஏதேஷாம் நித்யாதீனாம் புத்தி சுத்தி:பரம் ப்ரயோஜன உபாஸ

நானாம் து சித்த ஐகாக்ரியம்''தமேதமாத்மானம் வேதானுவசனேன

ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஞ்யேன''நிப்ரு உபனி 4, 4, 12) இத்யாதி

ஸ்ருதே: ''தபஸா கல்மஷம் ஹந்தி''(மனு 12-101) இத்யாதி ஸ்ம்ருதேச்ச ॥ 13

இவைகளில் நித்யகர்மாக்கள் புத்தியை சுத்தப்படுத்தவும், உபாஸனங்கள் சித்த ஐகாக்ரியத்தையும் தருவன. வேதத்தைப் படிப்பதாலும் வேள்விசெய்வதாலும் ஆத்மாவை ப்ராம்மணர்கள் அறிய முயல்கிறார்கள் என்று ஸ்ருதியும், தவத்தினால் பாபங்களை அழிக்கின்றனர் என்று ஸ்ம்ருதிவசனமும் நிரூபிக்கின்றன.

நித்ய நைமித்திகயோ: உபாஸனானாம் த்வாந்த்ரபலம் பித்ரு

லோக ஸத்யலோகப்ராப்தி:''கர்மணா பித்ருலோக:வித்யயா தேவ

லோக:''(ப்ரு உப 1-15-13) இத்யாதி ஸ்ருதே: 14

நித்ய நைமித்திக கர்மத்தால் பித்ருலோக ப்ராப்தியும், உபாஸனத்தால் தேவலோக ப்ராப்தியும் இரண்டாவதாக செய்பவனுக்குக் கிடைக்கிறது. கர்மத்தால் பித்ருலோகமும் உபாஸனத்தால் தேவ லோகமும் என்று ஸ்ருதிகூறும்

ஸாதனானி நித்ய அனித்யவஸ்து விவேக: இஹ அமுத்ர அர்த

பலபோகவிராக: சமதமாதி ஷட்க ஸம்பத்தி முமுக்ஷுத்வானி ॥ 15

நித்யபொருள் அனித்யபொருள் எது என்று ஆராய்தல், இவ்வுலகிலும் மேலுலகிலும் நம் கர்மாக்களின் பலனைத் துறத்தல், புலன், பொறி, அடக்கல், வீடுபெற ஆசை இவை ஸாதனங்கள். இவை விளக்கபடுகின்றன. )

நித்ய அனித்ய வஸ்து விவேகஸ்தாவத் ப்ர்ஹ்மைவ நித்யம்

வஸ்து ததோ அன்யத் அகிலம் அனித்யமிதி விவேசனம்நச 16

ப்ரம்மம் ஒன்றுதான் ஸத்யம் அதற்கு மாறாக இருப்பவை அனித்யம் என்று தெளிதல்.

ஐஹிகானாம் ஸ்ரக் சந்தன வனிதாதிவிஷயபோகானாம்

கர்மஜன்யதயா அனித்யத்வாத் அமுஷ்மிகாணாம்
அப்யம்ருதாதிவிஷயபோகானாம் அனித்யதயா தேப்யோ நிதராம்
விரதி: இஹமுத்ரார்தபலபோகவிராக । 17

புலன்கள் வாயிலாக அனுபவிக்கும் போகங்கள் எப்படி அனித்யமானவையோ அப்படியே சொர்கபோகங்களும் அனித்யமானவை என்று உணர்ந்து அவைகளை அலக்ஷ்யப்படுத்துதல்.

சமாதயஸ்து சமதமோபரதிதிதிக்ஷா ஸமாதானஸ்ரத்தாக்யா: ।। 18

சமம், தமம், உபரதி, திதிக்ஷா, ஸமாதானம் ஸ்ரத்தை இவை ஆறும் ஸாதனங்கள். (விவரிக்கப்படுகின்றன)


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

- அனுஷம்
- மூலம்
- உத்ராடம்
- அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# பங்குனி மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 17-03-2019 | ஞாயிறு | ஏகாதசி |
| 18-03-2019 | திங்கள் | த்வாதசி |
| 18-03-2019 | திங்கள் | ப்ரதோஷ பூஜை |
| 19-03-2019 | செவ்வாய் | ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் வார்ஷிக ஆராதனை |
| 20-03-2019 | புதன்க | பௌர்ணமி பூஜை |
| 25-03-2019 | திங்கள் | அனுஷம் தேர் |
| 25-03-2019 | திங்கள் | அனுஷம் பாராயணம் |
| 27-03-2019 | புதன் | மூலம் தேர் |
| 29-03-2019 | வெள்ளி | உத்ராடம் தேர் |
| 30-03-2019 | சனி | உத்ராடம் பாராயணம் |
| 31-03-2019 | ஞாயிறு | ஏகாதசி |
| 01-04-2019 | திங்கள் | த்வாதசி |
| 01-04-2019 | திங்கள் | அவிட்டம் தேர் |
| 01-04-2019 | திங்கள் | அவிட்டம் பாராயணம் |
| 02-04-2019 | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| 04-04-2019 | வியாழன் | இளையாற்றங்குடி பெரியவாள் (65) பூஜ்யஸ்ரீ மஹாதேவேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை |
| 06-04-2019 | சனி | உகாதி தெலுங்கு வருடபிறப்பு |
| 06-04-2019 | சனி | வஸந்த நவராத்திரி ஆரம்பம் |
| 13-04-2019 | சனி | ஸ்ரீ ராம நவமி |
| 15/03/19, 22/03/19, 29/03/19, 05/04/19 - 12/04/19 | | வெள்ளிக்கிழமை பூஜை |

# ஸபா ரஞ்ஜன சதகம்

*நீலகண்ட தீக்ஷிதர்*

## தர்மம்



**அபி ம்ருத்வ்யா கிரா லப்ய: சதா**
**ஜாகர்த்யதந்த்ரித:**
**நாஸ்தி தர்மஸமோ ப்ருத்ய:**
**கிஞ்சிதுக்தஸ்து தாவதி ॥ 77**

*இன்சொல்லால் எப்போதும் சுறுசுறுப்பாகவும் விழிப்புடன் உள்ள தர்மம் எனும் வேலைக்காரன் கிடைப்பான். அவனைப் போல் கீழ்படியும் வேலைக்காரன் கிடைத்தல் அரிது. அவனே கூட தற்புகழ்ச்சியால் ஓடிவிடுவான்.*

**அர்தேனோபார்ஜ்யதே தர்மோ**
**தர்மேணா அர்தம் உபார்ஜ்யதே**
**அன்யோன்யாஸ்ரயேண**
**ஹ்யேததுபயோ: உத்பத்திஸாதனம் ॥ 78**

*அறத்தினால் செல்வமும் செல்வத்தினால் அறமும் கிடைக்கிறது. ஒன்றை ஒன்று உத்பத்திக்கு நம்பியிருக்கின்றன. (செல்வத்தினால் அறச்செயலையேசெய்யவேண்டும் அறத்தினால் செல்வத்தைச் ஸம்பாதிக்கவேண்டும்)*

**விபணி: புண்யதீர்தானி விக்ரேதாரஸ்த்வகிஞ்சன:**
**த்ருணேனாப்யந்ததோ தர்ம: பர்வஸூ க்ரீயதே மஹான் ॥ 79**

*புண்யகாலங்களில் வெறும் புல்லை அங்காடியிலும் புண்யதீர்தங்களிலும் ஏழைகளுக்கும், வணிகர்களுக்கும் கொடுத்து பெரும் தர்மத்தைச் சம்பாதிக்கலாம்.*

**சுலூகோதகமாத்ரேண தான்யமுஷ்டிவ்யயேன**
**மருபூமிஷு துர்பிக்ஷே தர்மஸ்ய மஹாபலம் ॥ 80**

*ஊள்ளங்கை தீர்த்தம் கைப்பிடி தான்யமான இந்த தர்மம் எனும் விதை பாலைவனத்திலும் வளரும், பலன் தரும்.*

**தர்மோ நர்மஸக: காமே குருஸ்தத்வோபதேசே**
**பட: ஸங்கரரங்கேஷு ஸசிவோ அர்த ஸமார்ஜனே ॥ 81**

*இன்ப நுகர்ச்சியில் நண்பனாயும், தத்வ உபதேசத்தில் குருவாகவும் போர்க்களத்தில் வீரனாகவும், பொருள் சேர்ப்பதில் அமைச்சனாகவும் விளங்குகிறது.*

**புவி வ்ருக்ஷோ திவிச் சாயா புவி கூபோ ஜலம் திவி**
**புவி யத் க்ருஹ்யதே விப்ரைர்திவி தத்தீயதே ஸுரை: ॥ 82**

*பூமியில் மரம் நட மேலுலகத்தில் நிழல், பூமியில் கிணறு வெட்ட மேலுலகத்தில் தாகம் தணிகிறது. எவைகளை த்விஜர்களுக்கு அளிக்கிறோமோ அவைகளை ஸுரர்கள் ஸ்வர்கத்தில் நமக்கு அளிக்கிறார்கள்.*

**கதலீகந்தவத் தர்மோ ந ரோஹதி பஹிர்கத:**
**ஸாதிதஸ்து பல: ஸூதே பனஸமூலவத் ॥ 83**

*வாழையின் வேர் போல்வது தர்மம், வெளியில் தெரியின் வளராது. மறைந்திருப்பின் பலாப்பழம்போல் பழம் தரும்.*

துக்கேனார்ஜ்யதே தர்ம: ஸுகேன து வினஸ்யதி
க்ருச்ரலப்தமும் த்ராதும் நேச்சந்தி முனய: ஸுகம் ॥ 84

*கஷ்டப்பட்டு கிடைக்கும் தர்மம் ஸுகித்திருப்பதால் அழியும். அதனால் முனிவர்கள் தர்மத்தைக்காக்க ஸுகத்தை விரும்பவில்லை.*

**ஸம்பாத்யதாம் வா யத்னேன யத்வா விக்ரீயதாமயம்**
**ஸர்வதா பஜ்யதாம் வா அன்யைர் தர்மோ பவதி நான்யதா ॥ 85**

*இந்த தர்மத்தை சம்பாதிக்கலாம் விற்கலாம் எல்லாரோடும் பகிர்ந்து கொள்ளலாம். இவையெல்லாம் அதன் பல நிலைகளே. இவை மறையும் தர்மம் அழியாது. (தாத்பர்யம் புரியவில்லை)*

# பாராயண பக்கம்

வேதமும் நீயே வேள்வியும் நீயே
நீதியும் நீயே நிமலன் நீயே
புண்ணியம் நீயே புனிதன் நீயே
பண்ணியன் நீயே பழம்பொருள் நீயே
ஊழியும் நீயே உலக்மும் நீயே
வாழியும் நீயே வரதனும் நீயே
தேவரும் நீயே தீர்த்தமும் நீயே
மூவரும் நீயே முன்னெறி நீயே
மால்வரை நீயே மறிகடல் நீயே
இன்பமும் நீயே துன்பமும் நீயே
தாயும் நீயே தந்தையும் நீயே
விண்முதற்பூதம் ஐந்தவை நீயே
புத்தியும் நீயே முத்தியும் நீயே
சொலற்கரும் தன்மைத் தொல்லோய் நீயே அதனால்
கொடல் ஆலவாய்க் குழகன் ஆவ(து)
ஆறியா(து) அருந்தமிழ் பழித்தனன் அடியேன்
ஈண்டிய சிறப்பின் இணையடிக் கீழ் நின்று
வேண்டும் மதுவினி வேண்டுவன் விரைந்தே.

(நக்கீரதேவ நாயனார் பெருந்தேவபாணி)

நீராய் நிலனாய் தீயாய் காலாய் நெடுவானாய்
சீராய் சுடர்கள் இரண்டாய் சிவனாய் அயனானாய்
கூரார் ஆழி வெண் சங்கு ஏத்தி கொடியேன்பால்
வாராய் ஒரு நாள் மண்ணும் விண்ணும் மகிழவே

மண்ணும் விண்ணும் மகிழ குறளாய் வலம் காட்டி
மண்ணும் விண்ணும் கொண்ட மாய அம்மானே

நண்ணி உனை நான் கண்டு உகந்து கூத்தாட
நண்ணி ஒரு நாள் ஞாலத்தூடே நடவாயே

ஞாலத்தூடே நடந்தும் நின்றும் கிடந்தும் இருந்தும்
சாலப்பல நாள் உகம் தோறு உயிர்கள் காப்பானே
கோலத் திரு மா மகளோடு உன்னைக்கூடாதே
சாலப்பல நாள் அடியேன் இன்னும் தளர்வேனோ.

தளர்ந்தும் முறிந்தும் சகட அசுரர் உடல் வேறாப்
பிளந்து வீய திருக் கால் ஆண்ட பெருமானே
கிளர்ந்து பிரமன் சிவன் இந்திரன் விண்ணவர் சூழ
விளங்க ஒரு நாள் காணவாராய் விண்மீதே. ***( நம்மாழ்வார்)***

# பாராயண ஸ்லோகம்

## சிவ பஞ்சாக்ஷாக்ஷர ஸ்தோத்ரம்

நாகேந்த்ரஹாராய த்ரிலோசனாய பஸ்மாங்கராகாய மஹேஸ்வராய
நித்யாய சுத்தாய திகம்பராய தஸ்மை நகாராய நம:சிவாய ॥ 1

மந்தாகினீ ஸலில சந்தன சர்சிதாய நந்தீச்வர ப்ரமதனாத மஹேஸ்வராய
மந்தாரபுஷ்ப பஹுபுஷ்ப ஸுபூஜிதாய தஸ்மை மகாரய நம:சிவாய । 2

சிவாய கௌரீவதனாப்ஜவ்ருந்த ஸூர்யாய தக்ஷாத்வர நாசகாய
ஸ்ரீ நீலகண்டாய வ்ருஷத்வஜாய தஸ்மை சிகாராயை நம:சிவாய॥ 3

வஸிஷ்டகும்போத்பவ கௌதமார்ய முனீந்த்ர தேவார்சித சேகராய
சந்த்ரார்க வைஸ்வானர லோசனாய தஸ்மை வகாராய நம:சிவாய ॥ 4

யக்ஷஸ்வரூபாய ஜடாதராய பினாகஹஸ்தாய ஸனாதனாய
திவ்யாய தேவாய திகம்பராய தஸ்மை யகாராய நம:சிவாய ॥ 5

பஞ்சாக்ஷரமிதம் புண்யம் ய: படேச்சிவ ஸன்னிதௌ
சிவலோகம் அவாப்னோதி சிவேன ஸஹ மோததே

# த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம்



**சக்ஷுப்ப்ரேங்கத் ப்ரேம காருண்யதாராம்**
**ஹாஸஜ்ஜ்யோத்ஸ்னா பூரஹ்ருஷ்யச்சகோராம்**
**யாமாஸ்லிஷ்யன் மோததே தேவ தேவ:**
**ஸா நோ தேவீ ஸுஹவா சர்ம யச்சது 66**

*கண்களில் ததும்பும் அன்புக்கருணை தாரையுள்ளவளும், சிரிப்பெனும் நிலவால் சகோர பக்ஷிகளை சந்தோஷப்படுத்துபவளும், எந்த உன்னை ஆலிங்கனம் செய்து ஆனந்ததை அனுபவிக்கிறானோ அத்தகைய சுலபமாக ஆராதிக்கத் தக்க தேவி நமக்கு க்ஷேமத்தை அளிக்கட்டும்.*

**முன்ச வஞ்சகதாம் சித்த பாமரம் சாபி தைவதம்**
**க்ருஹாண பதம் அம்பாயா: ஏததாலம்பனம் பரம் ॥ 67**

*மனமே வஞ்சகத்தை விடு,மற்ற சாதாரண தேவதைகளையும் விடு, அன்னையின் பாதம் பிடி. இதுவே சிறந்த பிடிப்பு.*

**காமே பீதி: காமே க்ஷதி:கிம் துராபம்**
**காமே சாங்கோத்துங்க பர்யங்கஸம்ஸ்தாம்**
**தத்வாதீனாம் அச்யுதானந்த தாத்ரீம்**
**தேவீமஹம் நிர்ருதிம் வந்தமான: ॥ 68**

*காமேசவரன் மடியில் உத்தம மஞ்சத்திலிருப்பவளும் தத்வங்களுக்கு மேலானவளும், அழியாத ஆனந்தமளிப்பவளும், தயை உள்ளவளும் நிர்ருதி சக்தியாக வழிபடுகிறேன். எனக்கேது பயம் / எனக்கேது குறைவு? எனக்கேது அழிவு?*

**சிந்தாமணிமயோத்தம்ச காந்திகஞ்சுகிதானனே**
**லலிதே த்வாம் ஸக்ருன் நத்வா ந பிபேதி குதச்சன ॥ 69**

*சிந்தாமணிமயமான தலை ஆபாரணத்தின் காந்தியால் கவசம் போல் சூழப்பட்ட முகமுள்ள லலிதையே உன்னை ஒருமுறை நமஸ்கரித்துவிட்டால் பிறகு எங்கும் பயப்படவேண்டாம்.*

**தாருண்யோத்துங்கித் குசே லாவண்யோல்லாஸிதேக்ஷணே**
**தவ ஆஞ்யைவ காமாத்யாமாஸ்மான் ப்ராபன்னாராத்ய: ॥ 70**

*யௌவனத்தால் உயர்ந்த மாபுள்ளவளே அழகால் சிறந்த கண்களுள்ளவளே உன் ஆணையினால் காமன் முதலிய சத்ருக்கள் என்னை அண்டமாட்டார்.*

# பித்ரார்ஜிதம்

*அல்பஸ்ருதன்*

## ப்ரம்ம வித்தை

செயற்கு அரியது செய்து காட்டுவதற்கு அரிதாகவுள்ள செயல்களை ''இது என்ன ப்ரம்மவித்தையா'' என்று கேட்பார்கள். பொருள் என்ன?எந்த வித்தையையும் கற்றுப் பழகிகொள்ளலாம். பழகினால் கூட ஸுலபமாக வராதது ''ப்ரம்ம வித்தை'' ஆளுக்கொரு தொழில் ஏர் உழுது விவசாயம் செய்கிறான் உழவன். அவனுக்குக் கலப்பைச் சமைத்து தருகிறான் தச்சன்.

அவனுக்கு வாளும் உளியும் தருகிறான் கருமான். இப்படி ஒருவருக்கு ஒருவர் உதவியாக ஒரு வித்தையை பயின்று வருவதால்தான் உலகம் தடையின்றி சுழற்கின்றது. அசாதாரண வித்தை மேற் சொன்ன வித்தைகளை பிறருக்குக் கற்பிக்கலாம், நாமே கற்கலாம். இவை சாதாரண வித்தைகள். ஒவ்வொன்றும் ஒரு விதத்தில் பயன்படும். இதைவிட உயர்ந்த வித்தை ஒன்று உள்ளது. இதைக்கற்றவன் அனைத்தையும் கற்றவனாகிறான். அவனுக்குப் பசியுமில்லை, பிணியுமில்லை, நரையுமில்லை, திரையுமில்லை, பயமில்லை, துன்பமில்லை, எந்நாளும் இன்பமயாகவே இருப்பான்.

பகவான் பாட்டு அப்படிப்பட்ட வித்தை என்ன வித்தை?அதுதான் ப்ரம்மவித்தை. அதை யோக சாஸ்த்ரம் என்றும் சொல்வர். பகவத் கீதையை உபநிஷத் என்றும் கூறுவர். இது க்ருஷ்ணரும் அர்ஜுனனும் ஸம்பாஷணை செய்கிற பாவனையில் நம் அனைவருக்கும் பயன்படும்படி எளிய நடையில் 18 அத்யாயங்களில் 700 ஸ்லோகங்களாக எழுதின புத்தகம். த்ருதராஷ் ட்ரன் 1 ஸஞ்சயன் 39 அர்ஜுனன் 90 ஸ்ரீருஷ்ணபரமாத்மா 570 ஸ்லோகங்களில் பேசியிருக்கிறார்கள்.

பாரதத்தில் இந்த ப்ரம்ம வித்தையை வ்யாசமுனிவர் ஐந்தாம் வேதமாக உள்ள பாரதத்தில் எழுதி வைத்துள்ளார். பாரதத்தில் பல பகுதிகள் நீதி நெறி விளக்கங்களை, நல்லறத்தை அறிவுறுத்தின போதும் இப்ப்ரம்மவித்தைக்கு ஈடான பகுதி பாரதத்திலும் இல்லை, வேறு என்னூலிலும் இல்லை. நாற்பத்தெட்டு புஸ்தகங்கள் வேதம், புராணம், தர்மஸாஸ்த்ரங்கள், இதிகாசங்கள் இப்படி நாற்பத்தெட்டு பெரும் நூல்கள் நம் மதத்திற்கு ஆதாரமானவை.

அவற்றின் பெயர்களையாவது சொல்லத்தெரியுமா என்றால் தெரியும் என்று சொல்லக்கூடியவர்கள் சிலரே. இதைக் கருதிதானோ என்னவோ வ்யாசபகவான் பகவத் கீதையை எழுதிவைத்தார். அதோடு ஆத்ம விசாரம் செய்யும் ''சாரீரக மீமாம்ஸை'' எனும் நூலையும் எழுதி வைத்தார். இவை இரண்டும் தத்வ ஆராய்ச்சி செய்யும் நூல்களாகும்.

ப்ரஸ்தான த்ரயம் தசோபனிஷத்கள், ப்ரம்மஸூத்ரம், பகவத் கீதை இம்மூன்றும் ப்ரஸ்தானத்ரயம் என்பர். இவைகளை சாந்தி த்ரயம் என்று சங்கரபகவத்பாதரின் சிஷ்யர்கள் கூறுவர். ரஹஸ்யத்ரயம் '' என்று ராமானுஜரின் சிஷ்யர்கள் கூறுவர். ஜீவன், ப்ரம்மம் இவைகளைப் பற்றிய ஆராய்ச்சிக்கு இவை மூன்றும் தேவை. இதில் முக்யமானது பகவத் கீதை.

ஜய ஜய சங்கர | உ | ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

**தத: க்ஷிப்தமிவாத்மானம் மத்வா பார்தோ அப்யபாஷத**
**அனாஹூதோபஸ்ருஷ்டானாம் அனாஹூதோபஜல்பினாம்**
**யே லோகாஸ்தான் ஹத; கர்ண மயா த்வம் ப்ரதிபத்ஸ்யஸே ॥ 139**

*தனக்கு அவமரியாதை செய்யப்பட்டது என்று நினத்து அர்ஜுனன் ''ஹே கர்ணா அழியாதவிருந்தாளிகள் எல்லோகத்திற்கு போவார்களோ என்னால் கொல்லப்பட்டு நீ அங்கு போவாய்'' என்றான்.*

**த்தோ த்ரோணாப்யனுஞ்யாத: பாரத:பரபுரஞ்சய;**
**ப்ராத்ருபிஸ்த்வரயா ஆஸ்லிஷ்டோ ரணயோபஜகாம தம் ॥ 140**

*துரோணரால் அனுமதிக்கப்பட்டு இந்த்ரனை நிகர்த்த அர்ஜுனன் தன் சகோதரர்களை தழுவிக்கொண்டு கர்ணனோடு போர் செய்ய கிளம்பினான்.*

**ததோ துர்யோதனேனாபி ஸப்ராத்ராஸமரோத்யத:**
**பரிஷ்வக்தஸ்தித: கர்ண: ப்ரக்ருஹ்ய ஸசரம் தனு: ॥ 141**

*பின்பு கர்ணனும் துர்யோதனனாலும் அவனுடைய சகோதரர்களாலும் தழுவப்பட்டு வில்லை எடுத்துக்கொண்டு போருக்கு ஆயத்தமானான்.*

**தார்தராஷ்ட்ரா யத: கர்ணஸ்தஸ்மின் தேசே வ்யவஸ்திதா:**
**பாரத்வாஜ: க்ருபோ பீஷ்மோ யத: பார்தஸ்ததோ அபவன் ॥ 142**

*கர்ணன் எங்கிருந்தானோ அங்கு த்ருதராஷ்ட்ரர்களும், அர்ஜுனன் இருந்தவிடத்தில் த்ரோணர் பீஷ்மர் க்ருபர் இருந்தனர்.*

**தாவுத்யதமஹாசாபௌ க்ருபச்சாரத்வதோ அப்ரவீத் ।**

*விற்களை எடுத்துகொண்ட அவர்களைப்பார்த்து க்ருபர் கூறினார்.*

**அயம் ப்ருதயாஸ்தனய; கனீயான் பாண்டு நந்தன:**
**கௌரவோ பவதா ஸார்தம் த்வந்த யுத்தம் கரிஷ்யதி॥ 143**

*கர்ணனே இவன் குந்தியின் புதல்வன், பாண்டவர்களில் இளையோன் உன்னுடன் த்வந்த யுத்தத்தைச் செய்வான்.*

த்வமப்யேவம் மஹாபாஹோ மாதரம் பிதரம் குலம்
கதயஸ்வ நரேந்த்ராணாம் யேஷாம் த்வம் குலபூஷணம்
ததோ விதித்வா பார்தஸ்த்வாம் ப்ரதியோத்ஸ்யதி வா ந வா ॥ 144

*கர்ணனே உன் பெற்றோர் யார்? உன் குலம் எது? இவைகளைச் சொல். அதைக் கேட்டபின் உன்னுடன் போர் செய்வதா இல்லையா என்று தீர்மானிப்பான்.*

ததோ ராஜானம் ஆமந்த்ர்ய்ய காங்கேயம் பிதாமஹம்
அர்ஹோயம் அங்கராஜ்யஸ்யேத்யபிஷிக்தோ மஹாபல: ॥ 145

*தன் தந்தையிடமிருந்தும் பீஷ்மரிடமிருந்தும் அனுமதி பெற்று அங்க ராஜ்யத்திற்கு இவன் அரசன் என்று கூறி கர்ணனுக்கு அபிஷேகம் செய்தான்.*

உவாச கௌரவம் (ராஜன்)வசனம் ஸ வ்ருஷஸ்ததா
அஸ்ய ராஜ்யப்ரதானஸ்ய ஸத்ருசம் கிம் ததானி தே ॥ 146

*துர்யோதனைப் பார்த்து இதற்கு ஈடாக நான் என்ன செய்யட்டும் என்று கர்ணன் கேட்டான்.*

அத்யந்தம் ஸக்யமிச்சாமி இத்யாஹ தம் ஸ ஸுயோதன:
ஹர்ஷாச்சோபௌ ஸமாஸ்லிஷ்ய பராம் முதம் அவாபது: ॥ 147

*இறுதி வரையில் உனது நட்பை நாடுகிறேன் என்று கூறி ஆனந்தத்தில் இருவரும் தழுவிக்கொண்டனர்.*

ததஸ்ஸ்ரஸ்தோத்தரபடச்ஸப்ரஸ்வேதஸ்ஸவேபது:
விவேசாதிரதோ ரங்கம் யஷ்டிப்ராணோஹ்வயன்னிவ । 148

*உடலங்கும்வியர்தவனாய் மேலாடை நழுவியவனாய் நடுங்கிக்கொண்டு ஊன்றுகோலோடு அதிரதன் அரங்கத்தில் நுழைந்தான்.*

த்மாலோக்ய த்னுஸ்த்யக்த்வா பித்ருகௌரவயந்த்ரித;
கர்ணோ அபிஷேகார்த்ர சிரஸா ஸமவந்தத ॥ 149

*அவனைக்கண்டவுடன் கர்ணன் வில்லை போட்டுவிட்டு அபிஷேகத்தினால் நனைந்த தலையுடன் வந்தனம் செய்தான்.*

தம் த்ருஷ்ட்வா ஸூதபுத்ரோயமிதி ஸஞ்சித்ய பாண்டவ:
பீமஸ்ஸேனஸ்ததா வாக்யமப்ரவீத் ப்ரஹஸன்னிவ ॥150

*அதிரதனைக் கண்ட பீமன் கர்ணன் ஸூதபுத்ரன் என்று தீர்மானித்து சிரித்துக்கொண்டே சொன்னான்.*

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# பாப புண்யங்கள்

புண்யத்தின் ப்ரயோஜனம் கஷ்டம் இல்லாமல் ஸௌக்கியமாக இருப்பது. அந்த ப்ரயோஜனத்தைதான் எல்லோரும் விரும்புகிறார்கள். அதனால் மனம் சாந்தத்தை அடைகிறது. ஆனந்தம் உண்டாகிறது. நமக்கு புண்யத்தின் ப்ரயோஜனத்தில் ஆசை இருக்கிறதே ஒழிய, நாம் பண்ணுதில் பெரும்பாலானவைகள் பாப காரியங்களாகவே இருக்கின்றன. நாம் பாபம் பண்ணுவதற்கு நம் மனமே ஸாக்ஷியாக இருக்கிறது. புண்யம் பண்ணுகிற விஷயத்தில் சோம்பல் உண்டாகிறது.

பாபத்தின் பலன் கஷ்டம். இது செய்யக்கூடாதென்று நம் மனச்சாக்ஷி தடுக்கும் கார்யங்கள் பாபகாரியங்கள். இது செய்ய வேண்டாமென்று எண்ணுவதுண்டு; ஆனால் செய்வதை விடுவதில்லை.

இந்த லோகத்தில் பிறந்த யாவர்க்கும் ஸுகத்தில் இச்சை உண்டு. புண்யமே செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். பாபமே செய்யக்கூடாதென்பதும் தெரியும். ஆனால் அவர்கள் செய்வதில் நூற்றுக்கு எண்பது பங்கு பாபம்தான்; இருபது பங்கே புண்யம். இதை நினைத்தால் நிரம்ப வேடிக்கையாக இருக்கிறது. பாபம் வேண்டுமென்று நாம் ஆசைப்படுவதே இல்லை. ஆனாலும் பாப மூட்டை மேலும் மேலும் ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்த ஆச்சர்யத்தின் காரணம் தெரியவில்லை. ஏன் இப்படி? ஏன்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. பல காலத்திற்கு முன்பே அர்ச்சுனன் நம் அனைவருக்கும் சேர்த்துப் பகவானை கேட்டு இதற்குப் பதில் வாங்கி வைத்திருக்கிறான்.

அத கேன ப்ரயுக்தோ ’யம் பாபம் சரதி பூருஷ:
அனிச்சன்ன் அபி வார்ஷ்ணேய பலாத் இவ நியோஜித:

(கீதை 3-36)

‘‘மனிதன் பாபம் செய்கிறான். அவனுக்கு அதைச் செய்ய ஆசை இல்லாதபொழுதே அவன் செய்கிறான். அவனைப் பாபம் பண்ண வைக்கிறது யார்? உபத்ரவப்படுத்திப் பாபம் செய்யச் சொல்கிற அந்தப் பேர்வழி யார்? பாபம் பண்ணவேண்டாம் என்று தான் ஞாபகம்; பாபத்திற் கொஞ்சங்கூட இச்சை இல்லை. ஆனாலும் அவனை பாபம் பண்ண வைக்கும் ஆஸாமி யார்?’’ என்று கேட்டான் அர்ச்சுனன். பகவான் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோ-குண-ஸமுத்பவ:
மஹாஷனோ மஹா-பாப்மா வித்த்யேனம் இஹ வைரிணம்

(கீதை 3-37)

மனிதனுக்கு ஒரு வஸ்து வேண்டுமென்ற ஆசை இருக்கிறது, அதை அடைய ப்ரயத்னம் செய்கிறான். நியாயமான வழியில் அகப்படாவிட்டால் அந்யாய வழியில் முயற்சி செய்கிறான். அது தான் பாபம். அந்தப் பாபத்திற்குக் காரணமாக இருப்பது வேண்டும் என்னும் ஆசை. அதைத் தான் காமம் என்று சொல்லுவார்கள். அது நமக்கு ஒரு சத்ரு. மற்றொன்று இருக்கிறது அது க்ரோதம்--கோபம். ஒரு வஸ்துவின் மேல் ஆசைப்பட்டால் அது கிடைக்காதபொழுது அதற்குத் தடையாக இருந்தவர்கள் மேல் க்ரோதம் உண்டாகிறது. ஆசைப்பட்ட பொருள் கிடைக்காத பொழுது கோபம் உண்டாகிறது. காமம் திருப்பப்பட்டபொழுது கோபமாகிறது. ஆதலால் இரண்டையும் ஒன்றென்றே சொல்லிவிடலாம்.

ஒரு சமயம் காமமாக இருப்பதே பின்பு கோபமாக ஆகிறது. ரப்பர் பந்தை சுவர் மேல் எறிகிறோம். எறிந்தபொழுது அது பின்பு திரும்பி வருகிறது. எறியப்படும்பொழுது அது காமம் போல் இருக்கிறது. திரும்பிவருவதைப் போன்றது க்ரோதம். காமம் நிறைவேறாவிட்டால் கோபம் உண்டாகிறது. காமம் எதனாலும் திருப்தி அடையாது. எவ்வளவு சாப்பிட்டாலும் அதற்குப் போதாது. நாம் பசிக்கு ஆகாரம் கொடுத்தால் திருப்தி உண்டாகிறது. ஆசை, ஆசைப்படும் வஸ்துவைக் கொடுத்தால் அடங்குவதில்லை. அந்த வஸ்து கிடைத்துவிட்டதே என்று சமனம் அடைவதில்லை. காமம் நெருப்புப் போன்றது. நெருப்பு ஆகாரம் கொடுக்கக் கொடுக்க பரவிப் பெருகும். அதைப் போன்றதே காமமும். ஆகாரம் போட்டுச் சமனம் உண்டாக்குதல் நெருப்புக்கும் இல்லை. நெருப்புக்கு க்ஷண வர்த்மா என்று ஒரு பெயர் இருக்கிறது. அதற்குப் போனவழியல்லாம் கறுப்பை உண்டுபண்ணுவது என்பது அர்த்தம். நெருப்பு எங்கே போனாலும் பின்னால் கரியை உண்டாக்கிக்கொண்டே போகிறது. காமமும் அப்படித் தான். முதலில் சந்தோஷம் உண்டாகிறது. ஆகாரம் கொடுக்கக் கொடுக்கக் காமம் விரிகிறது. காமம் ஒரு பெரும் பசிக்காரம்; மஹாசநன் என்று கூறப்படும்.

க்ரோதம், காமம் நிறைவேறாமல் திரும்பி வரும்பொழுது ஏற்படுவது. அது காமத்திலும் உயர்ந்தது. இது நைஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கலி வருகிறார். அவருடைய ஸேனாதிபதிகளாகிய காமன், க்ரோதன் முதலியவர்கள் உடன் வருகிறார்கள். ஸ்துதி பாடகர்கள் ஒவ்வொரு ஸேனாதிபதியின் பெருமையையும் எடுத்துச்சொல்லுகிறார்கள். க்ரோதனைப் பற்றியும் சொல்லப்படுகிறது.



# பக்தாஞ்சலி

# இருள் நீக்கி தந்த பாலகன் !
# பொன்விழா கண்ட நாயகன் !!

அந்த சிறிய கிராமம் தஞ்சை மாவட்டத்தில் (தற்போது நாகை மாவட்டம் ) மன்னார்குடி - திருத்துறைபூண்டி வழித்தடத்தில் ங்கோட்டூர் எனும் கிராமத்திலிருந்து சுமார் 3 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பக்தர்கள் மனதில் உள்ள இருளைப் போக்கவல்ல ஒரு மஹான் இருள் நீக்கி கிராமத்திலிருந்து தோன்றப் போகிறார் என்பதோ அல்லது பின்னாளில் . அந்த கிராமம் புகழ் பெறப்போகிறது என்பதோசுமார் 85 வருடங்களுக்கு முன்னர் எவரும் உணர்ந்திருக்க வாய்ப்பில்லை.

பச்சைப்பசேல் என்னும் மின்னும் வயல்வெளிக்கிடையே பசுமையான சூழ்நிலையில் கிராமம் அமைந்துள்ளது. ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத கைலாஸநாதர் என்கிற சிவன் கோவிலும், ஸ்ரீ லட்சுமி நாராயணப்பெருமாள் என்கிற விஷ்ணு கோவிலும் அங்கு உள்ளன. ஸ்ரீ ராமபிரான் வனவாசத்தின்போது அவரது பாதங்கள் இந்த கிராமத்தில் பதிந்துள்ளதாக பேச்சு வழக்கு உள்ளது. மேலும் பல வேதபண்டித விற்பன்னர்கள், தினசரி அக்னிஹோத்ரம் செய்யும் வித்வான்கள் இந்த கிராமத்தில் வாழ்ந்துள்ளனர்.

இவ்வளவு மகத்துவம் பெற்ற அந்த இருள்நீக்கி கிராமத்தில்தான் மஹாதேவ அய்யர், சரஸ்வதி அம்மாள் தம்பதியினருக்கு அந்தக்குழந்தை பிறந்தது. இந்த உலகின் ஜெகத்குரு என்று பின்னாளில்புகழ் பெறப்போகும் அந்தக்குழந்தைக்கு 'சுப்ரமணியன்' என்று பெற்றோர்கள் பெயர் வைத்தனர். அவர் பிறந்த நட்சத்திரமே 'அவிட்டம்' எனப்படும் நட்சத்திரங்களுள் சிறப்பான நட்சத்திரம் ஆகும்.

சுப்பிரமணியன் என்கிற அந்த சிறுவனுக்கு, விஸ்வநாதன், ராமகிருஷ்ணன் என்னும் இரண்டு சகோதரர்கள் உள்ளனர். சிறிவனின் தந்தைக்கு விழுப்புரத்திற்கு மாற்றலாகியது அந்த சிறுவனை விழுப்புரத்தில் பீமநாயக்கன் தோட்டம் ஆரம்ப பள்ளியில் அவனது பெற்றோர்கள் சேர்த்தனர். அப்போது அவருக்கு வயது ஐந்து.

அந்த சிறுவனுக்கு 8 வயது ஆகும்போது ஆதித்தபுரம் என்னும் கிராமத்தில் 9-5-1943 ம் நாள் அன்று உபநயனம் செய்விக்கப்பட்டது.

வேதத்தை வாழவைக்க வேண்டியது பிரம்மணர்களின் கடமை என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட புதல்வர்களைப் பெற்றிருக்கும் ஒவ்வொரு பிராம்மணக் குடும்பமும் ஒரு

புதல்வனையாவது வேதம் படிக்க பாடசாலைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் தனது உபன்யாசங்களில் ஸ்ரீ மஹாபெரியவர் கூறி வருவார். ஸ்ரீமடத்தில் பக்தி கொண்டவரும் காஞ்சிமடம் அடிக்கடி சென்று ஸ்வாமிகளை தரிசித்து ஆசிபெரும் பாக்யம் பெற்றவருமான மஹாதேவ அய்யர் ஸ்வாமிகளின் உபதேசத்திற்கேற்ப தனது குமாரர்களில் ஒருவரான சுப்ரமணியன் வேதபாடங்களில் தேர்ச்சி பெறவேண்டும் என விரும்பினார்.

தஞ்சை ஜில்லா, திருவிடைமருதூரில் ஸ்ரீமடம் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்றுவந்த வேதபாடசாலை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளிடம் சுப்ரமணியத்தை, ரிக்வேதபாடம் பயிற்சிபெற ஏற்பாடாயிற்று. இவர் பூர்வாஸ்ரமத்தில் ஸ்ரீ மஹாபெரியவரின் இளைய சகோதரர் ஆவார். அவருடைய குரு நாதர் மாயவரம் கிருஷ்ண சாஸ்திரிகளும் அடிக்கடி சுப்ரமணியனுக்கு தர்ம சாஸ்திரங்களின் நுட்பங்களை போதித்து வந்தார். . வித்யார்த்தி சுப்ரமணியனின் வேத அத்யயனம் 1948 ம் ஆண்டு ஆரம்பத்தில் முக்கிய பாகமாகிய ரிக் வேத சம்ஹிதையுடன் பூர்த்தி அடைந்துவிட்டது.

இந்நிலையில் மஹாதேவ அய்யருக்கு திருச்சிக்கு வேலை மாறுதலாகிவிட்டது. எனவே திருச்சிக்கருகில் திருவானைக்காவில் உள்ள ஸ்ரீமடம் பாடசாலையில் உபநிஷத்துக்களை அந்தந்த வேதம் கற்ற வேத விற்பன்னர்களிடம் சுப்ரமணியன் பயிற்சிபெற ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகளும், ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளும் சுப்ரமணியன்மீது தனிக்கவனம் செலுத்தி அவருடைய வளர்ச்சியில் அக்கறை காட்டினார்கள்,. வெளியூரிலிருந்து வந்து ஒரு வேதவித்வான்

உபநிஷத்துக்களில் சுப்ரமணியன் நன்கு தேர்ச்சிபெற வகுப்புகள் எடுத்தார்கள். காஞ்சி மடத்து ஆஸ்தான வித்வான் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் என்பவரும் அடிக்கடி திருவானைக்கா சென்று சுப்ரமணியன் வளர்ச்சியினை கண்காணித்து வந்தனர்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக்கு தமக்கு அடுத்தபடியாக ஆச்சார்யாளை நியமிக்கவேண்டும் என 1939 ம் ஆண்டு முதலே மஹாபெரியவர் சிந்திது வந்ததாகத் தெரிய வருகிறது. அதற்குரிய பிரம்மச்சாரி இளைஞர் நல்ல குடும்பத்தில் பிறந்தும், ஒழுக்கசீலராகவும் இருக்கவேண்டும், ரிக்வேதத்தை அத்யயனம் செய்தவராகவும் இருக்கவேண்டும் என்பது மரபு.

காமகோடிபீட வாரிசுக்கான தகுதிகள் கொண்டவர் திருவானைக்கா வேதபாட சாலையில் படித்துவரும் சுப்ரமணியன் இருப்பதை ஸ்வாமிகள் உணர்ந்து கொண்டார். ஸ்வாமிகளின் விருப்பம், சுப்ரமணியன் பெற்றோர்களுக்குத் தகவல் அனுப்பி வைக்கப்பட்டது

மஹாதேவன் தம்பதிகள் உடனடியாக முடிவு எடுக்க இயலவில்லை. பின் உலக நன்மைக்காக இது நல்ல முடிவாகவே அமையும் எனத் தீர்மானித்து ஸ்ரீ பெரியவாளின் கட்டளையினை தம்பதிகள் ஏற்றுக் கொண்டார்கள்.

பதிமூன்று வயதே ஆன பாலகனுக்கு பெற்றோரது முடிவு சூசகமாக தெரிவிக்கபட்டது. ஸ்ரீ மடத்தின் பொறுப்புகளை பீடாதிபதியாக ஏற்பது பற்றியும் துறவியாக வாழ்ந்து உலக நன்மைக்காக பாடுபடுவது பற்றியும் ஆழ்ந்து யோசித்து முடிவெடுக்கும் வயதில்லை. மேலும் தாய், தந்தை, குடும்பத்தினரை முழுவதுமாக பிரிந்து விடவேண்டும். சொந்த பந்தங்களை துறக்கவேண்டும். உலக நன்மைக்காக, அனைத்து மக்களின் மேம்பாட்டிற்காக பாடுபடவேண்டும்.

தாய், தந்தை குடும்பத்தினர்களை பிரிந்திருப்பது இவருக்குப் புதிதல்ல. ஏற்கனவே பாடசாலை, குருகுலவாசம் அனுபவம் உள்ளது. எனவே சொந்த பந்தங்களைப் பிரிவதிலும் துறவறம் ஏற்பதிலும் மனம் அதிக அலைச்சல் படவில்லை. மேலும் துறவறம் காமகோடிபீட வாரிசாக நியமனம் ஈஸ்வரனின் கட்டளையாகவும், குருநாதரின் ஆணை எனவும் ஏற்றுக்கொண்டு தனது சம்மதத்தைத் தெரிவித்தார்.

அவரது தந்தையார் தங்களது சம்மதத்தை சுவாமிகளிடம் விழுப்புரத்துக்கு விஜயம் செய்தபோது தெரிவித்தார்கள் இதைத் தொடர்ந்து சுப்பிரமணியன் வயதின் காரணமாக பீடாதிபதியாக பொறுப்பேற்க ஆறாண்டு கால அவகாசம் தேவைப்பட்டது. இந்த இடைப்பட்ட காலம் சுப்பிரமணியன் மனம் துறவறம் ஏற்றுக்கொள்ள பக்குவம் பெற போதுமானதாக இருந்தது 1954 ஆம் வருடம் மார்ச் மாதம் காஞ்சிபுரம் ஸ்ரீமடத்தில் இருந்து மகாதேவ அய்யருக்கு அழைப்பு வந்தது. அவரது புதல்வன் சுப்பிரமணியனையும் அழைத்துக்கொண்டு காஞ்சிபுரம் உடனடியாக வந்து சேரவும். மார்ச் 22ம் தேதி சுப்ரமணியனுக்கு சந்நியாச ஆசிரமம் அளித்து பீடத்தின் அடுத்த வாரிசாக நியமிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. குருவின் கட்டளையை ஏற்று மகாதேவ ஐயர் தம்பதியினர் அவர்கள் புதல்வன் சுப்பிரமணியன் மற்றும் அவரது குடும்பத்தினருடன் காஞ்சி நோக்கி புறப்பட்டனர். பெருமை வாய்ந்த காஞ்சி

காமகோடி பீடத்திற்கு புதிய வாரிசு நியமிக்கப்பட உள்ள செய்தி நாடு முழுவதும் உடனடியாக பரவியது. நாட்டின் எல்லா பகுதிகளில் இருந்தும் பக்தர்களும் முக்கிய பிரமுகர்களும் நிகழ்ச்சிக்கு ஒரு சில நாட்களுக்கு முன்னதாகவே காஞ்சிபுரம் நோக்கி அலைகடலென கூட்டம், கூட்டமாக வந்து வந்து சேரத் தொடங்கினர்.

குறிப்பிட்ட தினத்திற்கு முன்பாக காஞ்சி காமகோடி பீட சுவாமிகள் கலவையில் உள்ள தமது குரு, பரமகுரு ஆகியோரது அதிஷ்டானங்களையும் அம்பிகாபுரம் என்ற காஞ்சியிலுள்ள பூர்வாசார்ய ஸ்வாமிகளது அதிஷ்டானத்தையும் சென்று தரிசித்து கொண்டார்கள். மார்ச் மாதம் 22 ம் தேதி அதிகாலை பொழுதில் சுவாமிகள் அனந்தசாகரம் என்ற புனிதமான தடாகத்தின் கரையில் அசோக மரத்தின் அடியில் உள்ள ஸ்ரீ சுரேஷ்வராச்சாரியாரின் திருவுருவத்திற்கு பூஜை செய்தார்கள்

பின்னர் காஞ்சி காமாட்சி அம்மன் மற்றும் ஆலயத்தில் உள்ள ஆதிசங்கர பகவத்பாதர் ஆகியோரை தரிசனம் செய்துகொண்டு, குமரகோட்டம், ஏகாம்பரேஸ்வரர் தரிசனம் முடித்துக்கொண்டு ஆலயத்தில் புகழ்பெற்ற ஸ்தலவிருட்சம் மாமரம் தரிசித்து, அங்கிருந்து சிறிது மண் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

பிறகு, ஸ்ரீமடத்தில் சந்திரமௌலீஸ்வரர், திரிபுரசுந்தரி அம்பாளை வணங்கி பிரார்த்தனை செய்து கொண்டார்கள். சர்வதீர்த்தம் நோக்கி புறப்பட்டார்கள்.

சன்னியாசம் ஏற்பதற்கு பத்து தினங்கள் முன்பு சுப்பிரமணியன், திருப்பதி வெங்கடேச பெருமாள் தரிசனம் செய்து வைக்கப்பட்டார்

சுப்பிரமணியத்துடன் கூடவே, ஸ்ரீமடத்தில் பலகாலம் வித்வானாக இருந்து வந்த ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளும் சன்னியாசம் மேற்கொண்டார். இவர்கள் துறவறம் மேற்கொள்வதற்கான சம்பிரதாயங்கள் எல்லாம் ஸ்ரீமடம் அப்பாக்குட்டி சாஸ்திரிகள் என்பவரால் நடத்தி வைக்கப்பட்டன. தொடர்ந்து மூன்று நாட்கள் நடந்த வைதீக நிகழ்ச்சிகளின்போது கன்றுடன் பசுக்கள் தானம் செய்யப்பட்டன. பித்ருக்களுக்கும், தேவர்களுக்கும் தானங்கள் செய்யப்பட்டன. துறவறம் ஏற்பதற்கு முதல் நாள் இரவு முழுவதும் இவர்கள் கண் மூடாமல் விழித்திருந்து ஜெபம் செய்து கொண்டிருந்தனர்

காஞ்சி மடத்தின் இளைய பீடாதிபதி நியமன வைபவங்கள் ஸ்ரீமடம் சரித்திரத்திலேயே முக்கியமான நிகழ்ச்சியாக அமைந்தது என்று சொல்லலாம்.

*நிச்சயிக்கப்பட்ட புண்ணிய தினத்தில் இந்த இரண்டு வருங்கால சன்யாசிகளுக்காக, வைதிக நிகழ்ச்சிகள் தனித்தனியாக நடைபெற்றன. காஞ்சி மாநகர், சர்வதீர்த்த கரையில் உள்ள குளத்தில் இடுப்பளவு நீரில் நின்றுகொண்டு 'ப்ரோக்ஷாரண' மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே சுப்பிரமணியன் தன் தலையில் விடப்பட்டிருந்த இரு கேசங்களை கைகளால் களைந்தார். பின்னர், ' அபயம் சர்வ பூதேப்ய ' எனத்துவங்கும் மந்திரத்தை சொல்ல ஆரம்பித்தார்.*

*இனி தனக்கு எந்தவிதமான ஆசையும் இல்லை, பொன், பெண், பொருள், ஆகியவற்றின் மீது பற்று இல்லை என்ற உறுதியினை வெளியிட்டார். தான் உடுத்தியிருந்த ஆடைகளைக் களைந்தார். தான் அணிந்திருந்த பூணூலை கழற்றியதன் மூலம் உலக பந்தங்கள் எல்லாவற்றையும் அறுத்து எறிந்தார் காலை சுமார் 10 மணியளவில் காவிவஸ்திரம், தண்டம், கமண்டலம் ஆகியவை ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளால் சுப்பிரமணியத்திற்கு வழங்கப்பட்டன. காஷாய வஸ்த்திரத்தை அணிந்து ஒருகையில் தண்டத்தையும், மறுகையில் கமண்டலத்தையும் ஏந்தியவாறு புதிய சந்நியாசியான அவர் புராணப் பெருமை வாய்ந்த சர்வதீர்த்த குளத்தின் மேற்கு கரையில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்தில் உள்ளமுக்தி மண்டபத்திற்குள் பிரவேசித்தார்*

*ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் இந்த இளம் சன்னியாசியை தனியாக அழைத்துச் சென்று அவருக்கு 'ஜெயேந்திர சரஸ்வதி' என்ற தீக்க்ஷா நாமத்தை அளித்து, அவருக்கு மகாவாக்கியத்தையும் உபதேசித்தார். வேறு யாரோ ஒருவர் இன்னொரு புதிய சந்நியாசி மாயவரம் கிருஷ்ண சாஸ்திரிகளுக்கு மந்திர உபதேசம் அளித்ததாக கூறப்படுகிறது.*

*பின்னர் இந்த ரெண்டு சுவாமிகளும் ஊர்வலமாக நகரின் முக்கிய வீதி வழியாக எழுந்தருளினார்கள் ஊர்வலத்திற்கு முன்னே நாதஸ்வர இசைமழை பொழிய வித்வான்கள் வேதபாராயணங்களையும், விஷ்ணு சஹஸ்ரனாமத்தையும் முழங்கிவர, பக்தர்கள் கூட்டமாக பின் தொடர, இரண்டு ஸ்வாமிகளும், லிங்கப்பய்யர் தெரு வழியாக ஸ்ரீமடம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். வீதி எங்கும் மக்கள் பக்தி பரவசத்துடன் ' ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர' என முழங்கிக்கொண்டிருந்தனர்.*

*சன்னியாச நிகழ்ச்சிகள் முடிந்ததும் சுப்பிரமணியன் தன் தாயை பார்க்க கூடாது என அவருக்கு முன்னதாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ மடம் சார்பில் அவரது*

*தந்தைக்கு, வேட்டி, துண்டு, தாய்க்கு பட்டுப் புடவை, பவழ மாலை, ஒரு தங்கச் சங்கிலி ஆகியவற்றை அளித்து மரியாதை செய்யப்பட்டது. அவர்கள் புடவை, வேட்டி ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு, தங்கச்சங்கிலியை ஸ்ரீமடம் ஸ்ரீ மஹாதிரிபுரசுந்தரி அம்பாளுக்கு வழங்கிவிட்டார்கள்.*

*ஸ்ரீ மடத்தில் சந்திரமௌலீஸ்வரர் சன்னதியை அடைந்ததும், பெரிய சுவாமிகள் ஸ்படிக மாலையும் ருத்ராட்ச மாலையையும், திருப்பதி தேவஸ்தானத்தில் இருந்து தமக்கு அளிக்கப்பட்ட பட்டுப் பீதாம்பரத்தையும் புதிய ஸ்வாமிகளுக்கு அளித்து அநுக்கிரஹம் செய்தார்கள்.*

*அன்று நாள் முழுவதும் இரவு மூன்று மணி வரையிலும் பக்தர்கள் வந்து ஸ்வாமிகளையும், இளைய சாமிகளையும் தரிசித்து மகிழ்ந்தார்கள். அன்றுமுதல் காஞ்சிப் பெரியவர்களை 'பெரியவர்' என்றும், இளைய ஸ்வாமிகளை 'புது பெரியவர்' என்றும் அழைத்து பக்தியுடன் வணங்கும் முறை பக்தர்களிடையே ஏற்பட்டது.*

**தனது உபன்யாசங்களில் மகாபெரியவர் இவ்வாறு கூறுவார்--**

*சில ஆத்மாக்களை தனக்கென்று இல்லாமல் பிறகு உழைப்பதற்காகவே ஆண்டவன் படைத்திருக்கிறான். அதிகாலை 4 மணியிலிருந்து இரவு 11 மணி அல்லது 12 மணி வரை சுறு சுறுப்பாக செயல்பட்டு, அதற்குமேல் ஓய்வுக்குச்செல்வார், ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். ஸ்ரீமடத்தின் நிர்வாகம், பூஜை, அனுஷ்டானங்கள், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பாராமல், ஜாதி மத வேறுபாடு இல்லாமல் தரிசனம் தந்து அனைத்து தரப்பு மக்களுக்கும், உலக நன்மைக்காகவும், உலக அமைதிக்காகவும் அருந்தொண்டாற்றி வரும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளைப் பொறுத்தவரை மகா பெரியவர் கூறிய பொன்மொழிகள் முற்றிலும் பொருந்தும் என்றால் மிகையாகாது.*

*ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். காஞ்சி காமகோடி பீட குருவாக உருவாகி, 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, பொன் விழா நிகழ்ச்சிகள் மார்ச் 2003 முதல் மார்ச் 2004 ஆம் ஆண்டு வரை ஒரு வருட காலம் நாடு முழுவதும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. 2004 ஆம் ஆண்டுடன் பொன் விழா நிகழ்ச்சிகள் முடிந்து விட்டாலும், பல்வேறு விழா நிகழ்ச்சிகள் இன்றுவரையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன நிகழ்ச்சிகளில் நாமும் கலந்து கொண்டு பொன்விழா நாயகனின் ஆசிகளைப் பெறுவோமாக !*

# ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் நற்பணிகள்

**புலவர் பு மா ஜயசெந்தில்நாதன்**

ஸ்ரீ மடத்தின் மூலம் நடைபெறும் தர்மகார்யங்கள் சமய சமுதாய நற்பணிகள். பல நூற்றுக்கணக்கான பணிகள் இருப்பினும் இங்கு விரிவஞ்சி சிவற்றை மட்டும் கூறுகிறோம்.

## 1. வேத பாடசாலைகள்

காஞ்சீபுரம், பூந்தமல்லி, விழுப்புரம், திருவிடை மருதூர், கும்பகோணம், திருவானைக்கா, ராமேஸ்வரம் போளூர், ப்ரம்மதேசம், சேலம், கோவை, இருள் நீக்கி ஆத்தூர் கேரளம், காலடி, சாவனூர், பாலக்காடு, ஆந்த்ரம், ஸ்ரீசைலம் விஜயவாடா, மசூலிப்பட்டனம், ஏலூர், ஒரிஸா, பூரி, அதர்வணபாடசாலை, மேற்கு வங்காளம், கொல்கொத்தா, பீஹார், மந்தார் ஹில், உத்ரப்ரதேசம், அயோத்யா, டில்லி, காசி, மஹராஷ்ட்ரா, மும்பை, புனா, கர்நாடகம், மைசூரு, பங்களூரு, குஜராத், அகமதாபாத், ஹர்யானா, சண்டீகர், நேபாலம், காட்மாண்டு.

## 2 வேத சாஸ்த்ர தர்ம பரிபாலன ஸபை

3. வேத ரக்ஷண நிதி ட்ரஸ்ட் இதன்மூலம் வேதம் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.
4. கலவை ப்ருந்தாவன ட்ரஸ்ட்
5. அத்வைத ஸபா
6. சஷ்டியப்தபூர்த்தி ட்ரஸ்ட் வேத பாஷ்யம் படிக்கும் மாணவர்க்கு உதவித்தொகை அளித்தல்
7. காமகோடி கோசஸ்தானம் இதன்மூலம் நூல்கள் பல பதிப்பிக்கப்பட்டன. காமகோடி ப்ரதீபம் இந்நிறுவனத்தின் வெளியீடுதான்.
8. ஸ்ரீ ஆதிசங்கரர் அத்வைத ஆராய்ச்சி நிலையம்
9. கன்னிகாதான ட்ரஸ்ட்
10. அமரபாரதி பரீக்ஷா சமிதி குழந்தைகளுக்கு ஸம்ஸ்க்ருதம் போதிக்கப்படுகிறது.
11. அஞ்சல்வழி ஸம்ஸ்க்ருதம் ஸம்ஸ்க்ருதஸ்ரீ என்னும் பத்ரிகையின் வாயிலாக வடமொழி பயிற்றுவிக்கப்படுகிறது.
12. ஜீவாத்ம கைங்கர்ய சபை இந்து அனாதைபிணங்களை முறைப்படி அடக்கம் செய்தல்.

13. ஸ்ராத்தமண்டபங்கள்
14. பிடியரிசி திட்டம்
15. இலவஸ சமஷ்டி உபனயனங்கள்
16. ஆகமசிலப ஸதஸ் 17 ஆலய திருப்பணிகள்
17. மருத்துவமனைகளில் அருட் ப்ரசாதம் வழங்குதல்
19. இந்து சமய மன்றம்
20. ஆலயங்கள் நினைவுச்சின்னங்கள் கீழ்கண்ட இடங்களில் மண்டபங்களும் நினைவுச்சின்னங்களும் உள்ளன.

    ஹரித்வார், திருப்பதி, பூரி, கன்யாகுமரி, திருவனந்தபுரம், காலடி பத்ரி நாத் நேபாலம் காசி சீர்காழி ரிஷீகேசம், குருக்ஷேத்ரம், ஸோமனாத், உஜ்ஜயினி யோம்காரேஷ்வர், பீமசங்கர், கோலாப்பூர், அவுட்டாகனாத் ஸ்ரீவைத்ய நாத் குருஸ்வனேஸ்வரர்
21. உலக இந்து பேரவை
22. சிறைச்சாலைகளில் சமயப் ப்ரசாரம் இது சிவஒலி ஞ்யானானந்தாடிகளால் செய்யப்பட்டது.
23. இலவச மருத்துவமனைகள் சென்னை மேட்டூர்வேலூர், கும்பகோணம் அல்சூர் மதுரை திரு நெல்வேலி ஸேலம் முதலியவை.
24. திருப்பாவை திருவெம்பாவை போட்டிகள்
25. ஆங்கில பயிற்று மொழி பள்ளிகள்
26. ஓரியன்டல் பள்ளிகள்
27. இந்து சமயக் கல்லூரி
28. ஆயுர்வேத மருத்துவமனைகள்
29. இலவச சமய வெளியீடுகள்
30. இலவச தோத்ரவகுப்புகள்
31. கடவுள் நாமாக்கள் எழுதும் பணி
32. முதியோர் நல் வாழ்வு விடுதிகள் நசரத்பேட்டை கால ஹஸ்தி கலவை
33. ஆசிரியர்களுக்கு சமய போதனை வகுப்பு
34. இந்து சமய வெளியீட்டுக்கழகம்
35. கோஸம்ரக்ஷண சாலா

## ஸ்ரீசங்கர மடத்தின் கிளை மடங்கள் சிலவற்றை மட்டும் இங்கு தருகிறோம். இவைகளுடன் தொடர்பு கொள்ள காஞ்சீ சங்கரமடத்தை அணுகவும்

ராமேஸ்வரம், கன்யாகுமாரி மதுரை ப்ரம்மதேசம் இளையாத்தங்குடி குழித்தலை, நெரூர், சேலம், கோவை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் கும்பகோணம் இருள் நீக்கி சீர்காழி, திருவிடைமருதூர், திருவானைக்கா, விழுப்புரம் வடமம்புலம் அம்பி, கலவை, சென்னை, வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீசைலம் விஜயவாடா, விசாகப்பட்டனம், ஏலூர், மசூலிபட்டணம், செகந்த்ராபாத், த்ருவனந்தபுரம், பெங்களூரு, பூரி, கொல்கொத்தா, மும்பை, காசி, கயா, த்ரியம்பகம், ஹரித்வார், அஸ்ஸாம், ஜார்கண்ட், சிக்கிம் மிசோரம், மேகாலயம்.

# பெரியவரைப் பற்றி சில அனுபவங்கள்

நான் எலிமென்டெரி பள்ளி ஆசிரியர். பெரியவங்களைப்பற்றி ரொம்ப தெரியாதுங்க. காஞ்சீபுரத்தல இவரையும் இவர்களுக்குப் பெரியவரையும் பார்த்திருக்கிறேன். நான் த்ராவிட கக்ஷி சார்ந்தவனா. அதனால ரொம்ப பெரிசா தோணல. அப்பதான் ஒரு நாள் விழா ஒண்ணு ஏற்பாடு பண்ணாங்க. அதுல ''அறவழி வாசகம் '' GOLDEN READER' அப்படீன்னு புத்தகம் வெளியிட்டாங்க. பெரியவரும் சொற்பொழிவு செஞ்சாங்க. நம்ம நாட்டு கலாசாரம் நம் மக்களுக்கு மாணவ மாணவிகளுக்குத் தெரியணும், மேனாட்டு கலாசாரத்தைதான் இப்போது போதிக்கிறார்கள், இது மாறுவதற்குத் தான் இந்த இரண்டு புத்தகங்களையும் வெளியிடுகிறோம் என்றார்கள். நானும் புத்தகத்தை பார்த்தேன்.

அதில் A FOR ARJUNA I FOR ILANKO, K FOR KANNAKI S FOR SEETHAA இப்படி போட்ருந்தது. எனக்கு சுரீர் என்றது. நானும் இவ்வளவு நாள் பாடம் சொல்றேன் தோன்றவேயில்லையே என்று மனம் வருந்தினேன். அவ்வளவுதான். அவுங்கமீது ரொம்ப மதிப்பு வந்துதுங்க. இப்ப இருக்க காலத்தில் அவுங்க சொல்ற வழிதான் சரி எனப்பட்டது. நானும் பிள்ளைங்களுக்கு அப்டிதான் சொல்லிகொடுக்கிறேங்க. அவுங்க புகழ் வாழ்க.

(ஓர் ஆசிரியர்)

# ‘‘ஆசிதரும் பொற்கரங்கள் தேடி வரும் அற்புதங்கள்’’

டி. சிவசுப்ரமணியன்

நான் விடுமுறை நாட்களில் சங்கர மடத்தில் ஏதாவது பணிகளில் ஈடுபட்டிருப்பேன். அன்று பக்தர்களின் வரிசையை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தேன். ஒரு ஆன்மீகவாதி அடிக்கடி மடத்துக்கு வருவார். பெரியவரிடம் ஈடுபாடு கொண்டவர். தன்னை சார்ஜ் செய்து கொண்டு செல்வதாகக் கூறுவார். வரிசையில் நிற்கும் மக்களிடம் நான் பேச்சு கொடுப்பது வழக்கம். அப்படி ஒரு நாள் என் நண்பருக்கு முன் நின்று கொண்டிருந்தவரிடம் புதுசாக வந்துருக்கிறீர்களா என்று கேட்டேன்.

அவர் இதற்கு முன் வந்ததில்லை என்றும் மனதில் ஒரு குறை இருப்பதாகவும் பெரியவரிடம் சொல்ல வந்துள்ளதாகச் சொன்னார். என்ன குறை என்று கேட்டபோது 5, 6 மாதங்களுக்கு முன் தன் பிள்ளை காணாமல் போய்விட்டதாகவும் அவன் கிடைப்பானா என்று கேட்க வந்தேன் என்றார். அவர்கள் குறைகளை தெரிவிக்கும்போது பெரியவர் செய்யும் பூஜை பராக்ரமத்தாலும் நல்லாசிகளாலும் நமது பக்தியின் நம்பிக்கையினாலும் கஷ்டங்கள் நிவாரணம் ஆகிறது என்று உணர்வதில்லை.

எனது ஆன்மீக நண்பர் வேலுமயிலு அந்த நபரிடம் பெரியவரிடம் குறையைச் சொன்னால் அவர் அனுக்ரஹம் செய்வார் எனக் கூற அவரும் மடத்திற்கு வந்தார். அவருடைய முறையும் வந்தது. தன் குறையை அவரிடம் கூற பெரியவாளும் எல்லாம் நல்லபடியாக நடக்கும் என ஆசீர்வாதம் செய்து ப்ரசாதங்களை ஒரு புத்தத்தின்மீது வைத்து அனுப்பினார். அருகிலிருந்த சீடர் குங்கும ப்ரசாதங்களை ஒரு துண்டு காகிதத்தில் மடித்துத் தந்தார். அவரும் வேலுமயிலும் சென்றனர். சுமார் 10 நாட்களுக்குப் பின் வேலுமயிலுக்கு நண்பரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. படிக்கப் படிக்க ஆச்சர்யம்.

அந்த பக்தர் தன் வீடு சென்றதும் பெட்டி படுக்கைகளை ஒழுங்குபடுத்திவிட்டு பொருட்களைப் பங்கீடு செய்தார், ப்ரசாதங்களை பூஜை அறையில் சேர்க்க பொட்டலங்களைப் பிரித்தார். அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. குங்குமம்விபூதி மடித்து வைத்திருந்த காகிதத்தின் ஓரத்தில் ஒரு செய்தி காணப்பட்டது. காணாமற்போன அவருடைய மகனின் இருக்குமிடம் விவரங்கள், அவனை உடனே அழைத்துப் போகவும் என்றும் தகவல் காணப்பட்டது. அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் ஆனந்தம். அழுதேவிட்டனர். பெரியவரின் அனுக்ரஹம் தங்கள் வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்றிவிட்டதாக மகிழ்ச்சி பொங்க தெரிவித்திருந்தார்.

அவரே கதி என்று வரும் பக்தர்களுக்கு ஆசி தரும் பொற்கரங்களாய் விளங்குகிறது அவரது சன்னிதி என்றால் மிகையில்லை.


ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்

வரலாற்றில் அவர் செய்த ஆயிரமாயிரம் பணிகளில் வைர எழுத்துக்களால் பொன்னேட்டில் பதிக்கப்பட வேண்டிய 60 முத்தான பணிகள்

1. இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக்கரையில் ஸ்ரீ ஆதிசங்கர விமான மண்டபம் நிர்மாணித்தது.

2. அலகாபாத் த்ரிவேணி சங்கமத்தில் ஸ்ரீ காஞ்சீ காமகோடி சங்கமத்திலேயே 108 திவ்யதேசங்கள், 51 சக்தி பீடங்கள், 101 சிவலிங்க க்ஷேத்ரங்களின் அமைப்புகளை ப்ரதிஷ்டை செய்துள்ளது.



3. குருவாயூர் ஆலய திருப்பணிக்கு அடிக்கல் நாட்டி வைத்து திருப்பணியை தொடங்கி வைத்தது.

4. ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் கார்வேட் நகரில் ஸ்ரீமடத்தின் சமயச் சேவையின் ஓர் அங்கமாக இந்து சமய மன்றத்தை தோற்றுவித்தது.

5. புதுதில்லியில் உத்தரஸ்வாமிமலை முருகன் கோவில் கும்பாபிஷேகம் செய்து வைத்தது.

6. குருக்ஷேத்திரம் விஜயம் செய்து அங்கு ஆதிசங்கரரை ஸ்தாபித்தது.

7. காசியில் ஹனுமான்காட் பகுதியில் ஸ்ரீ காமகோடீஸ்வரர் ஆலயம் கட்டி முடித்து மஹாகும்பாபிஷேகம் செய்து வைத்தது.

8. முதன் முதலாக நேபாள விஜயத்தின் போது நேபாள எல்லையில் நினைவு வளைவு கட்டியுள்ளது.

9. கேரள மாநிலம் காலடியில் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் உத்தரவுப்படி ஆதிசங்கரர் கீர்த்தி ஸ்தம்பம் நிர்மாணித்து அதில் ஆதிசங்கரரின் வரலாற்றை பதித்தது.

10. காஞ்சியில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவிலில் விமானத்திற்கு தங்கத் தகடு வேய்ந்து மஹாகும்பாபிஷேகம் செய்வித்தது.

11. கேரள மாநிலம் திருச்சூர் ஸ்ரீ வடக்கு நாதர் கோவிலில் ஸ்ரீ ஆதிசங்கரர் சிலையை ப்ரதிஷ்டை செய்தது.

12. தஞ்சாவூரில் ஸ்ரீமடத்தின் மூலம் இராஜராஜசோழனுக்கு 253 கிராம் எடையில் தங்கக் கிரீடம் செய்து விழாவிற்கு வருகைதந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் மூலம் அச்சோழனின் திருவுருவச் சிலைக்கு அணிவித்து மகிழ்ந்தது.

13. ஜகத்குரு ஸ்ரீ மஹாஸ்வாமிகளுக்கு பல்வேறு இடங்களில் பலமுறை கனகாபிஷேகம் செய்ததோடு மட்டுமின்றி 1983-ம் வருடம் மே மாதம் 26-ம் தேதி காஞ்சிபுரம் ஸ்ரீமடத்திலேயே பெரிய அளவில் கனகாபிஷேகம் நடத்தியது.

14. காஞ்சிபுரம் ஏனாத்தூரில் பல்கலைக்கழக வளாகத்தில் 60 அடி உயரம் 200 டன் எடையில் ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்ட ஸ்ரீ ஆதிசங்கரர் உருவச் சிலையை உயரமான பீடத்தில் அமைத்து அப்போதைய ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மா அவர்கள் மூலம் திறந்து வைத்தது.

15. காஞ்சியில் உள்ள ஸ்ரீ வரதராஜஸ்வாமி திருக்கோயில் திருத்தேர் திருப்பணியை ரூபாய் 60 லட்சம் செலவில் திருப்பணி செய்து தேரோட்டம் தொடங்கி வைத்தது.

16. நந்தனாரின் பிறந்த ஊரான ஆதனூரில் அவருக்கு கோயில் எழுப்பியுள்ளது.

17. வங்காள தேசத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ டாகேஸ்வரி அம்மனை தரிசனம் செய்தது. இவ்விஜயத்திற்கு வங்காள தேச அரசு சிறப்பு வரவேற்பு அளித்து கௌரவித்தது.

18. காஞ்சியில் ஸ்ரீ காமாக்ஷி நித்ய அன்னதான கட்டளையை ஏற்படுத்தி புதிய உணவுக்கூடத்தில் நித்ய அன்னதானம் நடக்க ஏற்பாடு செய்தது.

19. ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி விஸ்வ மஹா வித்யாலயா என்ற பெயரில் ஒரு நிகர்நிலை பல்கலைக் கழகத்தை ஏனாத்தூரில் நிறுவியது. அவ்வளாகத்திலேயே ப்ரம்மாண்டமான சர்வதேச நூலகம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

20. ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஏனாத்தூரில் நிறுவியது. இதன் மூலம் காஞ்சிபுரம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

21. ஒடிசா மாநிலம் பூரியில் ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீ சைதன்யர், ஸ்ரீ ஜெயதேவர் ஆகிய முப்பெரும் மஹான்களுக்கும் ஒருசேர கோயில்கள் நிர்மாணித்து கும்பாபிஷேகம் நடத்தியது.

22. கேரள மாநிலத் தலைநகர் திருவனந்தபுரத்தில் ஸ்ரீ சந்த்ரசேகரே கீர்த்தி மண்டபம், பாதுகா மண்டபம் சிறுவர் அனாதை இல்லம், சங்கரா மருத்துவமனை, வேதபாடசாலை முதலியவைகளை ஏற்படுத்தியது.

23. ஸ்ரீ ஆதிசங்கரர் க்ஷேத்ராடனம் செய்த புண்ணியத் தலங்களிலும் ஜோதிர்லிங்க தலங்களிலும் அவரால் பாடப்பட்ட தலங்களிலும் ஸ்ரீ ஆதிசங்கரரின் மூர்த்தத்தையோ அல்லது பாதுகையோ ப்ரதிஷ்டை செய்து அவர் அருளியுள்ள ஸ்தோத்திரங்களை சலவைக் கற்களில் பதித்தது.

24. ஸ்ரீரங்கம் இராஜகோபுரத் திருப்பணியில் ஸ்ரீமடத்தின் மூலம் இராஜகோபுரத்தில் ஒர நிலையும், ஸ்ரீமடம் பக்தர்கள் மூலம் ஒரு நிலையும் நிர்மாணித்தது.

25. காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கச்சபேஸ்வரர் ஆலயத்தில் 108 இந்து ஏழை தம்பதியினருக்கு இலவச திருமணம் செய்து வைத்துள்ளார்.

26. காஞ்சிபுரத்தில் ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோவிலில் 101 ஏழை தம்பதியினருக்கு இலவச திருமணம் செய்து வைத்துள்ளார்.

27. காஞ்சிபுரத்தில் அருள்மிகு கச்சபேஸ்வரர் ஆலயத்தில் 107 இந்து ஹரிஜன தம்பதியினருக்கு இலவச திருமணம் நடத்தியுள்ளார்.

28. பொருளாதாரத் துறையில் பின்தங்கியவர் முன்னேற்றத்திற்காக அவர்களே தொழில் செய்து வளப்படுத்திக் கொள்ள துணை செய்யும் வகையில் தொழில் கருவிகளும் மாற்றுத் திறனாளிகளக்கான சைக்கிள் ரிக்ஷாக்களும், தள்ளுவண்டிகளும், தையல் இயந்திரங்களும், சலவைப் பெட்டிகளும் வருடந்தோறும் வழங்கி வருகிறார்.

29. சமுதாயத்திலுள்ள நலிவடைந்தோர் பயன்பெறும் வகையில் பல இடங்களில் இந்து மிஷன் மருத்துவமனை நிறுவி மருத்துவச் சேவை செய்து வருகிறார்.

30. ஏழைகளுக்கு திருமண காலத்தின்போது இலவசமாக திருமாங்கல்யம் (தாலி) வழங்கி மாங்கல்யதாரண திட்டத்தின் மூலம் திருமண உதவி வழங்கி வருகிறார்.

31. ஸ்ரீ ஆதிசங்கரரால் அருளப்பட்ட பல ஸ்தோத்திரங்களை தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் பொருளுரைகளுடன் பதிப்பித்தது.

32. நாடெங்கிலும் பல ஊர்களில் கோசாலைகள் நிறுவி அவற்றைப் பராமரிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

33. வடமொழியில் பட்டமேற்படிப்பு அல்லது தத்துவத்தில் மேற்படிப்பு மேற்கொண்டுள்ள பல மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கம் கொடுத்து வருகிறார்.

34. ஆலயங்களுக்கு பசுக்களை வழங்கும் அருமையான திட்டத்தின் கீழ் பல ஆலயங்களுக்கு பசுமாடுகளை வழங்கி அதனை பராமரித்து ஆலய அபிஷேகத்திற்கு பால்பெற்று பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்து வருகிறார்.

35. நாடெங்கிலும் பல்வேறு ஹரிஜன காலனிகளுக்குச் சென்று அங்குள்ள மக்கள் விருப்பத்திற்கேற்ப சிறிய கோயில்கள் அமைத்து பக்திமார்க்கத்தை வளர்த்து வருகிறார்.

36. காஞ்சிபுரத்தை அடுத்த வேடல் என்னுமிடத்தில் 60 அடி உயரத்தில் சிவன் சிலையும் அங்குள்ள கட்டிடத்தில் ஸ்ரீ மஹாஸ்வாமிகள், ஸ்ரீ பெரியவாள், ஸ்ரீ பாலபெரியவாள் ஆகியோருடைய திருவுருப் படங்கள் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் பயன்படுத்தப்படுத்திய பொருள்களும், ஸங்கீதத்தில் பயன்படுத்தப்டும் அரிய வாத்யக் கருவிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஹிந்து சமயத்தை விளக்கும் பல்வேறு வடிவங்களிலான காணொளி காட்சிகளும், இராமாயணம், மஹாபாரதம் போன்ற இதிகாசங்களை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் மின்னணு சாதனங்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

37. ஒவ்வொரு ஆண்டும் வியாஸ பூஜை சமயத்தில் வேத சதஸ், வேத சாஸ்திர சதஸ், வேத பாஷ்ய சதஸ், அத்வைத சதஸ் நடத்தி வருவது.

38. வேதங்களை முழுமையாக அத்யயனம் செய்த நலிவடைந்த வேதவிற்பன்னர்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கி வருகிறார்கள்.

39. ஆண்டு தோறும் வியாஸ பூஜையின்போது அகில இந்திய அளவில் அக்னிஹோத்ரிகள் சதஸும் நடத்தி அவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கி வருகின்றார்.

40. இயற்கை பேரழிவுகள் வந்தபோதெல்லாம் (சுனாமி, பூகம்பம்) தமிழ்நாடு, மஹாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு நேரில் சென்று பாதிக்கப்ட்டவர்களுக்கு ஆசி வழங்கி, பல லட்சம் மதிப்புள்ள துணிமணிகள், போர்வைகள், மருந்து மாத்திரைகள், உணவுப் பொருட்கள் ஆகியவை அளித்து அவர்கள் துயர் துடைத்துள்ளார்கள்.

41. ஸ்ரீ ஆதிசங்கருக்குப் பிறகு கைலாஷ் மானஸரோவர் சென்று வந்துள்ள ஒரே பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் மட்டுமே. அங்கிருந்து ஹைதராபாத் சென்று வ்யாஸ பூஜை சங்கல்பம் செய்து சாதுர்மாஸ்ய வ்ரதத்தை தொடர்ந்தார்.

42. குருகுல முறைப்படி வேத அத்யயனம் செய்யும் இளைஞர்களுக்கு உதவி செய்து வேத அத்யயனம் பூர்த்தி செய்தவர்களுக்கு தேர்வுகள் நடத்தி, சம்பாவனை வழங்கி வருகின்றார்கள்.

43. திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த இல்லங்களை ஸ்ரீமடம் மூலம் புதுப்பித்து அவ்விடங்களில் தொடர்ந்து நித்ய பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்படி இடங்களில் சங்கீத வகுப்புகள், நாட்டிய வகுப்புகள் ஆகியவை நடக்கவும் ஏற்பாடு செய்துள்ளார். வருடந்தோறும் மும்மூர்த்திகளுக்கு உற்சவங்கள் நடத்துவதோடு நலிவுற்ற இசைக் கலைஞர்களுக்கு பொருளுதவி புரிந்து ஆதரவு தந்து வருகின்றார்கள்.

44. காஞ்சி, சென்னை, மதுரை, திருப்பணித்துறை, பெங்களூரு மற்றும் நேபாளத்தில் அகில உலக இந்து சமய மாநாடு நடத்தியுள்ளார். இதில் இலங்கை, மலேசியா, பிஜி தீவு, இந்தோனிஷியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளிலிருந்து இரண்டாயிரம் பிரிதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

45. காஞ்சி ஸ்ரீமடத்தில் நாள்தோறும் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர பூஜை நடந்தேறிய பிறகு பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெறுகிறது.

46. உலக நன்மைக்காக அதிருத்ரம், சண்டிஹோமம், சுதர்ஸன ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம் முதலியவைகளை ஸ்ரீ மடத்தில் அவ்வப்போது நடத்தி வருகின்றார்கள்.

47. தொழு நோயாளியராக இருந்து சிறந்த கவிஞராகத் திகழ்ந்த இஸ்லாமியக் கவிஞர் முகமது அலி என்பவருக்கு தேவைப்பட்ட வசதிகள் செய்ததோடு ப்ரதி மாதம் மருத்துவச் செலவிற்கு பொருளுதவியும் செய்து வந்துள்ளார்கள்.

48. ஸ்ரீ மஹாபெரியவாளின் உத்தரவுக்கேற்ப ச்ருங்கேரி சென்று ஒரு முறை ஸ்ரீ சாரதம்பாள் அம்மனை தரிசித்து வந்த காஞ்சி பீடத்தின் ஒரே பீடாதிபதி இவரேயாவார்.

49. பன்னிரு ஜோதிர்லிங்க தலங்களுக்கும் நேரடியாகச் சென்று அங்கு ஸ்ரீ ஆதிசங்கரரின் ஸ்தோத்திரங்களை கல்வெட்டுகளில் பதித்துள்ளார்கள்.

50. ஜகத்குரு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் விழுப்புரத்தில் அவதரித்த ஸ்தலத்தை சங்கரமடமாக மாற்றி அவ்விடத்தில் பாதுகா ப்ரதிஷ்டை செய்து வேதபாடசாலை நடத்த ஏற்பாடு செய்துள்ளார்கள்.

51. காஷ்மீரம் முதல் கன்யாகுமரி வரை இவர் பாதம் படாத இடமே கிடையாது என்பதற்கு இந்திய முழுவதும் பாதயாத்திரையாக மூன்று முறை சென்ற ஒரே பீடாதிபதி இவரேயாவார்.

52. ஸ்ரீ ஆதிசங்கரர் தனாகர்ஷம் செய்துள்ள திருப்பதியில் அதன் நினைவாக திருமலையில் ஸ்வாமி புஷ்கரணிக்கு எதிரில் நான்கு சிஷ்யர்களுடன் கூடிய ஸ்ரீ ஆதிசங்கரர் விக்ரஹம் ப்ரதிஷ்டை செய்துள்ளது.

53. ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவத்தில் வேதம், பாஷ்யம், நியாயம், மிமாம்ஸை, வ்யாகரணம் முதலிய சாஸ்திரங்களில் தேர்வுகள் நடத்தி வித்வான்களுக்கு ஸம்பாவனைகள் வழங்கி கௌரவித்து வருகின்றார்கள்.

54. ஆலயத் திருப்பணிக்கு உதவிடும் வகையில் பாடல்பெற்ற ஸ்தலங்கள் மற்றும் சின்னஞ்சிறு கிராம மக்களின் வேண்டுகோளுக்கேற்ப பல்வேறு கோயில்களுக்கும் பொருளுதவி புரிவதோடு கும்பாபிஷேகத்திற்குத் தேவையான யந்திரங்கள் மற்றும் அஷ்டபந்தன மருந்துகள் இலவசமாக வழங்கி வருகின்றார்கள். மேலும் கிராமக் கோயில்களின் நித்யப்படி பூஜை நடத்த ஸ்ரீமடத்திலிருந்து பொருளுதவி வழங்கப்படுகிறது.

55. தமிழகத்திலிருந்து 108 ஓதுவார் மூர்த்திகளை காஞ்சிபுரத்திற்கு வரவழைத்து ருத்ராக்ஷ மாலை அணிவித்து சன்மானம் வழங்கி கௌரவித்துள்ளார்கள்.

56. ஆண்டுதோறும் ஸ்ரீமடத்தில் சமஷ்டி உபநயனங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதனால் பலர் பயனடைந்து வருகின்றனர்.


57. காஞ்சிபுரம் மற்றும் வேலூர் அருகிலுள்ள விரிஞ்சிபுரம், பம்மல், கோயமுத்தூர் போன்ற இடங்களில் உள்ள கண் மருத்துவமனைகள் மூலம் இலவசமாக கண் அறுவைசிகிச்சை செய்து மூக்குக் கண்ணாடிகள் பல வருடங்களாக வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள்.

58. பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களும், பொதுவாக வயது முதிர்ந்த ஏனையோரும் தன் முதுமைக்காலத்தில் ஆதரிப்பாரின்றி தவிக்கும் நிலையை தவிர்க்கும் பொருட்டு அவர்களை காக்கும் உயர்வான நோக்குடன் முதியோர் நல விடுதிகள், வ்ருத்தாஸ்ரம் கலவை, காளஹஸ்தி, நஸரத்பேட்டை, பண்டிதமேடு, திருவானைக்காவல், கருங்கண்ணி ஆகிய இடங்களில் ஏற்படுத்தி அதன் மூலம் நூற்றுக்கணக்கான பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். இவையனைத்தும் தர்மப்ரபோதனா டிரஸ்ட் மூலம் ஸ்ரீமடம் பக்தர்களின் உதவியுடன் நடைபெற்று வருகிறது.

59. சீர்காழியில் திருஞானசம்பந்தரின் அவதார ஸ்தலத்தை வாங்கி புதுப்பித்து அங்கு வேத சிவாகம திருமுறை பாடசாலை நடத்தி வருகிறார்கள். அங்கு ஆகம படிப்புடன் திருவாசகம், தேவாரம் ஆகியவையும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

60. ஸ்ரீமடத்தின் சார்பில் பல்வேறு டிரஸ்டுகள் ஏற்படுத்தி சமுதாயத்திற்கு பல உதவிகள் செய்து வருவது போல் ஸ்ரீ சங்கரா கல்வி அறக்கட்டளை ஏற்பத்தி தாம்பரம், ஊரப்பாக்கும், பாண்டிச்சேரி, கொடைக்கானல், சுரண்டை மற்றும் தமிழகத்தில் பல்வேறு குக்கிராமங்களில் ஸ்ரீ காஞ்சி சங்கரா வித்யாலயா பள்ளிகளை நிறுவி கிராம மக்களில் ஆங்கிலக் கல்வித்தரம் உயர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் மேற்படி பள்ளிகளை நடத்தி வருகிறார்கள். இதில் சிறப்பம்சமாக திருநெல்வேலி மாவட்டத்தில் திருமலாபுரம், கலந்தபனை என்னும் கிராமங்களில் கட்டணமின்றி முழுமையான இலவச கல்வியை வழங்கி வருகின்றார்கள்.

# சிஷ்யாஞ்சலி





# உதவியின் அருள்வடிவம் காஞ்சிப் பெரியவர்!

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
## ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

பாரத நாட்டில் பல்வேறு மஹான்கள் தோன்றி மக்களை நல்வழிப் படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய பெரியவர்கள் நல்ல உபதேசங்களை மிக எளிமையாக மக்களிடம் கொண்டு சேர்ப்பவர்கள். அனைத்து சமுதாய மக்களும் பயன்பெற வேண்டும் என்பதற்காகவே அல்லும் பகலும் உழைப்பவர்கள். அதற்காகவே பிரச்சார திட்டத்தை வகுத்தவர்கள் அடித்தட்டு மக்கள் வசிக்கும் கிராமங்களில் அவர்கள் ஆற்றிய அறப்பணிகள் அளப்பரியது.

புதிய கோயில்களை கட்டுவதைக் காட்டிலும், பழைய கோயில்களை புனரமைக்க வேண்டுமென்று கூறி அதற்காக பல்வேறு திட்டங்களை வகுத்தவர். கூட்டு தீப வழிபாடு, வாரவழிபாடு, தமிழ் ஆன்மீக வகுப்புகள், தேவாரம், தெய்வீகப் பாடல்கள் என்று பல்வேறு வழிகளிலும் அடித்தட்டு மக்களையும் ஆன்மீகம் சென்றடையும் வண்ணம் செய்தவர்கள்.

மெல்லிசைக் கலைஞர்களைக் கொண்டு பக்திப் பாடல்களை இசைக்கும் கச்சேரிகளை ஏற்பாடு செய்தும், நாட்டுப்புற கலைகளை ஆதரித்தும், அதன் மூலமாகவும் ஆன்மிகத்தை ஏழை எளிய மக்களும் எளிதில் அறியும் வண்ணம் செயல்புரிந்தவர்கள்.

தமிழகத்தின் இசைச் சிறப்பான நாதஸ்வரத்தைப் போற்றிப் புரிந்து ஆதரித்தவர்கள். ஆன்மிக சமுதாயத்தில், எளிய மக்களும்கூட தாங்களும் அதன் அங்கமாகத் திகழ்கிறோம் என்பதை உணரும் வண்ணம் பல்வேறு ஊக்கங்களையும் ஆக்கங்களையும் அளித்தவர்கள். அவர்தம் சமய, சமுதாய, கலாச்சார பணிகள் இதற்கான அடித்தளத்தை இட்டு வைத்தன.

கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலவர்கள் என்று அறிவுசால் பெருமக்களைப் புரிந்தவர்கள். இதைப் போன்று மரபுசாரா கல்வியாளர்கள், தொழிலாளர்கள், கைத்தொழில் புரிவோர்கள், நாட்டுப்புறக்கலைஞர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் சமயம் உரித்தானது என்பதைச் சுட்டிக் காட்டிக் கட்டிக்காத்தவர்கள். அது மட்டுமின்றி அனைவரிடமும் ஒற்றுமை உணர்வு மேலோங்க அன்பை வலுப்படுத்த வழிவகை செய்தவர்கள். ஒருவருக்கொருவர் அன்யோன்யமான அன்பும் அரவணைக்கும் போக்கும் வளர வழி காட்டினார்கள்.

வடமாநிலங்களிலும் குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களிலும்கூட ஆன்மிகப் பயிரை செழிப்பித்து ஆன்மிகத்தில் தேசிய பார்வையை வலுப்படுத்தினார்கள். வெவ்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களும் பொதுவான அம்சங்களில் இணைந்து செயல்பட்டு உயர்வதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டவர்கள்.

## கிராமக் கோயில்களில் திருப்பணி

பழமையான கிராமப்புற கோயில்களில் திருப்பணிகளைச் செய்து, கிராமப்புற மக்களிடையே ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்கள். நூதனமான கல்வி முறையின் நடுவே கலாச்சார முறையான கல்வியையும், பிணைத்து கல்வியின் மூலமும் கலாச்சார விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்கள். ஒருங்கிணைந்த கல்விமுறைத் திட்டத்திற்காகப் பாடுபட்டவர்கள். பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் போன்ற மழலையர் கல்வி முதல் முதுநிலைக் கல்வி வரை பயிலகல்வி நிறுவனங்களை நிறுவி நடத்தி வருபவர்கள்.

நமது நாட்டின் பண்டைய வைத்திய முறையான ஆயுர்வேதத்திற்கு தமிழகத்தில் தனிக் கல்லூரி கண்டவர்கள். தேச பக்தியும் தெய்வ பக்தியும் இணைந்து வளர ஊக்குவிப்பவர்கள். பெயரிடல், காதுகுத்துதல், திருமணம் போன்ற புனிதச் சடங்குகளை நடத்த புரோகிதர்களுக்கு ஆதரவளித்துக் காத்தவர்கள். நாவிதர்களுக்கு நன்னிழல் அளித்தவர்கள்.

## 10 ஆயிரம் கி.மீ. ஆன்மிகப் பயணம்

பாரத தேசம் முழுமையும் தனது பாதமலர் சார்த்தி பாதயாத்திரை புரிந்தவர்கள். கிட்டத்தட்ட 10 ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு மேலாக பொன்னடி சார்த்தியவர்கள் நம்முடைய பெரியவர்கள். 1980 வரையிலான காலகட்டத்தில் ஏறத்தாழ எல்லா மாநிலங்களுக்கும் விஜயம் செய்து ஆன்மிகப் பணிசெய்தவர்கள். நேபாள நாட்டிற்கும் விஜயம் செய்து அங்கும் ஆன்மிக வளர்ச்சிக்கு வழிகோலியவர்கள். நேபாள நாட்டில் கோயில் போன்றதொரு முகப்புத் தோரண வாயிலை அமைத்து நேபாளம் ஆன்மிக பூமி என்பதை பறை சாற்றியவர்கள்.

வங்கிகளின் மூலமாகக் கடனுதவி வழங்கச் செய்து தொழிலாளர்களை ஊக்கு வித்தவர்கள். கடனைத் திருப்பி அளித்தோருக்கு பாராட்டுவிழாவை நடத்தி வழிகாட்டியவர்கள். தையல் பயிற்சி முதலியன வழங்கி அனைவரும் வேலைவாய்ப்புப் பெறும் வண்ணம் செயல்பட்டவர்கள். சிறு, குறுந்தொழில்கள் வளரும் வண்ணம் ஊக்குவித்து நலிந்த தொழில்களையும் தொழிலாளர்களையும் மீட்டெடுத்தவர்கள். இந்து

சமய கலைவிழா மற்றும் உலக இந்துசமய மாநாடு ஆகியவற்றை நிகழ்த்தியவர்கள். அன்பும் அறனும் என்று கூறும் குறள்மொழிக்கொப்ப அன்பையும் அறனையும் பெருகச் செய்தவர்கள்.

''பாரத தேசம்
முழுமையும் தனது
பாதமலர் சார்த்தி
பாதயாத்திரை புரிந்தவர்கள்.
கிட்டத்தட்ட 10 ஆயிரம்
கிலோமீட்டர்களுக்கு
மேலாகத் தன் பொன்னடி
சார்த்தியவர்கள்
நம்முடைய பெரியவர்கள்ல ''

## தேசம் முழுவதும் கண் ஒளி

மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்புக் கல்வி நிலையங்களை ஏற்படுத்தி திறன்களை பெருக்கியவர்கள். இந்தியாவன் பல மாநிலங்களில் கண் மருத்துவ நிலையங்களை திறந்து தேசிய கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியவர்கள். இவற்றின் மூலம் பல லட்சக்கணக்கான மக்கள் பயன்பெற்றமை வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியதாகும். பல்வேறு சம்பிரதாயங்கள், சமயங்கள் நிறைந்த பாரதத்தின் பன்முகத் தன்மையை தன்மையாக அங்கீகரித்தவர்கள்.

பஜனைப் பாடல்கள் பாட ஊக்குவித்ததோடு இசைக்கருவிகள், தாளக் கருவிகளை வழங்கி கிராமங்களிலும் ஆன்மிக ஒலி (நாமசங்கீர்த்தனம்) பரவும், கோயில்களில் துபமேற்றச் செய்து அருள் ஒளி பரவவும் காரணமாய் அமைந்தவர்கள். ஒளிந்து கிடந்த பண்பாட்டுணர்வை மிளிரச் செய்தவர்கள். மக்களின் மனப்போக்கில் நிந்தனையை மாற்றிச் சிந்தனை விதைத்தவர்கள்.

பதவியை உதவியோடு சேர்த்தவர்கள். சதுர்வேதி மங்கலங்கள் அமைந்த தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் வேத சாஸ்திர, சங்கீத, புராண, ஆகம, சில்ப கலா நிறுவனங்களை அமைத்தவர்கள். திரிவேணி சங்கமத்தில் மக்கள் தொண்டாற்றப் பரிசல்களை ஓட்டுவோர்க்கு பாராட்டிப் பரிசளித்தவர்கள்.



கிராமங்களிலுள்ள வைணவ திவ்விய தேசங்களிலும் வழிபாடுகள் சிறப்புற நிகழ உதவி செய்தவர்கள். கும்பாபிஷேகங்களை ஒட்டி பல கோயில்களுக்கு யந்திர தகடுகளும் அஷ்டபந்தன மருந்தும் வழங்கி வருபவர்கள்.

ஊர்கூடி தேர் இழுத்தல் என்ற பழமொழிக்கிணங்க மக்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் தேர்த்திருவிழாக்களை நடத்த மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் போன்ற பல்வேறு வகைத் தேர்கள் பல கோயில்களுக்கும் செய்தளித்தவர் காஞ்சி காமாக்ஷி அம்மனுக்குத் தங்க விமானமும் தங்கத் தேரும் செய்தளித்தவர்கள். சிதம்பரம் அடுத்த ஆதனூரில் நந்தனாருக்கும் மணிமண்டபம் அமைத்தவர்கள். கல்வராயன் மலையில் மாரியம்மனுக்கு ஆலயம் எழுப்பித்து மலைவாழ் மக்களின் முன்னேற்றத்தில் உறுதி கொண்டவர்கள். மானசரோவரில் குருபூர்ணிமையில் வியாச பூஜையைச் செய்தவர்கள். பங்களாதேஷில் டாகேஸ்வரி கோயிலில முகமன் கூறுவதைப் போல முகப்பை அமைத்தவர்கள். அது இன்றளவும் சங்கராசார்யர் வாயில் என்றே வழங்கப்பெறுகிறது.

தீயினால் பாதிக்கப்பட்ட தீவுமக்கள் குறைதீர பேருதவி செய்தவர்கள். வெளிநாடுகளிலும் பல்வேறு ஆன்மிகப் பணிகளைச் செய்து ஆன்மிக உணர்வு மறையாதிருக்க ஆவன செய்தவர்கள். இயற்கைச் சீற்றம் போன்ற பேரிடர் வேளைகளில் மக்களுக்கு விரைவாக விரிவாக நேரிடையாக உதவிப் பொருட்களை வழங்கியவர்கள்.

இப்படி உலகோர் வாழ்விலும் ஆன்மிகத்திலும் உயர்வடைய அயர்வடையாது பல்வேறு பணிகளை ஆற்றியவரே நமது பெரியவர்கள். உழைப்பு, உற்சாகம் மற்றும் உதவியின் மறுவடிவமாத் திகழ்ந்தவர்களே நமது பெரியவர்கள். அவரைப் போலவே பொதுசேவையில் தம்மை ஈடுபடுத்தி உய்ய வேண்டும்.

ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளிய

## ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் நவ மணி மாலை

பஜேஹம் பகவத்பாதம் பாரதீய சிகாமணிம்
அத்வைதமைத்ரீ ஸத்பாவசேதனாயா; ப்ரபோதகம் || 1

அஷ்டஷஷ்டிதமாசார்யம் வந்தே சங்கர ரூபிணம்
சந்த்ரசேகரயோகீந்த்ரம் யோகலிங்கப்ரபூஜகம்|| 2

வரேண்யம் வரதம் சாந்தம் வதான்யம் சந்த்ரசேகரம்
வாக்மினம் வாக்யதம் வந்த்யம் விசிஷ்டாசாரபாலகம்|| 3

தேவே தேஹே ச தேசே ச பக்த்யாரோக்ய ஸுகப்ரதம்
புதபாமரஸேவ்யம் தம் ஸ்ரீஜயேந்த்ரம் நமாம்யஹம்|| 4

வ்ருத்தவ்ருத்திப்ரவ்ருத்தீனாம் காரணம் கரணம் ப்ரபும்
குரும் நௌமி நதாசேஷனந்தனம் நயகோவிதம் || 5

ப்ரஜாவிசார தர்மேஷு நேதாரம் நிபுணம் நிதிம்
வந்தேஹம் சங்கராசார்யம் ஸ்ரீஜயேந்தஸரஸ்வதீம் || 6

ஸிதாஸிதஸரித்ரத்னமஜ்ஜனம் மந்த்ரவித்தமம்
தானசிகாமணிம் நௌமி நிச்சிந்தம் நீதிகோகிலம்|| 7

ஸரஸ்வதீகர்பரத்னம் ஸுவர்ணம் ஸாஹஸப்ரியம்
லக்ஷ்மீவத்ஸம் லோலஹாஸம் நௌமி தம் தீனவத்ஸலம் ||8

கதிம் பாரததேசஸ்ய மதிம் பாரதஜீவினாம்
வந்தே யதிம் ஸாதகானாம் பதிமத்வைததர்சினாம்|| 9

# स्री विजयेन्द्र शरश्वती श्वामिना विरचित

# स्री जयेन्द्र सरस्वतीस्वामि नवकम्

बजेहम् भकवत्पादम् भारतीयसिखामणिम्
अत्वैतमैत्रीसत्भावचेतनाया: प्रबोदकम् || 1

अष्टषष्ठितमाअचार्यम् वन्दे शन्कररूपिणम्
चन्द्रशेखरयोगीन्द्रम् य़ोगलिन्गप्रपूजकम् || 2

वरेण्यम् वरदम् शान्तम् वदान्यम् चन्द्रशेखरम्
वाग्मिनम् वाग्यतम् वन्द्यम् विशिषटाचारपालकम् || 3

देवे देहे च देशे च भक्तियारोक्यसुकप्रदम्
बुदपापरसेव्यम् तम् स्रीजयेन्द्रम् नमाम्यहम् || 4

व्रुद्दव्रुतिप्रव्रुतीनाम् कारणम् करणम् प्रबुम्
गुरुम् नौमि नतशेशनन्दनम् नयकोविदम् || 5

प्रजाविचारधर्मेषु नेतारम् निपुणम् निधिम्
वन्देहम् शन्कराचार्यम् स्री जयेन्द्रसरस्वतीम् || 6

सितासितसरितरत्नमज्जनम् मन्त्रवित्तमम्
दानचिन्तामणिम् नौमि निश्चिन्तम् नीतिकोकिलम्|| 7

सरस्वतीगर्भरत्नम् सुवर्णम् साहसप्रियम्
लक्ष्मीवत्सम् लोलहासम् नौमि तम् दीनवत्सलम्|| 8

गतिम् भारतदेशस्य मतिम् भारतजीविनाम्
वन्दे यतिम् साधकानाम् पतिम् अद्वैतदर्शिनाम् || 9

# ச்ரத்தாஞ்சலி









**Narendra Modi** @narendramodi
Prime Minister of India

Deeply anguished by the passing away of Acharya of Sri Kanchi Kamakoti Peetam Jagadguru Pujyashri Jayendra Saraswathi Shankaracharya. He will live on in the hearts and minds of lakhs of devotees due to his exemplary service and noblest thoughts. Om Shanti to the departed soul.



**Narendra Modi** @narendramodi
Prime Minister of India

Jagadguru Pujyashri Jayendra Saraswathi Shankaracharya was at the forefront of innumerable community service initiatives. He nurtured institutions which transformed the lives of the poor and downtrodden

प्रधान मंत्री
Prime Minister

**Letter of Condolence**

I am deeply anguished by the passing away of the Acharya of Sri Kanchi Kamakoti Peetham, Jagadguru Pujyashri Jayendra Saraswathi Shankaracharya. His demise has left a deep void in the hearts of lakhs of devotees around the globe.

I had the good fortune of meeting Jagadguru Pujyashri Jayendra Saraswathi Shankaracharya on several occasions and each time, I experienced divine energy in his presence. His noble thoughts and teachings enriched lives of many, inspiring them to be compassionate and helpful towards fellow beings.

He enhanced the centuries old tradition of following the path of renunciation and working for the poor and downtrodden, and filled it with renewed vigour. His community initiatives transformed lives and helped strengthen the social fabric of our society, removing divisions and barriers.

Under his guidance, the Peetham expanded its scope in the realm of community service. His efforts empowered the most vulnerable sections of the society to lead a life of dignity and financial independence.

His demise has come as an irreparable loss to the nation. May we all find comfort in the fact that his legacy will live on in our hearts and minds, even as his immortal soul has attained Siddhi.

I extend my sincere condolences to the lakhs of devotees in this hour of grief.

Om Shanti.

Yours sincerely,

(Narendra Modi)

New Delhi
28 February, 2018

Schizophrenia Research Foundation

WHO Collaborating Centre for Mental Health Research & Training

5 மார்ச் 2018

Founder : Dr M. Sarada Menon - President : Mr R. Seshasayee - Director : Dr R. Thara

மேலாளர்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

காஞ்சிபுரம்.

அன்புடையீர்,

வணக்கம்.

ஆதி சங்கரரால் நிறுவப்பட்ட தொன்மையான மடங்களில் ஒன்றான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின், வைத பீடாதிபதியாக இகழ்ந்த, ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள், சித்தியடைந்த செய்தியறிந்து, எங்கள் நிறுவனம், மிகுந்த துயருற்றது.

பல ஆண்டுகளாக அவர் ஆற்றிவந்த ஆன்மிக மற்றும் சமூகப் பணிகள் காரணமாக பலன் அடைந்தோர் ஏராளம். எங்கள் நிறுவனமான 'ஸ்கார்ஃப்' பின் பணிகளுக்கு அவர் வழங்கிய ஆசியையும் அனுக்கிரஹத்தையும் இத்தருணத்தில் நினைவுகூற விரும்புகிறோம்.

அவர் மறைந்துவிட்டாலும், அவரது அளப்பரிய பணிகள், அவரது பெயரை என்றென்றும் சொல்லிக்கொண்டிருக்கும் என்பது நிச்சயம்.

நன்றி.

அன்புடன்

டாக்டர் சாரதா மேனன்

Mental Health Centre, R/7A, North Main Road, Anna Nagar (West Extn.), Chennai 600 101
Tel. 044 - 2615 1073,2615 3971 • Fax: 044 - 2615 3971 • E-mail: info@scarfindia.org • www.scarfindia.org
( Registered under Tamil Nadu Societies Registration Act - 1975, Reg.No. 24/84 )

அனுப்புதல்:
பெண்ணாடம் பிராமணர் சங்கம்,
தமிழ்நாடு பிராமணர் சங்க கிளை நிர்வாகம்,
பெண்ணாடம்,
திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம் - 606105.

பெறுதல்:
ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ காசார்ய வர்ய
ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜேயேந்திர சரஸ்வதி சுவாமிகள்,
சங்கரமடம்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம் - 631502.

ஜகத்குரு சுவாமிகள் அவர்களுக்கு,

பெண்ணாடம் பிராமணர் சங்க நிர்வாகிகள் பணிவுடன் எழுதிக் கொண்ட மடல், நமது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் அவர்கள் ஹேவிளம்பி வருஷம் மாசிமாதம் 16-ம் நாள் (28.02.2018) புதன் கிழமை சுக்லபக்ஷம் திரயோதிசி அன்று [redacted] மரணம் நடைபெற்றதை அறிந்து, மிகத்துயரம் அடைந்தோம், அவரது ஆன்மா சாந்தி அடைய எங்கள் சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
தலைவர் மற்றும் உறுப்பினர்கள்,
பெண்ணாடம் பிராமணர் சங்கம்,
பெண்ணாடம் - 606105.

S.மணிகண்டன் சர்மா,
தலைவர் பிராமணர் சங்கம்,
பெண்ணாடம்.
Cell: 7373417774.

தலைவர் / செயலாளர் / பொருளாளர்
தமிழ்நாடு பிராமணர் சங்கம்
பெண்ணாடம் கிளை
கடலூர் மாவட்டம்

नेपाली राजदूतावास
**EMBASSY OF NEPAL**
Barakhamba Road, New Delhi-110001
Tel. : 23327361/23329218 Fax : 23326857

1 MARCH 2018

SHRI KANCHI KAMAKOTHI PEETHAM
SALAI STREET, ENNAIKARAN,
KANCHIPURAM, TAMIL NADU

HEARTFELT CONDOLENCES!

I AM DEEPLY SADDENED TO LEARN THAT HIS HOLINESS ACHARYA OF KANCHI KAMAKOTHI PEETHAM, THE MOST REVERED JAGATGURU JAYENDRA SARASWATI SHANKARACHARYA PASSED AWAY YESTERDAY.

HIS HOLINESS'S DEMISE HAS LEFT MILLIONS OF DEVOTEES AROUND THE WORLD STUNNED AND AGGRIEVED.

AT THIS HOUR OF MOURNING, I EXPRESS HEARTFELT CONDOLENCES TO SHRI KANCHI KAMAKOTHI PEETHAM FAMILY AND TO ALL THE FOLLOWERS OF HIS HOLINESS.

THE JAGATGURU WILL BE REMEMBERED BY GENERATIONS OF HUMANITY TO COME FOR HIS GREAT SPIRITUAL MESSAGES AS WELL AS HIS PRICELESS DEEDS ON SOCIAL REFORMS AND WELFARE SERVICES.

MAY THE DEPARTED SOUL REST IN PEACE!
OM SHAANTI!

BHARAT KUMAR REGMI
ACTING AMBASSADOR





ஜெயேந்திரர் மரணம்:

மதுரை ஆதீனம் இரங்கல்



ஜெயேந்திரர் மறைவு சைவ சமயத்திற்கு பேரிழப்பு : மதுரை ஆதீனம் இரங்கல்



சங்கரமடத்தின் சமய, சமூதாய பணிகளுக்கு மதுரை ஆதீனம் முழு ஒத்துழைப்பு வழங்கும்!



மறைவு செய்தியால் அதிர்ச்சி அடைந்தேன்:

ஜெயேந்திரா விட்டுச் சென்ற பணிகளை விஜயேந்திரா நிறைவேற்ற வேண்டும்!

மதுரை ஆதீனம் உருக்கம்!!

தமிழ் என்று சொல்லு! தலை நிமிர்ந்து நில்லு!!

**தமிழக தலித் கட்சி (T.D.K.)**

தலைமை அலுவலகம் :
டாக்டர் அம்பேத்கர் பவன், நெ.294, 16வது பிளாக்,
சத்தியமூர்த்தி நகர், வியாசர்பாடி, சென்னை—600 039.
☎ : 044 - 26732491, 98411 71414

**T.D.K. தலித்குடிமகன்**
இயக்குநர் – நடத்துனர்

நாள் : 28.02.2018
புதன்கிழமை

பெறுநர்,

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின்,
70 ஆவது மடாதிபதி,
ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமி அவர்கள்,
காஞ்சிபுரம்.

**இரங்கல் செய்தி**

அன்புள்ள சுவாமி ஜி அவர்களுக்கு வணக்கம்

தங்களின் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 69ஆவது மடாதிபதி காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இன்று பிப்ரவரி 28ம் தேதி காலை உடல்நலக் குறைவால் காலமான் என்ற செய்தி அறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

ஆன்மீக பணிகளோடு, சமூக பணிகளிலும் அக்கறை காட்டிய காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை இழந்து வாடும் தங்களுக்கும், அவரது ஆன்மீக பக்தர்களுக்கும், காஞ்சி சங்கர மட நிர்வாகிகளுக்கும் திருக்குலத்தோர் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், கனத்த இதயத்தோடும், கண்ணீரோடும் தெரிவித்து கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள
T.D.K. தலித்குடிமகன்
தலைவர்
தமிழக தலித் கட்சி



# திராவிடர் கழகம்

தலைமை நிலையம்: பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007.
தமிழ்நாடு, இந்தியா. தொலைபேசி : 91-44-26618161,62,63 தொலைநகலி : 91-44-26618866
மின் அஞ்சல் : dkheadquarters@gmail.com இணையதளம் : www.dravidarkazhagam.org

நிறுவனத் தலைவர்
தந்தை பெரியார்

தலைவர்
கி.வீரமணி, எம்.ஏ.,பி.எல்.

28.2.2018

## காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் மறைவுக்கு
## நமது இரங்கல்

காஞ்சி சங்கரமடத்து மடாதிபதியான ஜெயேந்திரசரஸ்வதி அவர்கள் இன்று காலை (28.2.2018) தனது 83ஆவது வயதில் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம்.

அவருடனும், அவரது மடத்துடனும் திராவிடர் கழகத்திற்கு எவ்வளவு மலையளவு கருத்து கொள்கை வேறுபாடுகள் இருப்பினும் - திராவிடர் கழகம் அவரது மறைவிற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

28.2.2018

கி.வீரமணி
தலைவர், திராவிடர் கழகம்

Colonel Ashok Kini tweeted this wonderful pic along with a small note :

**#DrAPJKalam** made the saint **#JayendraSaraswathi** sit on his chair. When asked, why was this honour, he said "I want this chair to get blessed and whoever sits on this chair, in future, must get blessings of this saint." It was a blessing to receive him in the **#RashtrapatiBhavan** with Dr Kalam 🙏



Dr. A.P.J. Abdul Kalam wanted his seat blessed to perpetuity. There was only one who could do that in his opinion, and that was the Jagadguru Jayendra Periava.

**P.B. ACHARYA**
**Governor of Nagaland**

**RAJ BHAVAN**
**Kohima - 797001**

March 1, 2018

**His Holiness Shankara Vijayendra Saraswati,**

**Sadar Pranam,**

I am saddened to hear of the demise of His Holiness Jagadguru Shri Jayendra Saraswathi Shankaracharya, head of Pontiff of the Kanchi Kamakoti Peetham on 28th February 2018.

Jayendra Saraswathi was the head of the mutt established in the 5th Century AD and under his guidance, the mutt started several schools and hospitals. Jayendra Saraswathi ensured that the Mutt involved itself in various social activities and the mutt today runs several schools, eye clinics and hospitals.

His contribution for the welfare of mankind and in promoting spirituality will always be an inspiration for others. He was seen as an *avataar* of **Shiva Shankara** and promulgated concept of **Santana Dharma.**

I convey my heartfelt condolences and may the departed soul rest in peace.

**Craving your Ashirvadams,**

(P.B. ACHARYA) 1/3/18

**H.H. Shankara Vijayendra Saraswati.**
Kanchi Kamakoti Pitadipudi,
Kanchi Kamakoti Mutt,
Kanchipuram
**Tamil Nadu.**

Tel : +91-370-2242881 (O) +91-370-2242898 (Fax) Email : rajbhavankohima@nic.in

செ. கு. எண்: 035 நாள்: 28.02.2018

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 28.2.2018

காஞ்சி மடத்தின் 69–வது மடாதிபதியான காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் இன்று (28.2.2018) காலை உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் 1954–ஆம் ஆண்டு காஞ்சி சங்கர மடத்தின் இளைய மடாதிபதியாக நியமிக்கப்பட்டார். பின்னர் 1994–ஆம் ஆண்டு காஞ்சி சங்கர மடத்தின் 69–வது மடாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டு, காஞ்சி பெரியவர் அவர்களுக்கு பின் மடத்தினை சிறப்பாக வழிநடத்தினார். காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் ஆன்மீக பணிகளோடு, சமூக முன்னேற்றப் பணிகளிலும் அக்கறை காட்டியவர்.

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களை இழந்து வாடும் அவரது ஆன்மீக பக்தர்களுக்கும், காஞ்சி சங்கர மடத்தின் நிர்வாகிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

---

शिवराज सिंह चौहान
मुख्यमंत्री
मध्यप्रदेश

सं.क्र. 105, 28 फरवरी, 2018

परमपूज्य स्वामी विजयेन्द्र सरस्वती जी,

कांची कामकोटि पीठ के शंकराचार्य परमपूज्य स्वामी जयेन्द्र सरस्वतीजी ब्रम्हलीन हो गए। सनातनधर्मी श्रद्धालुओं और सम्पूर्ण भारत के लिए यह दुःखद क्षण है। कांची कामकोटि पीठ के 69वें मठप्रमुख के रूप में स्वामी जयेन्द्र सरस्वती ने भारत की आध्यात्मिक विरासत को समृद्ध करते हुए समाज में सनातन धर्म और संस्कृति की गरिमा का उद्घोष कर लोकमानस की चेतना को विस्तार दिया।

स्वामी जी के दिव्य दर्शन और जीवन ने संपूर्ण हिन्दू समाज को प्रभावित किया। उच्च आध्यात्मिक चेतना से साक्षात्कार करने का मार्ग दिखाने वाले स्वामी जी भारतीय संस्कृति के रक्षक होने के साथ ही आध्यात्मिक समृद्धि के जीवंत प्रतीक भी थे।

भारत की आध्यात्मिक और सांस्कृतिक आभा स्वामी जयेन्द्र सरस्वती जैसे दिव्य ऊर्जावान युगपुरुषों के पुण्य प्रताप से सदा आलोकित रहेगी। उनके तप से समाज वर्षों तक लाभान्वित होता रहेगा।

मध्यप्रदेश प्रदेश की धर्मप्राण जनता और मेरी ओर से स्वामी जी की पुण्य स्मृति को शत्-शत् नमन।

सादर।

(शिवराज सिंह चौहान)

प्रति,

परमपूज्य स्वामी विजयेन्द्र सरस्वती जी,
70वें जगद्गुरु कांची कामकोटि पीठम्,
श्रीमठम् संस्थानम्,
नं.-1, सालई स्ट्रीट,
कांचीपुरम्-631502, तमिलनाडु (भारत)

6, श्यामला हिल्स, भोपाल - 462 002

**Kantetii Satyanarayan Raaju**
Former Minister
**Member of Legislative Council**
BJP Floor Leader A.P. Legislative Council

28/02/2018

TO THE LOTUS FEET OF SRI VIJAYENDRA SARASWATI SHANKARACHARYA.

PAY MY RESPECT TO KANCHI PEETADHIPATI SRI JAYENDRA SARASWATI SHANKARACHARYA WHO ATTAINED "MOKSHA".

HIS CONTRIBUTION FOR THE WELFARE OF MANKIND AND PROMOTING SPIRITUALITY WILL ALWAYS BE AN INSPIRATION FOR OTHERS.

OM SHANTI TO THE DEPARTED SOUL.

Raaju
K SATYANARAYANA RAAJU

8-2-438/1, Banjara Hills, Hyderabad - 500 034. Cell : 98490 45675, Ph : 040-23356666, Fax : 23357777, 040-23358888
Vill. Ardhavaram, Ganapavaram Mandal. W.G. Dist. - 534197. Phone : 08816 - 223456.